வள்ளுவர் பண்ணை

# சாத்தன் கதைகள்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சாத்தன் கதைகள்

புலவர் கா. கோவிந்தன், எம்.ஏ.

வள்ளுவர் பண்ணை
19, 2வது மெயின் ரோடு சி.ஐ.டி. நகர், சென்னை-35

புதிய பதிப்பு : 1973

பதிப்புரிமையுடையது

விலை ரூபாய் 3-00

அச்சிட்டோர் :
தி இண்டியா பிரிண்டிங் ஒர்க்ஸ்,
சென்னை-4

# பதிப்புரை

**மணிமேகலை** ஒப்பற்ற காப்பிய நூல் ஆகும். மணிமேகலையின் ஆசிரியரான **சீத்தலைச் சாத்தனார்** புலனழுக்கற்ற சான்றோர் ஆவர். அவர், தம் நூலுள் சில சுவைமிக்க கதைகளையும் கூறுகின்றார். அவற்றைத் தமக்கே யுரிய செந்தமிழ் நடையில் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் இந் நூலில் எழுதியுள்ளார். கருத்துச் செழுமையும் செந் தமிழ் இனிமையும் கொண்ட இக்கதைகள் தமிழ் உலகிற்கு நல்விருந்தாகும் என்று நம்புகின்றோம்.

**பதிப்பகத்தார்.**

# உள்ளே...

1. ஆதிரை
2. ஆபுத்திரன்
3. இலக்குமி
4. காயசண்டிகை
5. சுதமதி
6. விசாகை

# 1. ஆதிரை

பொன்வளம் சிறந்தது பழந்தமிழ்நாடு; அப் பொன் வளம் அந்நாட்டின் நன்செய்கள் அளித்த செந்நெல் வளத்தால் வந்தது. அந் நன்செய்கள் நிறைவளம் தர நற்றுணை புரிந்தன அந்நாட்டில் பெருக்கெடுத்தோடிய பேராறுகள்.

அப்பேராறுகளில் தலைசிறந்தது காவிரி. தான் பாயும் தஞ்சைப் பெருநாடு, அந்நெல் வளத்தை நிறையப்பெற்று, தென்னாட்டு நெற்களஞ்சியம் என்ற சிறப்புப் பெயரைப் பெறச் செய்த பெருஞ் செயலால் அக் காவிரி, பொன்னி எனும் புகழ்சால் பெயர்பெற்றுத் திகழ்ந்தது.

அக்காவிரியாற்று நீர் கடல்நீரோடு கலக்குமிடத்தில் அமைந்த பேரூரே புகார். பொதுவாக, ஆறுகள் கடலோடு கலக்குமிடங்கள் எல்லாம் புகார் எனவே அழைக்கப்பெறும். என்றாலும், காவிரி கடலோடு கலக்குமிடம் ஒன்றையே புகார் என்ற பெயரால் பழந்தமிழ் மக்கள் அழைத்தனர். புகார், பழைய தமிழ்நாட்டின் முதுபெரும் நகர்கள் அனைத்தினும் தனிமிகப் பழமை உடையது. பிற நகர்களுக்கில்லாப் பல சிறப்புக்களை அது பெற்றிருந்தது. உலகின் பல்வேறு பேரூர்களிலும் வாழும் மக்கள் வறுமையுற்றுப்போன தம் வாழிடம் விட்டு வந்து வாழ்ந்து, வாழ்வுபெறும் விழுச்சிறப்பு புகார் நகர்க்கு உண்டே அல்லது, புகார் நகரத்து மக்கள் வாழிடம் தேடி வேற்றூர் செல்லும் இழி நிலை என்றும் உண்டானதில்லை எனப் பாராட்டியுள்ளனர் புலவர் பெருமக்கள். "சோழன்

மூதூர்ப் பேராச் சிறப்பின் புகார்,” “பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய, பொதுவறு சிறப்பின் புகார்” என்பன அப்பாராட்டுரைகளுள் ஒரு சில.

பொன்வளமும் பொருள்வளமும் அளித்த புகழோடு பிறிதொரு பெரும்புகழையும் புகார் பெற்றிருந்தது; புகார் நகரத்து நங்கையர் கற்பிற் சிறந்த காரிகையராய் வாழ்ந்தனர். கற்புக் கடவுள் எனக் கன்னியர் பலராலும் ஒருசேரப் புகழப்பெறும் கண்ணகி பிறந்த ஊர் அப்புகார் நகரே ஆகும். அதுமட்டுமன்று. அக் கண்ணகியாகிலும் பாராட்டி வழிபடத்தக்க பத்தினிப் பெண்டிர் பலரும் அப் புகார் நகரில் வாழ்ந்தோரே ஆவர்.

தன் வாழ்வு களங்கமற்றது, கற்புநெறியோடு பொருந்தியது என்பதற்குச் சான்று பகர, தான் மணங் கொண்ட இடத்தில் இருந்த வன்னிமரத்தையும், அதை யடுத்திருந்த கோயிலையும் தன் தமர்முன் வரவழைத்துக் காட்டினாள் ஒரு காரிகை.

காவிரிக்கரையில் மணற்பாவை பண்ணி ஆடிக் கொண்டிருக்குங்கால், உடன் ஆடும் ஆய மகளிர், ‘ஏடி! இம்மணற்பாவையே உன் மணாளனும்’ என வுரைத்த நகைமொழியை உண்மையெனக் கொண்டு அப்பாவையைத் தன் கணவனாகவே கருதித், தன் கணவனும் அப்பாவையை ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போகாவாறு காக்கும் கடமையுணர்வால் வீட்டு நினைவையும் இழந்து, அதை அணைத்துக் கிடந்தாள் ஓர் ஆரணங்கு.

காவிரிப் புதுவெள்ளத்தில் புகுந்தாடிய தன் கண வனைக் காவிரிவெள்ளம் ஈர்த்துக்கொண்டு போய்

விட்டதாக, 'என் கணவனைக் காணீரோ? என் கணவனைத் தாரீரோ?' எனக் கூவி அழுதவாறே காவிரிக் கரை நெடுகக் கால்கடுக்கத் தேடி அலைந்து இறுதியில் கடல் நீர், கணவனைக் காட்டிக்கரைக் கண் கொணர்ந்து தரப்பெற்று மகிழ்ந்தாள் கரிகாலன் மகள் ஆதிமந்தி.

வாணிக வளம் விரும்பும் கணவனைக் கலம் ஊர்ந்து கடல் கடந்து செல்லவிடுத்து, தனித்திருந்து வாழ்தல் தன்னால் இயலாது எனும் உணர்வால், அவன் வருங் காறும் உணர்வற்றிருக்கும் நிலையை விரும்பி, அவ்வாறே வழிவிடக் கடற்கரைக்குச் சென்றவள், அவன் கலம் மறைந்ததும் கல்லுருவாகிப் போன கணவன் பொருளீட்டி வரும்வரை அக்கடற்கரை மணலிலேயே கிடந்து, அவன் கலம் கரை ஏறியதும் கல்லுருவம் நீத்துக் காரிகை வடிவாகிக் கணவனை அடைந்து களிப்புற்றாள் ஒருத்தி.

உடனாடிக்கொண்டிருந்த குழந்தைகள் இரண்டனுள் மாற்றாள் குழவி ஒரு கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துபோக, வாழ்ந்தால் இரண்டும் வாழ்தல் வேண்டும், இறந்தால் இரண்டுமே இறத்தல் வேண்டும்; ஒன்று இறக்க, ஒன்று உயிர் கொண்டு வாழ்தல்கூடாது; குழந்தையை இழந்து மாற்றாள் மனத்துயர் உறுங்கால், தான் மட்டும் தன் குழந்தையோடு கொஞ்சி மகிழ்வது கூடாது; அவளேபோல் தானும் தன் குழந்தையை இழந்து துயர் உறுதல் வேண்டும் எனும் உயர்வுள்ளம் கொண்டு, மாற்றாள் குழவி வீழ்ந்திருந்த கிணற்றிலேயே தன் குழந்தையையும் இட்டுக் கொன்று, பின்னர்த் தன் உயர்வுள்ளம் கண்டு உவந்த இறையருளால், இரு குழந்தைகளையும் உயிருடன் பெற்று உயர்வுற்றாள் ஒருத்தி.

கணவன் பொருள் தேடிப் போயிருக்கும் பொழுது, அயலான் ஒருவன், தன் முகவழகு கண்டு மயங்கித் தன்னையே விழித்து விழித்து நோக்கியதைப்பொருது, 'கணவன் கண்டு மகிழவேண்டியது என் அழகு, அதைப் பிறர் காண்பதால் எனக்குக் களங்க முண்டாவதல்லது களிப்பு உண்டாகாது. ஆகவே, போன கணவன் பொருளீட்டி மீளும் வரை என் முகம் குரங்கு முகமாகி, அழகு குன்றுமாக, என வேண்டி, அவ்வாறே குரங்கு முகம் பெற்று வாழ்ந்து கணவன் வந்து வீடடைந்ததும், மீண்டும் தன் அழகு முகம் பெற்று அக மகிழ்ந்தாள் ஒரு பெண்ணினல்லாள்.

தன்னை ஈன்ற தாய், அவள் இளமைப் பருவத்தில், அவளொத்த இளம் மகளிரோடு ஆடிக் கொண்டிருக்குங் கால், அவருள் ஒருத்தியோடு 'எனக்கு மகள் பிறக்க, உனக்கு மகன் பிறந்தால் என் மகள் உன் மகன் மனைவியாவள்' என உரைத்து உறுதியளித்தாள் என்பதைப் பிறர் உரைக்க உணர்ந்து, அது, அவள் தன் அறியாப் பருவத்தில் உரைத்த அறியாமை உடையது எனக் கொண்டு தள்ளிவிடாது, அச்செய்தி கேட்ட அன்றே, தன்னை மணக்கோலம் செய்துகொண்டு, தன் தாயின் ஆடற்பருவத்துத் தோழி அளித்த இளைஞனைத் தேடி அடைந்து மணந்து மாண்புற்ருள் ஒரு மங்கை நல்லாள். கண்ணகி போற்றிய கற்புடை மகளிர் எழுவர் இவர். இவரையும், இவர்போலும் கற்புடை மகளிரையும் பெற்ற பொற்புடையது புகார்ப் பெருநகர்.

புகழ்மிக்க அப்புகார் நகர்க்குப் பெருமை அளிக்கும் பெருங்குலத்தவருள் வணிகர் குலத்தவர் தலை சிறந்து விளங்கினர். அவ்வணிகர் குலத்தவர் வாணிக வாழ்வால் வளம் பல பெற்று வாழ்ந்தனர். கொள்வதை மிகை

கொளாது, கொடுப்பதைக் குறைகொடாது, தமவும் பிறவும் ஒப்ப மதிக்கும் வாணிக அறம் பிறழாது வாழ்ந்தமையால் அவ் வணிகர் மன்னரும் மருளும் மாநிதி பெற்று மாண்புற்றனர். அவர் வாழ்ந்த புகார் நகரும் வற்ருப் பெருநிதி பெற்றுப் பெருமையுற்றது. அத்தகைய வணிகர் குலத்தில் ஆதிரை எனும் ஓர் ஆரணங்கு பிறந்து வளர்ந்து பேதைப் பருவம் கடந்து பெதும்பைப் பருவம் பெற்று விளங்கினுள். மகள் மணப்பருவம் பெற்றுவிட்டமை கண்ட அவள் பெற்ருேர், தம்மைப் போலும் பெருவணிகர் குடியைச் சேர்ந்த சாதுவன் எனும் இளைஞனைத் தேர்ந்து மணம் முடித்து வைத்தனர்.

ஆதிரை இல்லறத் தலைவி ஆனுள். அறவோர்க்கு அளித்தல்' அந்தணர் ஓம்பல், துறவோரை வழி படல், செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருத்தல் முதலாம் இல்லறக் கடமைகளை உள்ளன்போடு மேற்கொண்டு வாழ்ந்தாள். சாதுவனும் அவள் அழகும், அவளாற்றும் இல்லறச் சிறப்பும் அளிக்கும் இன்பத்தை ஆர நுகர்ந்து மகிழ்ந்திருந்தான். அவர் வாழ்க்கைத் தோணி, இன்பமென்னும் கடலில் மெல்ல இயங்கிக்கொண்டிருந்தது.

சில ஆண்டுகள் கழிந்தன. அவர் வாழ்க்கைக் கடலில் புயல் எழத் தொடங்கிற்று. புகழ்ச் செல்வமும் பொருட்செல்வமும் மலிந்த புகார் நகருக்குப் பழிசூட்டும் பண்புகெட்ட வாழ்க்கையுடையார் சிலரும் அப்புகார் நகரில் வாழ்ந்திருந்தனர். புகார் நகரத்துச் செல்வர்கள் வற்ரு வளம் பெற்று வாழ்ந்தமையால் உழைப்பின் பயனை மறந்தனர். உழைப்பின் அருமையினை உணரமாட்டாமையால் அவ்வுழைப்பின் பயனும் செல்வத்தின் சிறப்பினையும் அவர்கள் உணர்ந்திலர். அதனுல் அவர் கைப்பட்ட செல்வம், ஈதல், புகழ் என்பன போலும் பயனுடையவற்

திற்கு மட்டும் பயன்படுத்தப்பெருது, வட்டு, சூது, பரத்தையர் உறவு போலும் பழிமிகு செயல்களுக்காகவும் பயன்படுத்தப் பெற்றது. இவ்வாறு பாடுபடாது பெரிது பெற்ற பொருளைப் பாழ்படுத்தும் பண்பிழந்தார் சிலரும் புகார் நகரில் வாழ்ந்திருந்தனர்.

ஆதிரை கணவன் சாதுவனுக்கு அத்தீயோர் தொடர்பு எவ்வாருே உண்டாகிவிட்டது. அதனுல் அவன் மனையை மறந்தான்; மனைவி தரும் வாழ்வை மறந்தான். வட்டரங்கும், சூதாடு கழகமும்' பரத்தையர் சேரியுமே வாழிடமாகக் கொண்டான். வட்டிலும், சூதிலும் அவன் வான் பொருள் அழிந்தது. பரத்தையர்க்கு வாரி வாரிக் கொடுத்ததால் மாடென்றும் மனையென்றும், பொன்னென்றும் பொருளென்றும், மணியென்றும் முத்தென்றும் வகை வகையாகக் குவிந்து கிடந்த அவன் செல்வம் சீரழிந்தது. பழிமிகு இவ்வாழ்வில், அவன் வாழுளின் ஒரு பகுதி பாழுற்றது.

வளம் பெருக்கும் வாணிக வாழ்க்கையைக் கைவிட்டமையாலும், கைப்பொருள் அழிக்கும் கணிகையர் தொடர்பு போன்றனவற்றைக் கைக் கொண்டமையாலும், மலைபோற் குவிந்து கிடந்த அவன் மாநிதி மறைந்து விட்டது. சாதுவன் வறியனுன். வாரி வாரி வழங்கிய அவன் கை வற்றிவிட்டது. அதை உணர்ந்து கொண்டாள் அவன் உளங்கவர்ந்த கணிகை. அவள் கருத்தெல்லாம் அவன் தரும் செல்வத்திலல்லது அவ னிடத்தில் இல்லையாதலின், அவன் செல்வம் சீரழிந்து விட்டது என்பதை அறிந்துகொண்டதும், அவனுக்கு வாயிலை அடைத்துவிட்டாள். கணிகை வீட்டுக் கதவு அடைக்கப்பட்டுவிட்டதைக் கண்டு கொண்ட பின்னரே, சாதுவனுக்கு அறிவு தெளிந்தது. தன் ஒழுக்கக்கேட்டை

நினைத்து உள்ளம் நொந்தான். தன் பிழையை உணர்ந்தான். பொருள் அழிந்த புன்மையை நினைந்து நாணிப்புலம்பினான். இழந்த பொருளை ஈட்டிப்பண்டே போற் பெருவாழ்வு வாழ விரும்பினான். இரவு பகல் எப்போதும் அவ்வேட்கையே அவன் உள்ளத்தில் தலை தூக்கி நின்றது. அதனால் அப் பெருவாழ்வளிக்கும் பொருட் செல்வத்தை ஈட்டும் வழிவகைகளையே எப்போதும் எண்ணிக்கொண்டிருந்தான். அந்நிலையில் அந்நகர் வணிகர் சிலர், பொருளீட்டும் பணிமேற்கொண்டு பாய்மரக்கலம் ஊர்ந்து புறநாடு செல்கின்றனர் என்ற செய்தியைக் கேட்டான். உடனே அவருடன் அயல்நாடு செல்ல அவனும் துணிந்தான்.

கடையரும் விரும்பாக்கணிகையர் தொடர்பில் தன்னை மறந்திருந்ததையும் தாங்கிக்கொண்டு உயிர் வாழ்ந்திருந்தவளாதலின், ஆதிரை, பொருளீட்டும் பெரும்பணி மேற் கொண்டு புறநாடு போகும் அவன் பிரிவைப் பொறுத்துக் கொண்டு போக விடை தந்தாள். பரத்தையர்ப் பிரிவின் போது, கணவன் புறநகர்க்கு அணித்தாக ஓர் ஊர் வாழ்வினனாகவும், அப்பிரிவைப் பொறுக்கமாட்டாது புலம்பிய ஆதிரை, அவன், கடல் கடந்து, கண்ணால் காணமாட்டா, கருத்திற்கும் எட்டாத் தொலை நாடுகட்குச் செல்லத் துணிந்தான் எனக் கேட்டும், அப்பிரிவு பாராட்டத்தக்க பணி மேற்கொண்டு செல்லும் பிரிவாதல் எண்ணிச் சித்தம் கலங்காது, செல்ல மகிழ்வோடு விடை தந்தாள். பரத்தையர்ப் பிரிவால் உடைமைக்கும் ஒழுக்கத்திற்கும் மட்டுமே கேடு, உயிர்க்கு எக்கேடும் இல்லை என அறிந்தும் அப்பிரிவைத் தாங்க மாட்டாது தளர்ந்த ஆதிரை, கடல் கடந்து செல்பவர், கேடுறாது வந்து கரை சேர்வர் என்பதற்கு உறுதியில்லை; இடை வழியில்

உயிரிழந்து போவதும் உண்டாம் என அறிந்தும்' இப் பிரிவு தன் இல்லற வாழ்வை நல்லற வாழ்வாக்கும் எனும் நம்பிக்கையால், அவன் பிரிவை மகிழ்ச்சியோடு வரவேற்று அவனை வழியனுப்பினான்.

சாதுவன் புறப்பட்டுவிட்டான்; கடலோட வல்ல பெரியகலம், புகார்நகர்த் துறையை விட்டு புறப்பட்டு விட்டது. கடல் நீரைக் கிழித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது கலம். கலம் ஊர்ந்து செல்லும் வணிகப் பெருங்குடி மக்கள், செல்லும் நாட்டிற் செய்யவிருக்கும் வாணிக வகைகளையும், அவற்றால் தாம் அடையவிருக் கும் வளப் பெருக்கத்தையும் எண்ணிப் பார்க்கும் இன்ப நினைவில் தம்மை மறந்து மகிழ்ந்து கிடந்தனர். இந்நிலை யிற் சில நாட்கள் சென்றன. அவர் இன்ப நினைவில் திடுமென இடிவீழ்ந்து விட்டது.

ஒருநாள் இரவு; கண்ணொளி புகாக் காரிருள் சூழ்ந்த நடுயாமம்; கலம் செலுத்தும் மீகாமன் தவிர ஏனையோர் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர்; கடலிற் புயல் உருவாகத் தொடங்கிற்று; விரைவில் அது கொடிய புயலாக மாறி வீசத் தொடங்கிவிட்டது. கலம் அப்புய லிடையே அகப் பட்டுக் கொண்டது. எவ்வளவு முயன் றும், நாவாயைக் காப்பது மீகாமனால் இயலாது போயிற்று. புயலை எதிர்த்து நிற்கமாட்டாது பாய்மரம் முறிந்து வீழ்ந்தது. சுழன்று சுழன்று வீசும் சூறாவளிக்குத் தாங்கமாட்டாது பாய்கள் கிழிந்து பாழாயின. கலம் சுக்கு நூறாய் உடைந்து உருக்குலைந்து போயிற்று. கலத்தில் வந்தோர் கொந்தளிக்கும் கடல் நீரில் வீழ்ந்து கலங் கினர். கடல் நீருள் மூழ்கிக் கணக் கற்றோர் உயிரிழந்த னர். கலத்தின் ஒடிந்தஉறுப்புக்களுள் தம் கையிற்பட்ட

சிலவற்றைப் பற்றுக் கோடாய்க் கொண்டு கடலை நீந்திக் கடப்பதில் முனைந்தனர் சிலர்.

ஆதிரை கணவன் சாதுவன் கையில், ஆதிரை ஆற்றிய அறப்பயனால் ஒடிந்த கொடிமரத்தின் ஒரு துண்டு அகப்பட்டது. அதை அவன் இறுகத் தழுவிக் கொண்டான். மலைபோல் எழுந்து மடுப்போல் அடங்கும் அலைகளிடையே அகப்பட்டு எல்லையில்லா அல்லல் அடைந்தான். இறுதியில், அவனை அவன் அணைத்துக் கிடந்த கொடிமரத் துண்டோடு, அவ்வாழ் கடலிடையே யிருந்த ஒரு மலைத் தீவின் கரையிற் கொண்டு சென்று ஒதுக்கிற்று அக்கொடுங் கடல். கடல் நீரிலும், கொடிய புயற் காற்றிடையிலும் அகப்பட்டு அலைக்கழிக்கப்பெற்று உற்ற நோய் மிகுதியால், சாதுவன், அத்தீவின் கரைக் கண் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மரத்தின் நிழலில், உடல் சோர்ந்து, உணர்விழந்து வீழ்ந்து உறங்கிவிட்டான்.

கடல் வாணிகம் கருதிக் கலம் ஊர்ந்து சென்ற கணவன், வற்ரு வளம்பெற்று வந்து சேர்வன் என்ற இன்ப நினைவால், மனமகிழ்ச்சியால் நிறைந்து வழிய, சாதுவனை எதிர் நோக்கியிருந்தாள் ஆதிரை! ஒரு நாள் ஒருசிலர் ஓடிவந்து, 'ஆதிரை! உன் கணவனோடு கலம் ஏறிச் சென்றவர் ஊர் வந்து சேர்ந்து விட்டனர்' என்று அறிவித்து அகன்றனர். கடலில் வீழ்ந்தவருள், சாது வனைப் போலவே வேறு சிலரும் உயிர் பிழைத்தனர் அவருட் சிலர், எங்கெங்கோ அலைந்து இறுதியில் ஊர் வந்துசேர்ந்தனர். அஃதறிந்த ஆதிரை விரைந்து அவர்கள் பாற்சென்று தன் கணவனைக் குறித்து உசாவினாள்.

கலம் கவிழ்ந்தது இரவில்; அதுவும் எல்லாரும் உறங்கிக் கிடந்த இடையாமத்தி லாதலாலும், கடலில்

வீழ்ந்தார் ஒவ்வொருவரும் தத்தம் உயிரைக் காத்துக் கொள்வதிலேயே கருத்துடையராகி விட்டமையாலும், கவிழ்ந்த கலத்தின் உறுப்புக்களிற் கையிற் கிடைத்ததைப் பற்றிக் கரைசேர்ந்த சிலரும் ஒரே துறையிற் கரையேருது, அலைகள் ஈர்த்துச் சென்றவாறெல்லாம் இழுப்புண்டு, அவை கொண்டு சேர்த்த இடங்களிற் கரையேறினராத லாலும், கடலில், வீழ்ந்தவருள், கடல் நீரில் ஆழ்ந்து உயிரிழந்து போனவர் எத்துணைவர்? அவர்கள் யார் யார்? உயிர் பிழைத்து ஊர் சேர்ந்தவர் எத்துணைவர்? அவர்கள் யார் யார்? என்பதை அறியாராயினர். அதனல் ஒவ்வொருவரும் தம்மையொழிந்த ஏனையோரெல்லாம் கடல் நீர்க்குப் பலியாயினர் என்றே நம்பினராதலின், அவர்கள் கலம் கவிழ்ந்ததை அறிவித்து, "ஆதிரை உன் கணவன் ஆழ்கடல் நீரில் அழுந்தி அழிந்து விட்டான்" என்று கூறி, அவள் நிலைக்கு இரங்கினர்.

கணவன் கடல்வாய்ப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டாள் ஆதிரை; அவ்வளவே; அவள் அகம் ஆருத் துயரக் கடலில் ஆழ்ந்துவிட்டது. ஆதிரை, தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெரியோள். கணவனேடு கூடி இல்லறக் கடனற்றித் தன்னல் இயன்ற அளவு விறவுயிரோம்பும் பேரற வாழ்வை விரும்பியவள் அவள். அவ்வாழ்வு என்றேனும் வாய்க்கும் என்ற நம்பிக்கையி ஞலேயே, அவள் அதுகாறும் உயிர் வாழ்ந்திருந்தாள். அதனலேயே, கணவன் தனக்கு வாழ்வு அளிக்கத் தவறிப் பரத்தையர்க்கு வாழ்வு அளித்து வாழ்ந்த இழி வாழ்வையும் தாங்கிக்கொண்டாள். அதனலேயே "கணிகையர் தொடர்பைக் கைவிட்டு என்னை வந்தடைந்த கணவனை ஓர் இமைப்பொழுதும் பிரியவிடேன்; பிரிவின்றி வாழ்ந்து பேரின்பம் காண்பேன்" என நினையாது

பொருள் தேட அவனைப் புறநாடு போக்கினன். இவ்வாறு இல்லறக் கடமைகளில் ஆழ்ந்திருந்தமையால், அதற்கு வாய்ப்பு இன்றி, வங்கம் ஊர்ந்து சென்றவன் வழியின் மாண்டுவிட்டான்; இல்லற வாழ்வளிக்க இனி அவன் வாரான்—என அறிந்ததும், அவள் தன்னுயிரை இழக்கத் துணிந்தாள்.

கற்புநெறி நிற்கும் காரிகையரின் கடமை எது என்பதை அறிந்தவள் ஆதிரை. காதலன் இறந்தான் எனக் கேட்ட அக்கணமே உயிரிழப்பவர் தலையாய கற்பு நெறி நிற்பவராவர். உயிர் தானே நீங்காதாயின், பொய்கை நீரிற் புகுந்து ஆடுவார் போல அழல்வாய்ப் பட்டு ஆருயிர் இழப்பவர் இடையாய கற்புநெறி நிற்பவராவர். அத்துணைத் துணிவற்ற உள்ளம் உடையவர், இப்பிறவியில் இடையற்றுப்போன உடனுறை வாழ்வு வரும் பிறவியிலாவது வந்து வாய்க்கவேண்டி, பழஞ் சோற்றைப் பச்சிலையில் பிழிந்துஇட்டு, அதில் வேளை யிலைக் குழம்பிட்டுப் பிசைந்து, எள்ளுத் துவையல் துணை யாக உண்டு, பருக்கைக் கற்கள் பரப்பிய இடத்திலும் பாயின்றி உறங்கிக் கைம்மை நோன்பு மேற்கொண்டு காலமெல்லாம் வருந்திக் கிடப்பர். அத்தகையார் கடை யாய கற்புநெறி நிற்பவராவர், கற்புநெறி நிற்பாரின் இத் தகுதியும் திறமும் அறிந்த ஆதிரை, கணவன் இறந்தான் என்ற செய்தி கேட்டதும், தன் உயிர் தானே பிரிந்து போகாமை அறிந்து வருந்தினள். வாழ்வில் இன்பம் வாய்க்காது போயினும் அத்தலையாய தகுதியும் வாய்த் திலதே என எண்ணி இடருற்றாள். தானே வாய்க்க வேண்டிய அத்தலையாய தகுதி வாய்க்காமை கண்டு வருந்திய ஆதிரை, இடைப்பட்ட நிலையாவது வாய்த்தல் வேண்டினள். அதை வருவித்துக்கொள்ளத் துணிந்து

முன்வந்தது அவள் உள்ளம். ஊர்ப் பெரியோர்களை ஒன்று கூட்டித் தன் உள்ள விருப்பத்தை அறிவித்தாள். தீப்பாய்ந்து உயிர் துறக்கத் துணைபுரியுமாறு அவர்களை வேண்டிக்கொண்டாள். ஆதிரையின் உள்ளத்துறுதி உணர்ந்த அவ்வான்றோர் அவள் வேண்டுகோட்கு இணங்கினர்.

சுடுகாட்டிற் காய்ந்துலர்ந்த காட்டுவிறகினால் ஓர் ஈமப்படுக்கை அமைக்கப்பட்டது. தீயும் மூட்டப்பெற்றது. முற்ற உலர்ந்த விறகாதலின், தீ செந் நாக்கெழ ஓங்கி எரிந்தது. ஆதிரை தண்ணெனக் குளிர்ந்த நீரில் மூழ்கி எழுந்தாள். புத்தாடை உடுத்துக் கொண்டாள். மணம் வீசும் சந்தனக் குழம்பைவாரிப் பூசிக் கொண்டாள். ஈரம் புலராக் கூந்தலில் இனிய மணமிகு மலர்களைச் சூடிக் கொண்டாள். இக் கோலத்தோடு இடுகாட்டை அடைந்தாள். ஈமத்தீயை மும்முறை வலம் வந்தாள். ''அங்கியங் கடவுளே! என் கணவன் சென்ற உலகிற்கு என்னையுங் கொண்டு சென்று, அவனோடு ஒன்றுபடுத்துவாயாக'' என வேண்டிக் கொண்டாள். ஆங்குக் குழுமியிருந்த புகார் நகரத்துப் பெருங்குடி மக்கள், அக்காட்சியைக் கண்டு கண்ணீர் சொரிந்து கலங்கினர். ஆதிரை அகமகிழ்வோடு தீப்பாய்ந்து விட்டாள்.

ஆதிரையின் அழகுத் திருவுருவம் வெந்து சாம்பலாகும் காட்சியைக் காணமாட்டாது, கூடியிருந்தோர் கண்களை மூடிக்கொண்டனர். ஆனால் அவர் எதிர் நோக்கியவாறு எதுவும் நடைபெறவில்லை. ஓங்கி எழுந்த தீ ஆதிரை உட்புகுந்ததும் அடங்கி அவிந்தது. உடுத்த புத்தாடை பற்றி எரியவில்லை. பூசிய சந்தனம் புலரவில்லை. சூடிய மாலை வாடவில்லை. புத்தாடை பொன்னிறம் பெற்றுப் பொலிந்தது. சந்தனம் தண்ணெனக் குளிர்ந்து

காட்டிற்று. மலர் இனிதாக மணம் வீசிற்று. செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்போல், ஆதிரை, அவ் வீமத்தீயின் இடையே காட்சி அளித்தாள். அக்காட்சி யைக் கண்ணுற்ற அவ்வூர் மக்கள் களிப்புக் கடலில் ஆழ்ந்தனர். கனலையும் அடங்கப் பண்ணும் அவள் கற்பின் பெருமை கண்டு வியந்து போற்றினர்.

அந்நிலை கண்டு ஆதிரை அகமகிழ்ந்தாளல்லள். மாருகத் தீப்பாய்ந்தும் தன் உயிர் போகாமை கண்டு கலங்கினாள். 'தீயும் தீண்டாத் தீவினையாட்டி ஆயி னேனே. அந்தோ! யான்யாது செய்வேன்?' என வாய் விட்டுப் புலம்பி வருந்தினாள். அப்போது, "ஆதிரை! உன் அரும் பெறற் கணவன் சாதுவன் சாவுற்றிலன். கலம் கவிழக் கடலில் வீழ்ந்த அவன், கடல் நீர்க்குப் பலியாயி னல்லன். அலைகடல், அவனை, ஓர் தீவிற் கொண்டு சேர்த் துளது. நாகர் எனும் இனத்தவர் வாழும் அம்மலைநாடு சேர்ந்த அவன், ஆங்கு நலமே உள்ளான். ஆங்குப் பல்லாண்டு இருப்பதும் செய்யான். சின்னாட்களுக்கெல் லாம் சந்திரதத்தன் எனும் வணிகனோடு வந்து சேர்வான். வருந்தாது வீடடைக" என்ற ஒரு குரல், வானிடை ஒலித்தது.

வானத்தில் எழுந்த அவ்வுரையைக் கேட்டு ஆதிரை அகம் மகிழ்ந்தாள். அவள் மனத்துயர் மறைந்தது, பொய்கை நீரிற் புகுந்தாடி எழுவாள்போல், ஈமத்தீயை விட்டு வெளியேறினாள். கடல் வாய்ப்பட்டும் கணவன் உயிர் நீத்திலன் என்பது மட்டுமன்று; அவன் வான் பொரு ளாடு வந்தும் சேர்வான் என்ற செய்தி, சிந்தை யில் மகிழ்ச்சியை நிரப்ப அம்மன நிறைவோடு மனை புகுந் தாள் கண்மணி அனைய கணவன் கலம் ஊர்ந்து கடிதின் வந் அடைவான் வேண்டி, அறம்பல மேற் கொண்டு

ஆ.—

வாழ்ந்தாள். ஆதிரையின் கற்பின் திறம் கண்டு, புகார் நகரத்துப் பெண்களும் ஆண்களும் அவளை வியந்து பாராட்டி, வந்து வணங்கி வழிபட்டுச் செல்லத் தலைப் பட்டனர். இவ்வாறு கற்புடை மகளிரும் போற்றும் கவின் மிக்க வாழ்வினளாய், ஆதிரை கணவனை எதிர்நோக்கி வாழ்ந்திருந்தாள்.

கரை சேர்ந்த சாதுவன் கடலில் அலைப்புண்ட களைப்பு மிகுதியால், கரைக்கண் இருந்த ஒரு மரத்தடியில் மெய்ம்மறந்து கண்ணயர்ந்திருந்தான். அவன் கரை சேர்ந்த அத்தீவு, நாகர் எனும் இனத்தவர் வாழும் ஒரு மலைநாடாம். அவர்கள் நாகரிகம் அறியாதவர். ஆடை அணியும் அறிவு பெருதவர்: பொன்னும் நவமணியும் போலும் பொருள்களின் பெருமை அறியாதவர், ஆரமும் அகிலும் தரும் மணத்தை நுகரும் மதியிலாதவர்; கிடைத்த இறைச்சி எதுவே யாயினும், அது மாவின் இறைச்சியே யாயினும், மக்கள் இறைச்சியேயாயினும், உண்டு உயிரோம்பும் ஒரு காட்டினத்தவர். கள் குடிப்பது, காட்டு விலங்குகள், கலங் கவிழ வந்து கரையேறும் மக்கள் இவர்களைக் கொன்றுண்பது, இளம் பெண்களோடு கூடி வாழ்வது; இவையல்லாது வேறு வாழ்வறியாதவர். கடற்கரை மணலில் வீழ்ந்து கிடக்கும் சாதுவனை அவர்கள் பார்த்துவிட்டனர். உண்ண நல்ல உணவு கிடைத்தது என எண்ணி மகிழ்ந்தனர். அறுசுவை நுகரும் ஆர்வம் மிக, அவ்வுணவைச் சுற்றி அமர்ந்திருப் பார் போல் அவர்கள் அவனைச் சுற்றி நின்று "தனியே வந்துளான்; மிகவும் வருந்தியுள்ளான்; நனிமிக இரங்கத் தக்கான்; நமக்கு நல்ல உணவாவான்" எனக் கூறி ஆரவாரித்தனர்.

நாகர் எழுப்பிய ஆரவாரத்தால், சாதுவன் உறக்கம் கலைந்துவிட்டது; நல்ல காலம்; சாதுவன் அவர்கள் மொழியை அறிந்திருந்தான். அதனால் அவர் உரைத்த வற்றை உணர்ந்தான்; அவன் உள்ளம் அச்சத்தில் ஆழ்ந்தது. ஆயினும் அதை அவர் அறியாவாறு அடக்கிக்கொண்டு, அவர் விரும்பும் வண்ணம், அவர் மொழியில் அவரோடு உரையாடினன். தங்களைத் தவிர, வேறு நாகரிக மக்கள் எவரும் தங்கள் மொழியைப் பேசக் கேட்டறியாத அந்நாகர், சாதுவன், தங்களோடு தங்கள் மொழியில் உரையாடக் கேட்கவே, அவனைக்கொன்றுண்ணும் கருத்தைக் கைவிட்டு, அவன்பால் பெருமதிப்புக் கொண்டனர். அகன்று நின்று அவனைத் தொழுதனர். "எம்மொழியறிந்து பேசவல்ல பெரியோனே! நாங்கள் நவில்வதைக் கேளாய். அகநாட்டில் உள்ள மலைமீது, எங்கள் குருமகன் உள்ளான். அவன்பால் வந்தருள் புரிக" என வேண்டிக்கொண்டனர். சாதுவனும், அவர் வேண்டுகோளை ஏற்று அவரைப் பின்தொடர்ந்து சென்றான்.

மதுக்குடங்களும், முடைநாற்றமும், எலும்புக்குவியலும் எங்கும் விரவிக்கிடக்க, அவற்றின் இடையே அமைந்ததொரு மேடைமீது, கரடி தன் காதற்பிணவோடு கூடியிருப்பதுபோல், உடலெல்லாம் மயிர்கள் அடர்ந்திருக்க, மனைவியோடு வீற்றிருந்த நாகர் தலைவன் முன் சாதுவனைக் கொண்டு நிறுத்தினர். சாதுவன் நாகர் குருமகனைக் கண்டான்; சிறிது நாழிகைக்கெல்லாம், நயமாகப் பேசி அவனையும் தன்வயத்தனாக்கிக்கொண்டான்; நாகர் தலைவன் சாதுவன்பால் அன்பு கொண்டுவிட்டான். அவனை அழைத்து அருகில் அமர்த்திக்கொண்டான். "நீ யார்? இங்கு வந்த காரணம் யாது?" என அன்போடு வினவினன். சாதுவன் நிகழ்ந்ததைக்

கூறினான். உடனே நாகர் தலைவன், நாகர் சிலரை விளித்து, "நம்பி, கடலில் அகப்பட்டுக் கேடுற்று வந்துள்ளான். இவன் வருத்தம் தீர, மதுவும் மாவின் இறைச்சியும் தாருங்கள்; இவன் மனம் மகிழும் வண்ணம் வேண்டுவன பிறவும் குறைவின்றிச் செய்யுங்கள்" எனப் பணித்தான். நாகர் தலைவன் கூறியதைக் கேட்ட சாதுவன், காதுகளைக் கைகளால் பொத்திக்கொண்டு, "அந்தோ! கேட்கத் தகாதன கேட்டுவிட்டேன். அன்ப நீ தரும் எதையும் யான் வேண்டேன்" என வெறுத்துக் கூறினான்.

சாதுவன் மதுவையும் மங்கையையும் மறுப்பது கண்ட குருமகன் கடுஞ்சினம் கொண்டான். "என்னால் அளிக்கக் கூடியனவற்றுள் தலையாயவற்றை அளிக்க முன் வந்தேன்; இவன் மறுத்துவிட்டான். நான் அளிக்க மறுப்பவரும் இவ்வுலகில் உளரோ! மறுத்தவர் உயிர் பிழைத்தலும் உண்டோ" என எண்ணிச் சினந்தது அவன் உள்ளம். உடனே சாதுவனைப் பார்த்து, "புதியோனே! கள்ளும் கன்னியரும் இன்றி உயிர் வாழ்தல் உண்டோ? அவற்றினும் உயர்ந்தது உலகத்தில் உளதோ? உளதெனின் அதை நாங்கள் அடைதல் வேண்டும்; எமக்கு அதை இன்றே காட்டு" என வெகுண்டு கூறினான்.

அறியாமை காரணமாகச் சினம் கொள்ளும் நாகர் தலைவன் நிலைகண்டு, சாதுவன் அவன்பால் இரக்கம் கொண்டான். அவனுக்கு அறிவூட்ட எண்ணினான். "நாகர் குலத்தலைவ! கள் அறிவைக் கெடுக்கும், கொலை அருளை அழிக்கும் என உணர்ந்து, உண்மை நெறிகண்ட உரவோர், அவற்றை அறவே களைந்து கைவிட்டனர். பிறந்தவர் இறப்பர்; இறந்தவர் பிறப்பவர்; இது உலகியல்

உண்மை. உறங்கலும் விழித்தலும் போல், இறப்பும் பிறப்பும் இயல்பாய் நிகழும். இப்பிறவியில் நல்லறம் புரிந்தவர் மறுபிறவியில் இறவாப் பேருலகம் அடைந்து இன்புறுவர். இப்பிறவியில் கள்ளுண்டும், காம வெறி கொண்டும் அலைந்தவர், வரும் பிறவியில் நரகடைந்து அழிவர். இதை உணர்ந்தமையால், பெரியோர்கள் கள்ளையும் காமத்தையும் கை விட்டனர். இதை நீ உணரின் உயர்வாழ்வு பெறுவாய்'' என உரைத்தான்.

சாதுவன் கூறிய நல்லுரை கேட்ட குருமகன் பேரொலி எழுப்பி நகைத்தான். பின்னர் சாதுவனை நோக்கி, ''வங்கம் ஊர்ந்து வந்த வணிக! உடலை விட்டு ஓடும் உயிர் மீண்டும் ஓர் உடலிற் சென்று புகும் என்கின்றனையே! அது நடக்கக் கூடியதாமோ? கூடுமாயின் அது எங்ஙனம்? நான் அறிய நன்கு உரைப்பாயாக'' என்றான். நாகர் தலைவனின் அறியாமை கண்டு அவன்பால் இரக்கங்கொண்ட சாதுவன், ''குருமகனே! கூறுகிறேன்; கோபம் கொள்ளாது கேள். உடலில் உயிர் நிற்கும்போது' உடல் தனக்கு நேரும் சிறு துன்பத்தையும் உணருகிறது. அவ்வாறு உணரும் அவ்வுடல், உயிர் நீங்கப்பெற்ற பின்னர்ப், பெருநெருப்பில் இட்டுப் பொசுக்கினும், அது அத்துன்பத்தை உணருவதில்லை. அதனால் அந்நிலையில், உடலுக்கு உண்டாம் ஊறுபாட்டினை உணரும் ஒன்று, அவ்வுடலைவிட்டு நீங்கிவிட்டது என்பது புலப்படுமன்றோ? அவ்வாறு நீங்கியதே உயிராம், குருமகனே! இன்னமும் கேள். ஓர் இடத்தைவிட்டு ஓடியவர் எப்போதும் ஓடிக்கொண்டே இரார். இறுதியில் யாண்டேனும் ஓரிடத்தில் உட்கார்ந்தே தீருவர். இது உலகியல் உண்மை. இவ்வுண்மையை நான் மட்டுமன்று, இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவரும் உணர்வர்.

உயிர், உடலை விட்டு மிக்க நெடுந்தூரம் செல்வதை, நீ கனவிலும் கண்டிருப்பை; அவ்வாறு போகும் உயிர், அது அதுகாறும் புகுந்திருந்த உடல் செய்த வினைப் பயனுக்கு ஏற்ற உடலில் சென்று புகும். இவ்வுண்மையை உன் உள்ளத்தில் நிறுத்தி உணர்தல் வேண்டும்'' என்று விளக்கம் அளித்தான்.

வாணிகன் கூறிய விளக்கத்தைக் கேட்டான் குரு மகன். உடனே இருக்கை விட்டெழுந்து, சாதுவன் கால்களில் வீழ்ந்து வணங்கினான். "நல்லறிவுடையோனே! நான் அறிய அறம் உரைத்த உன்னை, ஒன்றுவேண்டுகிறேன். கள்ளையும், ஊனையும் கைவிட்டால் என்உடல் வாழாது; என் உடல் வாழாதாயின் என்உயிரும் வாழாது. ஆகவே, அவ்வறங்களை விடுத்து, என்னால் ஏற்றுச் செய்யவல்ல வேறு அறங்களை அறிவிப்பாயாக'' என வேண்டிக் கொண்டான்.

நாகர் தலைவன் நல்லறிவு பெற்றமை கண்டு சாதுவன் பெருமகிழ்வு எய்தினான். "நாக! நின் நிலைக்கேற்கும் நல்லறங்களும் உள. வாணிகம் கருதிவரும் மக்கள் வங்கம் கவிழ, இவண்வந்தடைவாராயின், அவரைக் கொன்றுண்பதைக் கைவிட்டு அவர் தம்மூரடைய அவர்க்குத் துணைபுரிவாயாக. முதுமை பெற்று இறக்கும் நிலையுற்ற மாவினம் தவிர்த்து, வேறு விலங்கினங்களை வேட்டையாடிக் கொல்லாதே; ஏற்புடைய இவற்றின் வழி நின்று விழுமிய வாழ்வு பெறுவாயாக'' என்று கூறினான்.

சாதுவன் கூறியன கேட்ட நாகர் தலைவன், "சாதுவ! நீ சாற்றிய நல்லறம் எமக்குச் சாலவும் பொருந்தும்; இன்று முதல் நீ காட்டிய வழியில் நின்று அறம்வளர்ப்பேன். எமக்கு அறம் உரைத்து எம்மை வாழ்வித்த

உனக்கு யாங்கள் என்ன கைம்மாறு செய்யவல்லேம்? ஐய! இவ்வழி வரும் கலங்களைக் கவிழ்த்துக் கொள்ளையடித்துக் குவித்து வைத்த அகில், ஆரம், அருமணிகள் அளவிலாதன உள. அவற்றை உடன்கொண்டு சென்று ஊரடைந்து இன்புறுவாயாக'' எனவேண்டி, அவ்வான் பொருளை அவன்பால் ஒப்படைத்தான். சின்னுட்களுக்கெல்லாம், சந்திர தத்தனுடைய வங்கம் அவ்வழியாக வந்தது: நாகர், அதைத் தடுத்து நிறுத்திச் சாதுவனையும், தாம் சேர்த்தளித்த செல்வங்களையும் அதில் சேர்த்து வழியனுப்பினர்.

சாதுவன், செல்வத்தோடு புகார் வந்து சேர்ந்தான். கணவன் வரவை எதிர்நோக்கியிருந்த ஆதிரை, அசரீரி கூறியவாறே, அவன் உயிர் பிழைத்து வந்ததோடு, உறு பொருளும் உடன் கொண்டு வந்தமைகண்டு களிப்புற்றுள். கணவன் ஈட்டி வந்தளித்த இருநிதியை, வருவார்க்கெல்லாம் வாரி வழங்கி, விழுமிய வாழ்வு வாழ்ந்தாள். ஆதிரையின் கற்பின் திறம் கண்டு பாராட்டிப் பெருமையளித்த காவிரிப்பூம்பட்டினத்துப் பெருங்குடி மக்கள், அவளாற்றும் இல்லறச் சிறப்பின் இனிமையையும் கண்டு வியந்து பாராட்டினர்.

ஆதிரை மனைத்தக்க மாண்புடையவளாய் வாழ்ந்திருந்தாள். அப்போது, அவள் பெருமையைப் பார் அறியப் பண்ணும் பெருஞ்செயல் ஒன்று நிகழ்ந்தது. புகார் நகரில் பரத்தையர் சேரியில் மாதவி என்பாள் வாழ்ந்திருந்தாள். அவளுக்கு மணிமேகலை எனும் பெயர் பூண்ட மகள் ஒருத்தி இருந்தாள். அவள் கணிகையர் குலத்தில் பிறந்தும் ஒட்டுப் பற்றற உலகத்தைத் துறந்த உரவோர்களும் வியக்கும் வகையில் துறவு வாழ்க்கை மேற்கொண்டு விளங்கினுள். அவள், ஒருநாள் மணி

பல்லவம் சென்றிருந்தபோது, ஆங்குத் தெய்வத் திரு வருளால் அமுதசுரபி எனும் பெயர் வாய்ந்த பிச்சைப் பாத்திரம் ஒன்று கிடைத்தது. அமிழ்தம் நிகர் உணவை அள்ள அள்ளக் குறையாது அளிக்கும் அருமை வாய்ந்தது அது. மணிமேகலை, புகார் நகரத்து மக்களைப்பற்றி வருத்தும் பசிப்பிணியை அதன் துணையால் போக்க விரும்பி, அவ்வமுத சுரபியோடு வீதியில் புகுந்தாள். அப்போது அவளுடன் இருந்த காயசண்டிகை எனும் பெயர்பூண்ட அவள் தோழி, அவளுக்கு ஆதிரையின் வரலாற்றை விளங்க உரைத்து, ''மாபெரும் பாத்திரம் பெற்ற மடக்கொடி! அவ்வாதிரை, இவ்வமுத சுரபியில் முதற் பிச்சையிடின், அது அள்ள அள்ளக் குறையாது ஆருயிரை ஓம்பும். ஆகவே மணிமேகலை! முதற்கண் அவள் மனை சென்று பிச்சையேற்றுப், பின்னர்ப் பசிப்பிணி ஒழிக்க முற்படுவாயாக'' என வேண்டிக் கொண்டாள்.

மணிமேகலை ஆதிரையின் பெருமையறிந்து அவள் பால் வழிபாட்டன்பு கொண்டாள். உடனே கையில் அமுதசுரபியோடு ஆதிரையின் மனைமுன் சென்று, ஆடாது அசையாது நின்றாள். ஆருயிர் ஓம்பும் அருமை வாய்ந்த அமுதசுரபியில் முதற் பிச்சையிடும் மாபெரும் பேறு தனக்கு வாய்த்தமை கண்டு ஆதிரை அகம்மிக மகிழ்ந்தாள். மனைமுன் வந்து நிற்கும் மணிமேகலையை வலம்வந்து ''பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக'' என வாழ்த்தி அமுதசுரபி நிறைய, ஆருயிர் மருந்தாம் அமுதை அள்ளி அள்ளி இட்டாள்.

# 2. ஆபுத்திரன்

வாரணசி என வழங்கப்பெறும் காசிமாநகரில் அபஞ்சிகன் எனும் அந்தணன் ஒருவன் வாழ்ந்திருந்தான். நான்மறைகளை நன்கு கற்று அவற்றின் உட்பொருளை விளங்க விரித்துரைக்க வல்லவன் அவன். அதனால் அவனை அருமறை ஆசிரியன் என அனைவரும் பாராட்டிப் பெருமைசெய்தனர். ஆரணம் அறிந்த பெரியோனாய அவனுக்குப் பிறர் முன் ஏறுபோல் பீடு நடை நடக்கும் பெருமை இல்லாயிற்று. அவனுக்கு மனைவியாக வாய்த்தவள்பால் மனைமாட்சிக்குரிய மாண்புகள் இலவாயின. சாலி எனப் பெயர் பூண்ட அப்பார்ப்பனி, பிறப்பொழுக்கம் இழந்து பெரும்பழி பூண்டாள். கற்புநெறி தவறிக் கணவனுக்குக் குற்றம் இழைத்தாள்.

நனி இளமைப் பருவத்தில், அறியாமையால் நெறி தவறிவிட்ட அவள், பின்னர்த்தன் பிழையை உணர்ந்தாள். அப்பிழையால் தனக்குக் கேடு நேர்வதோடு, கணவன் வாழ்விற்குக் களங்கம் நேர்ந்துவிட்டதை உணர்ந்து உள்ளம் வருந்தினள்; பிழை தீர யாதேனும் வழியிராதா என ஏங்கினள். தமிழகத்தின் தென்கோடிக் கண்ணதாய குமரி முனையில் நீராடினால் குற்றம் தீரும் என அறிந்தார் சிலர் கூறக்கேட்டாள். குமரித் துறை நீராடும் நினைவே நெஞ்சில் நிலைத்து நிற்க, அது வாய்க்கும் நாளை எதிர்நோக்கியிருந்தாள். அந்நிலையில் வாரணசி வாழ்வார் சிலர், வடநாடு நீங்கித் தென்னாடு செல்கின்றனர் என அறிந்தாள். உடனே, அவரோடு தமிழ்நாடு நோக்கிப் புறப்பட்டு விட்டாள்.

சாலி, காசிநகர் விட்டுக் கால் கடுக கடந்து தமிழ் நாடடைந்தாள். சோணாட்டைக் கடந்தாள். பாண்டி நாட்டின் பெரும் பகுதியையும் கடந்து விட்டாள். பாண்டி மன்னருக்குப் பெருமை தரும் அருஞ்செல்வமாய முத்துக்களைத் தரும் சிறப்பு வாய்ந்த கொற்கைத் துறையையும் கடந்து தென்திசை நோக்கிச் செல்லத் தொடங்கினாள். ஒரு காவதம் கூடக் கடந்திருக்க மாட்டாள். அவளால் மேலே, நடக்க இயலவில்லை; காசி நகர் விட்டு நீங்கும்போதே, சாலி கருவுற்றிருந்தாள். இப்போது கருவுயிர்க்கும் காலம் நெருங்கியிருந்தது. கால்கள் நடை மெலிந்தன, உடல் தளர்ந்தது, உள்ளம் சோர்ந்தது, அண்மையில் இருந்த ஓர் ஆயர்பாடியை மெல்ல அணுகினாள். அப்பாடியை அடுத்திருந்த மலர்ச் சோலையில் ஓர் ஆண்மகவை ஈன்றாள். முறை கேடுற்றுப் பிறந்த மகவாதலாலும், பிறந்த மகவைப் பேணிக் காக்கும் ஆற்றல், தனக்கு அப்போது இல்லை யாதலாலும், அம்மகவின்பால் அவளுக்கு அன்பு சுரக்க வில்லை. அருளையும் அறத்தையும் எண்ணிப் பாராது, பிறந்த மகவை, அம் மலர்ச் சோலையில் மறைவிடம் ஒன்றில் இட்டு அகன்றாள்.

தனித்துவிடப் பெற்ற மகவு, தாய்ப்பால் பெறாது பசியால் துடித்து, வாய்விட்டுக் கூவி அழத் தொடங்கிற்று. குழவியின் கூக்குரல் கேட்ட கன்றீன்ற பசு ஒன்று ஆங்கு ஓடி வந்தது. குழவியைக் கண்டது; அதன்பால் அப்பசுவிற்கு அன்பு சுரந்தது. தான் ஈன்ற கன்றைக் கண்டதேபோல் களிப்புற்றது. அன்பொழுகத் தன் நாவால் பலமுறை நக்கிற்று. தன் கன்றுண்ணும் பாலை, அக்குழவிக்கு ஊட்டிற்று. பசுவின்பால் குடித்துப் பசியொழித்தது அப்பச்சிளங் குழவி. இவ்வாறே இரவு

பகல் அகலாமல், அக்குழவியைக் காத்துக் கிடந்தது ஆக் காரான்.

இவ்வாறு நாட்கள் ஏழு கழிந்தன. பாண்டி நாட்டு வயனங்கோட்டில் வாழும் இளம்பூதியென்ற அந்தணன் அவ்வழியாகச் சென்றான். அவன் காதில் குழவியின் அழுகை ஒலிகேட்டது. மக்கள் வழங்கா இடத்தில் மகவின் கூக்குரல் கேட்டு அந்தணன் சிந்தை நொந்தான்; அக் குரல் வந்த இடத்திற்குக் காதலியோடு விரைந்து சென்றான். ஆங்குப் பசு காத்து நிற்கும் பச்சிளங் குழவியைக் கண்டான். பெரு மகிழ்வு கொண்டான். பிள்ளைப் பேறற்ற தனக்கு, இறைவன் அளித்த பேரருட் செல்வம் அது என எண்ணி அக மகிழ்ந்தான். 'இவன் ஆமகன் அல்லன்; 'என் மகன்' எனக் கூறி களிகூர்ந்தான். குழவியை வாரி அணைத்து, காதலி கையில் ஈந்து, "நம்பி பிறந்தான்; பொலிக நம் கிளை" என வாழ்த்தினான்.

அந்தணன், அருமையாகக் கிடைத்த குழந்தையோடு தன்னூர் அடைந்தான். தமரைக் கூட்டினான். மகப்பேறுற்ற மாட்சியை அவர்க்கு அறிவித்தான், ஆகாத்தோம்பிய அருமையை நினைந்து மகனுக்கு ஆபுத்திரன் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தான். இளம்பூதியும் அவன் இல்லக்கிழத்தியும், ஆபுத்திரனைப் பெற்ற மகனினும் பேரன்பு காட்டிப் பேணி வளர்த்தனர். ஆபுத்திரன் வளர்ந்து பெரியவனானான், மறையோர் முறைப்படி முந்நூல் அணிவதன் முன்னர், மகன், ஆய கலைகள் அறுபத்துநான்கிலும் ஆழ்ந்த அறிவுடையனாதல் வேண்டும் என இளம்பூதி விரும்பினான். நல்லாசிரியனைத் தேடி நம்பியை அவன்பால் அனுப்பி வைத்தான். ஆசிரியன்பால், ஆபுத்திரன் அந்தணர்க்குரிய அரு-

மறை அனைத்தையும் கற்றுத் தேர்ந்தான். முந்நூல் அணியும் விழாவும் முறைப்படி நடந்தேறியது. ஆபுத்திரன் அறிவும் ஒழுக்கமும் கண்டு அனைவரும் போற்றினர். அது கண்டு அவனைப்பேணி வளர்த்த அந்தணனும் அவன் மனைவியும் அகம் நிறை மகிழ் வெய்தினர்.

சில நாட்கள் சென்றன. ஒருநாள், ஆபுத்திரன் வயனங்கோட்டு வீதி வழியே சென்று கொண்டிருந்தான். அப்போது அங்கிருந்த அந்தணன் ஒருவன் வீட்டி லிருந்து, ஆவொன்று அழுது கதறும் ஒலி வந்து ஒலித்தது. அது கேட்டு, ஆபுத்திரன் அம் மனையுட் புகுந்தான். அங்கே ஒரு வேள்விச்சாலை அமைக்கப் பெற்றிருந்தது. வேள்வித் தூணில் ஆவொன்று கட்டப் பெற்றிருந்தது. பன்னிற மலர்கொண்டு பின்னப்பெற்ற மாலை, அப்பசுவின் கழுத்திலும் கோட்டிலும் சூட்டப் பெற்றிருந்தது. சிறிது பொழுதிற்கெல்லாம் தன்னை வெட்டி, வேள்வித்தீயில் இட்டுச் சுட்டுப் பொசுக்கித் தின்று விடுவாரே என்றஎண்ணம் அகத்தில் எழ, அப்பசு அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தது. வேடர்கள் வீசும் அம்பினுக்கு அஞ்சி ஓடி, இறுதியில் அவர் விரித்த வலையிடை அகப்பட்டு ஆருத்துயர் கொள்ளும் மான் போல் மனத்துயர் கொண்டு, ''அம்மா'' என அழைக்கும் அதன் நிலை கண்டு, ஆபுத்திரன் உள்ளம் நெகிழ்ந்தது. அவன் உள்ளம் உருகிற்று; அவன் கண்களில் நீர் ஊறிற்று. அப்பசு, உயிர் பிழைத்துப் போக வேண்டும் என்ற உணர்வு அவன் உள்ளத்தில் உரம் பெற்றது.

அவ்வூர் வாழ் அந்தணர்களின் இயல்பறிந்தவன் ஆபுத்திரன். ஆக் கொலை புரிந்து அவி சொறிந்து கேட்கும் வேள்வியில் வேட்கை மிக்குடையவர் அவ்

வந்தணர்; அதனால் அவர்களுக்கு அறிவுறுத்தி, வேள்வியை நிறுத்தி, வேள்விப் பசுவை விடுவிப்பது இயலாது என்பதை அவன் அறிவான். அதனால் அம் முறையை விரும்பாது ஆவை, அவர் அறியாதவாறு விடுவிக்கத் துணிந்தான். களவு கேடுடைத்து என்பதை அறிந்திருந்தும் ஆவை விடுவிக்கும் அருள் உணர்வு மிக்கமையால், ஆபுத்திரன் களவுநெறியைக் கைக் கொள்ளத் துணிந்தான்.

ஆவேள்வி நடைபெறும் ஆங்குச் சென்ற ஆபுத் திரன், தன் உள்ளக் கருத்தை ஒருவரும் அறியாவாறு அடக்கிக்கொண்டான். இரவுவரும் வரை எவரும் காணாத வாறு எங்கோ ஒளிந்திருந்ததான். இரவின் இடையா மத்தில் எழுந்தான்; ஆவைக் கட்டவிழ்த்துக் கையிற் பற்றிக்கொண்டான். ஊர் எல்லையைக் கடந்தான். காடும் மலையும் செறிந்து கடத்தற் கரியதாய கொடிய வழியே சென்று கொண்டிருந்தான்.

அந்தணர் விழித்துக்கொண்டு நோக்கிய போது வேள்விச் சாலையில் வேள்விப் பசுவைக் கண்டிலர்; உடனே அறிவற்றவரும், கொலைத் தொழிலுக்கு அஞ்சாத வரும் ஆய கொடியோர் துணைகொண்டு, அந்தணர் ஆவைத் தேடிப் புறப்பட்டனர். ஆவின் அடிச்சுவட்டினை அடையாளமாகக் கொண்டு விரைந்து சென்றனர். காட்டு வழியில், கடத்தற்கரிய இடத்தில், ஆவோடு செல்லும் ஆபுத்திரனைக் கண்டு, ஆவோடு அவனையும் கைப்பற்றிக் கொண்டனர். ''ஏடா! ஏன் இத்தீங்கு புரிந்தனை; புலையர் புரியும் பொல்லாங்கு புரிந்த நீ அந்தணர் குலத்தவன் ஆகாய். ஆவைக் களவாடல் அந்தணர் அறியாதது. அதைப் புலையரே அறிவர்; அதை நீ புரிந்து விட்டாய்; அடாதது புரிந்த நீ, அந்தணர் குலத்தினின்றும் நீக்கப்

படுவாய்'' எனக் கடிந்துரைத்தனர். கைக் கோலால் ஐயப் புடைத்தனர் அந்தணர். அடிபொறுக்க மாட்டாது ஆபுத்திரன் அலறித்துடித்தான். நிகழ்வதைப் பார்த்துக் கொண்டு நின்ற ஆவிற்கு ஆருச் சினம் பிறந்துவிட்டது. உடனே, ஆபுத்திரனைச் சுற்றி நின்று அடிப்பவர்களுக்குத் தலைமைதாங்கிநின்ற அந்தணர் மீது பாய்ந்தது. கோட்டால்குத்தி அவன் குடரைச் சரித்தது. காற்றெனப் பாய்ந்து காட்டுள் நுழைந்து மறைந்துவிட்டது.

ஆவின் செயலால் அந்தணர், ஆபுத்திரனை மேலும் கடுமையாகத் தாக்கத் தலைப்பட்டனர். அவர்கள் அடிப் பதைத் தாங்கிக் கொண்டவாறே ஆபுத்திரன் அவர்களைப் பார்த்து, ''அந்தணப் பெருமக்களே! ஆத்திரம் கொண்டு அடிக்காதீர்கள். நான் கூறுவனவற்றைச் சினம் விடுத்துச் சிந்தையில் கொள்ளுங்கள். ஆவினங்களுக்கு அறுகம் புல்லைத் தேடி நாம் அளிப்பதில்லை. 'மேய்ச்சல் நிலம்' என அரசன் விட்ட இடங்களில் புல்லுண்டு உயிர்வாழ்கின்றன. ஆனல் அவை, நம் மக்கள் இனத்திற்கு அளிக்கும் நன்மைகள், அம்மம்ம! நம்மால் அளவிட்டுக் கூறத்தக்கன அல்ல. மக்கள் உயிர்கொண்டு உலகில் தோன்றும் அந்நாள் முதல், அவர்கள் மாண்டு மறையும் அந்நாள் வரை, அவர்க்கு, அறுசுவை உணவினும் அளவிலாப் பயன் நிறைந்த பால் உணவை ஊட்டி வளர்க்கின்றன பசுக்கள். பால் சுரத்தல் தன் பிறவிக்கடன் எனக் கருதி அன்போடு அளிக்கும் ஆவினத்தோடு மக்கள், பகைமை பாராட்டல் பண்பாமோ? அவற்றைக் கொன்று அவிசொரிதல் அறமாமோ? அருள் உடையார் எனப் பாராட்டப்பெறும் அந்தணர் குலத்தவர்க்கு அழகாமோ? அந்தணப் பெருமக்களே! கூறுங்கள்'' எனக் கூறினன்.

ஆபுத்திரன் கூறிய அன்புரைகள் அந்தணர் செவியுட் புகுந்தில. அருமறை அறிந்த தமக்கு அறியாச் சிறுவன் அறிவுரை கூறுவதா என ஆத்திரம் கொண்டனர்; "ஏடா! நீ இகழ்ந்தது எம்மை அன்று; உலகைப்படைத்த உயர்ந்தோன் எமக்கு உவந்தளித்த நான்மறைகளையே நீ இகழ்ந்தனை; அருமறைகளைப் பழிப்பவர் அந்தணர் குலத்தவராகார்; நீ, அப்பசு வீன்ற மகனே அல்லது பார்பன மகன் அல்லன்" எனக்கூறிப் பழித்தனர்.

அந்தணர், தன்னை ஆமகன் எனக் கூறிப் பழிப்பது கண்டு அவர்பால் சினம் கொண்டிலன்; மாறாக அவர் அறியாமையை எண்ணி நகைத்தான்; பின்னர், அப்பார்ப்பனப் பெரியோர்களைப் பார்த்து, "நான்மறை வல்ல நல்லோர்களே! நான் மறைக்காவலர் என உங்களால் போற்றி வணங்கப்பெறும் அசலன், சிருங்கி, விரிஞ்சி, கேசம்பளன் என்ற இந்நால்வர் வரலாற்றினை நீங்கள் அறிவீர்கள்; அசலன், ஆ வயிற்றில் வந்தவன்; சிருங்கி, மான் வயிற்றில் பிறந்தவன். விரிஞ்சி, புலிக்குப் பிறந்தவன்; கேசகம்பளன், நரியீன்ற நல்லோன் என நூல்கள் நுவல்கின்றன. ஆவுக்கும், மானுக்கும், புலிக்கும், நரிக்கும் பிறந்தவர்களெல்லாம் பெரு மறைத் தலைவர் எனப் போற்றப்படுவராயின், ஆவிற்குப் பிறந்த அடியேன் மட்டும் பழியுடையன் ஆவனோ? ஆழச் சிந்தித்து அமைதி காணுங்கள்" எனத் தெளிவுரை தந்தான்.

ஆபுத்திரன் கூறிய அவ்வுரையை மறுக்கும் திறன் அந்தணர்க்கு இல்லாயிற்று. அறியாச் சிறுவன் ஒருவன், ஆசிரியன்மார் என்ற பாராட்டினைப் பெற்ற பெரியோர்களாய தங்களை வாயடங்கச் செய்து விட்டனனே எனச் சினந்தனர். செய்வதறியாது திகைத்து நின்றுவிட்டனர்.

சிறிது பொழுது ஆங்கு அமைதி நிலவிற்று. அறிவால் அடக்கமாட்டா ஆபுத்திரனைப் பிறப்பின் இழிவு கூறி அடக்க முன்வந்தான் ஓர் அந்தணன். "பெரியோர் களே! இவன் பிறப்பு வரலாற்றை நான் அறிவேன். ஒருநாள் வடமொழி வழங்கும் பார்ப்பனி ஒருத்தியை வழியிடைக்கண்டேன். வழிநடை வருத்தமோடு வாடிய மேனியும் உடையளாய்க் காணப்பட்டாள். குமரி முனையில் நீராடிக் குமரித் தெய்வத்தை வணங்கி வந்து கொண்டிருந்தாள். அவளை எதிர்ப்பட்டு "நின் ஊர் யாது? ஈங்கு வந்த காரணம் யாது?" என வினவினேன். அதற்கு அவள், "நான் வாரணாசி வாழ்வேன்; அந்நகர் அருமறை ஆசிரியரின் மனைவி நான்; குலவொழுக்கத் திற்குக்கேடு செய்து விட்டேன். அப்பழி நீக்கத் தென்றிசை நோக்கி வந்தார் சிலரோடு குமரியாட வந்தேன். வரும் வழியில், கொற்கைமாநகர்க்குத் தெற்கே ஒரு காத வழித் தொலைவில் உள்ள ஆயர்பாடியில் ஓர் ஆண்மகவை ஈன்றேன். ஈன்ற மகவிற்கு இரங்காது ஆங்கே இட்டு வந்துவிட்டேன்; இதுவே என் வரலாறு" என இயம்பினாள். பிறப்பொழுக்கம் கெட்ட அவள் பெற்ற மகனே இவன். நான் கூறினால் நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்ற அச்சத்தால் இதுகாறும் இதைக் கூறிற்றிலேன். நீசன் இவன்! நீவிர் இவனைத் தீண்டன் மின்" எனக் கூறினான். அதுகேட்ட அந்தணர் அனை வரும் ஆபுத்திரனை ஒரு சேர இழித்தும் பழித்தும் நகைத் தனர்.

தன்னை நகைத்த அந்தணர் செயல்கண்டு ஆபுத் திரனும் நகைத்தான்; "ஒழுக்கம் கெட்டவள் மகன் எனக் கூறி என்னைப் பழிக்கும் உயர்ந்தோர்களே! உங்கள் நிலை என்ன? நீங்கள் போற்றும் உங்களுக்கு

உயர்வளிக்கும் நான்மறைகளை அளித்த ஆசிரியப் பெரு மக்களாகிய வசிட்டர் அகத்தியர் இருவரும், கடவுட் கணிகையாய திலோத்தமைக்குப் பிறந்தவர் என்பதை மறந்துவிட்டீர்களோ? மறையோர் குலத்தின் மாண்பு இது வாகவும், என்னைப் பெற்ற சாலிக்குப் பிழை கற்பிக்கும் உம் பேதமையை என்னென்பேன்" எனக் கூறி எள்ளி நகைத்தான்.

அந்தணர் வாயடங்கினர்; ஆயினும் அவர் ஆணவம் ஆபுத்திரன் கூறிய அறிவு விளக்கங்களை அறிந்து அவனை ஏற்றுக்கொள்வதைத் தடுத்து விட்டது. அந்நிலையில் அங்கு வந்த இளம் பூதியும், தன் பிறப்பை ஆபுத்திரன் தானே எடுத்துரைக்கக் கேட்டான்; அந்தணர் குலத் திற்கு ஏற்றவனல்லான் இவன் என அவனும் கருதி ஆபுத்திரனைக் கைவிட்டான்.

ஆபுத்திரனை ஆங்கே விடுத்து அந்தணர்கள் தம்மூர் அடைந்தனர். ஆபுத்திரன் செல்லிடம் அறியாது சிறிது பொழுது திகைத்தான். பின்னர்ப் பார்ப்பார்க் கேற்றதாய பிச்சையேற்றுண்ணும் வாழ்க்கை மேற்கொண்டு ஊர் ஊராகச் சென்று பிச்சையேற்றான். அவன் அறிவும் ஒழுக் கமும் அறிந்த மக்கள், அவனுக்கு மகிழ்ந்து உண விட்டனர். ஆனால் அந்தணர் வாழும் சேரிகளில் அவன் அல்லற் பட வேண்டியதாயிற்று. அவன் வரலாறு அறிந்த அந்தணர்கள், "ஆ கவர்ந்த கள்வன்" எனக் கூறிப் பழித்து, அவன் பிச்சைப் பாத்திரத்தில் கல்லிட்டுக் கொடுமை செய்தனர்.

இவ்வாறு ஊர் ஊராக அலைந்து இறுதியில் மதுரை வந்தடைந்தான். ஆங்குச் சிந்தாதேவி என வழங்கப்

பெறும் கலையின் செல்வி வீற்றிருக்கும் கலைக்கோயில் முன்னிருந்த மன்றத்தை வாழிடமாகக் கொண்டான். மதுரை வீதிகளில் புகுந்து, மாசற்றோர் வாழும் மனைகள் தோறும் சென்று பிச்சை ஏற்றான்; ஏற்றுப் பெற்ற உணவில், பெரும் பகுதியைக் கண்ணொளி இழந்தவர், காது கேட்காதவர், கால்முடம் பட்டவர், பேணத்தக் கோரைப் பெறாதவர், பிணியால் பற்றப்பெற்றோர் ஆகியோர்க்கு அளித்துவிட்டு, எஞ்சியதைத்தான் உண்டு, இரவில், ஓட்டைத் தலைக்கீழ்க்கொண்டு உறங்கிக் காலங் கழித்து வந்தான்.

ஒரு நாள் இரவு பெருமழை பெய்து கொண்டிருந் தது. இடையாமம் வந்துற்றது. அப்போது சிலர் ஓடி வந்து ஊரம்பலத்துட் புகுந்தனர். அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த ஆபுத்திரனை எழுப்பினர், அவன் அடியில் வீழ்ந்து வணங்கி, 'வயிறுகாய் பெரும்பசியால் வாடு கிறோம்; உயிர், வாழ உணவளியுங்கள்' என வேண்டி நின்றனர். அவர்கள் நிலைகண்டு இரங்கினான் ஆபுத்தி ரன். ஆனால், அவர்க்கு அப்போது ஏதும் அளிக்க முடியாத் தன்நிலைக்கு வருந்தினான். பிச்சையேற்று வந்ததை அளிப்பதல்லது, பொருளீட்டி வந்ததை அளித்தறியான் அவன். அவ்வாய்ப்பு அவனுக்கு இல்லை. அதனால், பசியால் வருந்துவோர்க்கு உதவ மாட்டாமை கண்டு உள்ளம் துடித்து உறுதுயர் உற்றான்.

ஆபுத்திரன், இரப்போர்க்கு ஈயமாட்டான் ஆயினும், ஈயத் துடிக்கும் அவன் உள்ளத் தூய்மையை, ஆங்குக் கோயில் கொண்டிருந்த சிந்தாதேவி கண்டாள். அவனுக்கு உதவ முன் வந்தாள். ''ஆபுத்திர! வருந்

தாதே. இதோ என் கையில் ஒரு பிச்சைக்கலம் உள்ளது. நாடு வறுமையுறினும், இவ்வோடு வறுமையுறுது. வாங்குவோர் கை வருந்து மேயல்லாது, வழங்கும் இவ்வோடு வருந்தாது. இதன் துணையால், உயிர்களின் பசி நோயைத் துடைப்பாய்: எழுந்து வந்து எடுத்துக்கொள்'' எனக் கூறிக் கொடுத்து மறைந்தாள். சிந்தாதேவியின் நந்தாவுதவியை நினைந்து, ஆபுத்திரன் அவளை நாவாரப் பாடிப் பரவினான்; பசித்து வந்தோர் நோயை அப்பாத்திரத்தின் துணையால் போக்கினான். வழங்க வழங்க வற்றாது சுரக்கும் பாத்திரம் பெற்றமையால், வாங்குவோர் தொகை மிகுந்தது. மக்களேயல்லாமல், மாக்களும், மரம் வாழ் பறவைகளும் அவன் அளிக்கும் அவ்வுணவை வேட்டு, அம்பலத்தில் குழுமின. பழுமரம் தேடிவந்தடையும் பறவைத் திரள்களென, உயிர்களின் கூட்டம் ஊரம்பலத்தில் மிகுந்தது. உண்ணும் ஒலி, ஆங்கு எப்பொழுதும் ஒவென ஒலித்தவாறே இருந்தது.

ஆபுத்திரன் ஆற்றும் நல்லறத்தால், இந்திரன் வீற்றிருக்கும் பாண்டு கம்பளம் நடுங்கிற்று. அதன் நடுக்கத்தால், ஆபுத்திரன் அறப் பெருமையை அறிந்த வானோர் தலைவன், அவனுக்கு வேண்டுவ அளிக்க விரும்பினான். மறையோன் உருவில் மண்ணுலகெய்தினான். மதுரை மன்றம் அடைந்து ஆபுத்திரனைக் கண்டான். இந்திரன், 'யான்' நீ ஆற்றும் அறத்திற்குரிய பயனை உனக்கு அளிக்க வந்தேன். நீ விரும்புவது யாது?'' என வினவினான். இந்திரன் வினவியது கேட்டு ஆபுத்திரன் விலாவெலும்பொடிய நகைத்துவிட்டு ''ஈண்டு ஈட்டிய அறத்தின் பயனை இருந்து துய்ப்போரல்லது அறஞ்செய்வோரோ புறங்காத்து ஓம்புவோரோ நற்றவம் ஆற்றுவோரோ பற்றற முயல்வோரா வாழ்ந்

தறியா வானுலகத்து வேந்தே! வருந்தி வருவாரின் வாட்டும் பசியைப் போக்கி, அவர் மகிழ் முகம் கண்டு இன்புற உதவும் இத் தெய்வக்கடிஞை ஒன்றே போதும். இதனினும் சிறந்தது உன்னால் அருளத்தக்கது யாது உளது. நீ விரும்பி அளிப்பன எதையும் நான் வேண்டேன்'' என அவனை மதியாது கூறி மறுத்து விட்டான்.

ஆபுத்திரன் ஆணவம் கொண்டு உரைத்த உரைகளை இந்திரன் கேட்டான். "என்பால் வரம்வேண்டி இருந்தவம் புரிவோர் பல்லோர்; ஆனால் இவனோ, நான் வருந்தி வந்தளிப்பதையும் வேண்டேன் என வெறுத்து விட்டான். வேண்டாமையாகிய அவ்விழுச் செல்வத்தை இவனுக்கு அளிப்பது இவன் கையில் உள்ள அப்பிச்சை ஓடு. அதைப் பயனிலதாக்கி இவன் செருக்கடக்குதல் வேண்டும்; அதை இன்றே செய்வேன்" எனச் சிந்தையுட்கொண்டான். உடனே மக்கள் விரும்பும் மழை, அவர் விரும்புமளவு விரும்பும் காலத்தில் பெய்க என ஆணையிட்டான். அதனால் பன்னிரண்டு ஆண்டுக் காலமாக, மழை பெறாது வறுமையுற்ற பாண்டி நாட்டில் பல்வகை வளங்களும் பெருகின. பசியால் வருந்தும் உயிரைப் பார்ப்பது அரிதாயிற்று. அம்பலத்தில் அதுகாறும் கேட்டிருந்த ஊணொலி அரவம் அடங்கி ஒடுங்கிவிட்டது. செல்வச் செருக்கால் செய்தொழில் இழந்து காமுகராகிக் கணிகையர் பின்திரிவோரும், சுடுசொல் வழங்கி அடுதொழில் புரிவோரும், வழிநடை புரிவோரும் வந்திருந்து வம்புமொழி பேசி வட்டும் சூதும் ஆடும் இடமாய் வனப்பிழந்து விட்டது.

பசி நோயுற்று வருவாரைப் பெறாமையால் ஆபுத்திரன் அம்பலத்தை விட்டு அகன்றான்; ஊர் ஊராக

அலைந்து திரிந்து, ''உணவு உளது; உண்பார் உளரோ'' என வினவிச் சென்றான்; எவரும் அவன்முன் எதிர்ப் பட்டிலர். பெருங்கூட்டமாய் வந்து, அவன் அளிக்கும் உணவைப் பெற நெடிது காத்திருந்த நிலைபோய், அவனைக் கண்டு, உயிர் கொண்டு உள்ளனையோ'' என வினவுவார் ஒருவரும் இலராகும் இழிநிலை வந்துற்றது. அதுமட்டுமன்று; ஊர்தோறும் சென்று உண்போரைத் தேடி அலையும் அவன் செயல்கண்டு, ''யார் இவன்? பித்தம் பிடித்தவனோ'' எனப் பழிக்கவும் தலைப்பட்டனர், மக்கள். அந்நிலை, ஆபுத்திரனுக்கு ஆற்றொணாத் துயர் அளித்தது. திரண்ட செல்வத்தைப் பெருங்கடல் கொள்ளத் தனித்திருந்து வருந்தும் செல்வன்போல், ஆபுத்திரன் சிந்தை நொந்து, செல்லிடம் அறியாது சென்றுகொண்டே இருந்தான்.

ஒரு நாள், கடல் கடந்த நாடுகளினின்று கலம் ஊர்ந்து வந்தோர் சிலர் ஆபுத்திரனைக் கண்டு அவன் மனத்துயர் அறிந்தனர்; அவர்கள் தாங்கள் சென்று வந்த சாவக நாட்டில், மக்களும் மாவும், மழையின்மையால் வருந்துகின்றனர் என்பதை ஆபுத்திரனுக்கு அறிவித்த னர். அது கேட்ட ஆபுத்திரன், கொள்வோர்ப்பெருது பயன் குன்றும் பாத்திரத்தோடு இன்றே சாவகம் செல் வேன் எனத் துணிந்தான். சின்னாட்களுக்கெல்லாம், சாவகம் செல்வாரோடு வங்கம் ஏறிப் புறப்பட்டான்.

கலம் கடல் நீரைப் பிளந்துகொண்டு சென்று கொண்டிருந்தது. ஒரு நாள் காற்றுச் சுழன்றடிக்கக் கண்ட மீகாமன், கலத்திற்குக் கேடு நேராதிருத்தற் பொருட்டுக் கலத்தை, அண்மையில் இருந்த மணி

பல்லவத் தீவிற்கொண்டு சென்று நங்கூரம் இட்டான். பாய்கள் இறக்கப் பெற்றன. கலம், ஆங்கு ஒருநாள் நின்றது. மணிபல்லவத்தின் மாண்புகளைக் கண்டு மகிழும் கருத்தோடு ஆபுத்திரன் கலத்தினின்றும் இழிந்து அத்தீவினுட் புகுந்தான். காற்று நின்றது. கலத்தில் வந்தோர், மீண்டும் கலத்தில் ஏறிக்கொண்டனர். ஆபுத்திரனும் ஏறியிருப்பன் என எண்ணி, மீகாமன் கலத்தை மால்கடலிடைக் கொண்டு சென்றான்.

கலம் சென்றுவிட்டது. களம் சென்ற காலம் இரவாதலின், கலம் சென்றதை ஆபுத்திரன் அறிந்திலன். விடிந்து வந்து நோக்கினான். வங்கத்தைக் காணாது வருந்தினான். மீண்டும் மணிபல்லவத் தீவின் உள்ளகம் சென்று, உயிர் வாழ்வார் உளரோ எனத் தேடினான். ஒருயிரும் அவன் கண்ணில் புலப்பட்டிலது. "அந்தோ! என் கையில் உள்ளதோ ஆருயிர் ஓம்பும் அமுதசுரபி; ஆனால் அதைப் பெற்ற யான் இருப்பதோ வாழ் உயிர் அற்ற வன்னிலம். பலகோடி உயிர்களின் பசியைப் போக்கவல்ல இப்பாத்திரத்தால் என் ஒருவன் பசியைப் போக்கும் இழிநிலையை யான் விரும்பேன்; பண்டைப் பிறவியில் பேரறம் புரிந்ததன் பயனாய் இப்பாத்திரம் பெற்ற யான், இறுதியிற் சிறிது தீவினையும் புரிந்தேன் போலும்! அதனாலேயே பாத்திரம் பெற்றும் அதனாலாம் பயனை ஆரப்பெறாமல் அழிகின்றேன். இதை, இனி வறிதே சுமந்து வாழேன்" எனக்கூறி வருந்தியவாறே சென்றான். வழியில் கோமுகி என்ற பொய்கையொன்று புலப்பட்டது. அதை அணுகியதும் "ஆருயிர் மருந்தாம் அமிழ்தினை அள்ளி அள்ளித் தரும் அமுதசுரபி! உன்னை இப்பொய்கையில் இட்டு உயிர் துறக்கத் துணிந்தேன்; நீ, இப்பொய்கையினின்றும் ஆண்டிற் கொருமுறை வெளிப்பட்டு, அருளறம் பூண்டு

ஆருயிர் ஓம்பும் பெரியோரைக் காணின் அவர் கைப்புகுக எனக் கூறிக் கலத்தைக் குளத்தில் எறிந்தான். பின்னர் ஒரு மரத்தடியில் அமர்ந்து, உணவொழித்து, மனத்தை ஒரு வழி அடக்கியிருந்து உயிர் நீத்தான்.

மணிபல்லவத்தில் மன்னுயிர் நீத்த ஆபுத்திரன், கீழ்வானில் தோன்றிக் காரிருள் கெடுத்து, மேல்வானில் சென்று மறையும் ஞாயிறு போல், சாவக நாட்டில்பிறந்து மன்னன் மகனுய் வளர்ந்தான். சாவக நாட்டில் உள்ள தவளமால் வரையில் மண்முகன் என்னும் முனிவன் மாதவம் புரிந்து கொண்டிருந்தான். பண்டு, ஆபுத்திரன் பிறந்த அந்நாள்தொட்டுஏழுநாள் வரையும், அவனுக்குப் பாலூட்டி வளர்த்த பசு அப்புண்ணியப் பயனுய் மண் முக முனிவன் தவச்சாலை அடைந்து ஆண்டு வாழ்ந் திருந்தது. கொம்பும் குளம்பும் பொன்னிறம் காட்டப் பெருங்கவின் பெற்று விளங்கிய அப்பசு, கன்று ஈனு முன்பே, பால் சுரந்து பல உயிர்களைப் புரந்தது. முக்கால நிகழ்ச்சிகளையும் முன்னின்றுணரவல்ல மண்முகன், அப்பசுவின் இயல்பு கண்டு, இதன் வயிற்றில், மழை மாருது வளங்கொழிக்குமாறு மண்ணுலகாளும் மன்னவன் ஒருவன் தோன்றுவன் என அறிந்து கூறினுன்.

மீண்டும் பிறந்து அறம் செய்யும் மனத்தோடு, பிணிநோய் உருதேமாண்டு மணிபல்லவத்தீவில் மறைந்த ஆபுத்திரன், இறக்கும் அந்நிலையிலும், தனக்குப் பாலூட்டி வளர்த்த அப்பசுவை மறந்திலனுதலின், அதன் வயிற்றில் வந்து தங்கினுன். வைகாசித்திங்கள் முழுநிலா நாளன்று, அவ்வா, ஓர் ஆண்மகவை ஈன்றது. வானவர் வாசநீரும் மலரும் தூவி வாழ்த்தினர்; புத்தன் பிறக்கும்

புண்ணிய நாளன்று தோன்றும் நன்னிமித்தங்கள் அனைத்தும் அன்று தோன்றக் கண்டு, சாவக நாட்டு மக்கள் வியந்து மகிழ்ந்தனர். சக்கரவாளக்கோட்டத்தில் வாழும் தேவர்கள், இயற்கையை ஏவல் கொள்ளும் அவ்வின்ப நிகழ்ச்சிக்காம் காரணம் காணாது விழித்தனர்.

மண்முக முனிவன் தவப்பள்ளியில், ஆவொன்று ஓர் ஆண்மகனை ஈன்றுளது; பிறந்த மகனுக்கு பேரரசாகும் பேறுளது. அவன் ஆளும் நாடு மழை மளம் மிக்கு மாண்புறும் என்ற செய்தி, அச்சாவக நாட்டு மன்னன் பூமிசந்திரன் செவிக்கு எட்டிற்று. மகப் பேறில்லாமல் மனத்துயர் கொண்டிருந்த அம்மன்னவன், ஆவீன்ற அம்மகனைத் தன் மகனாக ஏற்று மன்னனாக்க விரும்பினான். உடனே தன் மனைவி அமரசுந்தரியோடு, தன் அரசிருக்கையாம் நாகபுரத்தின் நீங்கித் தவளமால் வரை அடைந்தான். இருவரும் மண்முகன் தவப்பள்ளி அடைந்து அவனை வணங்கினர். ஆவையும், அஃது ஈன்ற ஆண் மகவையும் கண்டு அகமகிழ்ந்தனர். ''மாதவ! மக்களை இல்லேன். நீ அருளின் புதல்வனைப் பெற்ற பேறுடையனாவேன்'' எனத் தன் வேட்கையை வெளியிட்டான். மன்னவன் மனக்குறிப்பறிந்து முனிவனும் இசைந்தான்.

அரசனும் அரசியும் ஆவீன்ற மகனைத் தாமீன்ற மகனென மதித்து மகிழ்ந்து தம் அரண்மனைக்குக் கொண்டு சென்றனர். அவனுக்குப் புண்ணியராசன் எனப் பெயர் சூட்டிப் பேரன்பு காட்டிப் பேணி வளர்த்தனர். அரசர்க் குரிய அரிய கலைகள் அனைத்தையும் அவனுக்கு அறிவித்தனர். பின்னொருநாள், அவனை மன்னனாக்கி மகிழ்ந்தனர். புண்ணியராசன் ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டான்.

வானம் வழங்குவதை மறந்திலது. மண்ணும் மரங்களும், வளம்பல நல்கின. உயிர்களை வருத்தும் பசி, பிணி, பகைகளைப் பார்ப்பது அரிதாயிற்று. இவ்வாறு நல்லாட்சி மேற்கொண்டிருந்தான் புண்ணியராசன்.

ஒருநாள் புண்ணியராசன் தன் மனைவியோடு, அரண்மனையை அடுத்திருந்த பூம்பொழிலுக்குச் சென்ருன். சிறிது பொழுது பொழில்வளம் கண்டுகளித்த பின்னர் இருவரும், அப்பொழிலில் அறம் புரிந்துகொண்டிருந்த தருமசாவகன் எனும் தவ முனியைக் கண்டு அவன் அடிபணிந்து நின்றனர். அவன் உரைத்த பாவ புண்ணியங்களின் பண்பு, நிலையும் நிலையாப் பொருள்களின் இயல்பு, பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு எனும் துக்க வகைகள், பிரிந்த உயிர்செல்லுமிடத்தியற்கை; பேதைமை முதலாம் சார்புகளின் தோற்றமும் தொடர்பும், அச்சார்புகளை அறுத்தொழுகும் ஆறு, அனைத்துயிர்க்கும் ஆசிரியனாய புத்தன் இயல்பு ஆகிய அரிய பொருள்களை அமைதியாக இருந்து கேட்டனர்.

அரசனும், அவன் உரிமையும், இவ்வாறு அறங் கேட்டிருக்கும் அந்நிலையில், ஆபுத்திரன் கை அமுத சுரபியை மணிமேகலா தெய்வத்தின் துணையால் பெற்ற மணிமேகலை, அவ்வாபுத்திரன், இப்பிறவியில் இருந்து ஆளும் சாவகநாட்டையும், அதைப் புண்ணியராசன் வடிவில் இருந்தாளும் அவனையும் கண்டு மகிழ வானூ டெழுந்து, தரும சாவகன் தவப்பள்ளி முன்வந்து நின்ருள். அவளைக் கண்ட அரசன், "பெண்ணிணை இல்லாப் பேரழகுடையாள்; ஆனால் இவள் கண்களில் காமக் குறிப்பு இடம் பெற்றிலது. கையில் கலம் ஏந்தியிருக்க வும், கருத்தில் அறம் கேட்கும் குறிப்புடையாள்; யார்

இந்நல்லாள்?'' என வினவினன். காவலனைத் தொடர்ந்து வந்த கஞ்சுகன், அவனை வாழ்த்தி வணங்கி, "நாடாள் வேந்தே! நாவலந்தீவினள் இந்நங்கை. தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லா உயர் வொழுக்க நெறியினள். இவள் பெயர் மணிமேகலை. சோணாட்டுக்காவலன் கிள்ளி வளவனோடு நட்புக்கொளவேண்டி, முன்னம் ஒரு நாள் என்னை, மன்னவ! அவன்பால் அனுப்பினாய் அல்லவோ? அப்போது கலம் ஏறிக் கடல் கடந்து காவிரிப்பூம்பட்டினம் சென்ற யான், ஆங்கு அறவண அடிகள் உரைக்க, இவள் பெருமையை அறிந்து வந்தேன். அதை அடியேன் அரசர் பெருமானுக்கும் அறிவித்துள்ளேன். அவளே இவள்'' எனக் கூறினான்.

மணிமேகலையின் திறம் அறிந்து மன்னவன் மகிழ்ந்தான்; பின்னர் மணிமேகலை அவனை நோக்கி, ''அரசே! ஆருயிர் பசிபோக்கி உன் அருள் நிறை உள்ளத்திற்கு ஆக்கம் அளித்திருந்த இவ்வமுதசுரபி, பண்டு உன் கையில் இருந்து, இப்பிறவியில் என் கையில் வந்துளது. மன்னனாகி மாநிதி அடைந்தமையால், உன் அறிவு மழுங்கி உளது. அதனால் நீ பண்டைப் பிறப்பின் இயல்பினை உணர்ந்திலை. போன பிறவியைத்தான் மறந்தனை என்றால், ஆவயிற்றில் தோன்றிய இப்பிறப்பியல்பையும் மறந்துவிட்டனையே; என்னே உன் மயக்கம். மணிபல்லவம் அடைந்து, புத்த பீடிகையை வலம் வந்தாலல்லது நின் பிறப்பியல்புகள் நினக்குப் புலப்படா; மன்னவ! மணிபல்லவம் செல்கிறேன்; நீயும் ஆண்டு வருக'' எனக் கூறி வரவேற்பு அளித்துவிட்டு வானூடெழுந்து மறைந்துவிட்டாள்.

போன பிறவி குறித்தும், புகுந்த பிறவி குறித்தும் மணிமேகலை கூறிய மாற்றங்கள் புண்ணியராசன்

மனத்தைப் புண்படுத்தின. அகத்துயரோடு அரண்மனை அடைந்தான். அடைந்தவன், தன்னை வளர்த்த தாயான அமரசுந்தரியை அணுகித் தான் பிறந்த முறையைத் தனக்கு விளங்க உரைக்குமாறு வேண்டிக்கொண்டான். மண்முக முனிவனே தந்தை; பொற்குளம்பும் பொற் கோடும் கொண்டு அம்முனிவன் அறப்பள்ளியில் வாழ்ந்த ஆவே தாய்; மகப் பேறில்லாத் தானும் தன் கணவனாய பூமிசந்திரனும் அவனை வளர்த்த தாயும் வளர்த்த தந்தை யுமே ஆவர் என்ற உண்மைகளை அவள் ஒன்றுவிடாமல் உரைத்தாள்.

அமரசுந்தரியால் உண்மை உணர்ந்த அரசன் போன பிறவியில் தாய்வழி வந்த பழியும், புகுந்த பிறவி யில் பசுவயிற்றில் வந்த பெரும் பழியும் நினைந்து நெடிது புலம்பினான். அரசாள் செல்வத்தை அவன் உள்ளம் வெறுத்தது. குறுநில மன்னர்கள் தன் கால் பணிந்து குறைகூறி முறை வேண்டற்காம் காலத்தை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்க அரியணையில்வீற்றிருந்து அறிவன அறிந்த பெரியோரைப் பணிந்து, அவர் கூறும் அறவழி அரசோச்சி, ஆடல் கண்டு, பாடல் கேட்டு அரசமாதேவியார் ஊடல் கொள்ளின், அதுதீர அவர் உவப்பன புரிந்து வாழும் வேந்தர் வாழ்வில் வெறுப்புக் கொண்டான். பற்றறத் துறத்தலே பிறவிப் பயனும் என உணர்ந்தான், உணர்ந்த வழி நடந்து காட்டத் துணிந் தான்.

அரசன் துணிவை அமைச்சர் உணர்ந்தனர். உடனே சனமித்திரன் எனும் தலைமை அமைச்சன் அரசனை அணுகி, அடி பணிந்து ''வேந்தே வாழி! பண்டு இந்நாடாண்டிருந்த மன்னவன், நின்னை அடை

யும் வேறு பெறுவதன் முன்னர், இந்நாடு பன்னீராண்டு காலம் பருவ மழையின்மையால் பாழுற்றது. தாய், தானீன்ற மகவு பசியால் வருந்தவும், அதன் பசியைப் போக்க நினையாது தன் பசியைப் போக்கிக்கொள்ளும் பெரும் பஞ்சம் தலை விரித்தாடியது; காயும் கோடையில் கார் தோன்றியதே போல் நீ வந்தடைந்தாய்; வந்த பின்னர், வானம் பொய்த்திலது, வளம் பெருகிற்று. உயிர்கள் பசி நோய் உணர்ந்தில. இந்நிலையில் நீ இந்நாட்டை மறந்து துறந்து செல்லின், இந்நாட்டு மக்களும் மாவும் பெற்ற தாயாரை இழந்தார் போல் பெருந்துன்புறுவர். துயரால் துடிக்கும் உயிர்களைக் காத்தலே உயர்ந்தோர் கடனும்; அதை விடுத்து, அரச! துறந்து பெறும் பேரின்ப நிலையினை உன் உள்ளம் விரும்புமாயின், இம் மாநிலம், 'உயிர்கள் உறு துயர் உறத் தான் பேரின்ப நிலையினைப் பேணிக் கிடந்தான்' என நின்னைப் பழிக்கும். தன்னலம் கருதாது பிறர் நலம் பேணலே மன்னர்க்கு அறமாம். அதை நீ மறத்தல் மதியுடைமை அன்று'' என எடுத்துரைத்தான்.

அமைச்சன் உரைத்த அறிவுரை அரசன் உளத்தில் சென்று பதிந்தது. தன் பிறப்புண்மையை அறிய வேண்டும் என்ற வேட்கை மிகுதியால் மறைந்துபோன கடமையுணர்ச்சி காவலன் உள்ளத்தில் மீண்டும் இடம் பெற்றது. "அமைச்சர் முதல்வ! நீ உரைத்த அறவுரை நன்று. ஆயினும் மணிபல்லவம் சென்று என் பழம் பிறப்புணரும் வேட்கையை என்னால் விடல் இயலாது. சென்று வர ஒரு திங்கள் ஆகும். அதுவரை ஆளும் பொறுப்பினை நீ ஏற்றல் நின் கடன்'' எனக் கூறி அதை அவன் பால் ஒப்படைத்துக் கலம் ஏறி மணி பல்லவம் அடைந்தான்.

புண்ணியராசன் வருகையை எதிர்நோக்கி மணி பல்லவத்தில் காத்துக் கிடந்த மணிமேகலை, அவன் ஊர்ந்து வந்த கலம் கரைசேர்ந்ததும், எதிர் சென்று வர வேற்றாள். அவனை அழைத்துக்கொண்டு. திரையுலாவும் தேமலர்ச் சோலைகளைக் கொண்ட அத்தீவை வலம் வந்தாள். பின்னர் பழம் பிறப்புணர்த்தும் தருமபீடிகை முன் மன்னனைக்கொண்டு நிறுத்தினாள். அரசன் அதை வலம்வந்து வணங்கி நின்று வாழ்த்தினான். அந்நிலையே கையிற்கொண்ட கண்ணாடி காண்பவர் முகத்தைக் களங்கம் ஒழித்துக் காட்டல்போல், பீடிகை, புண்ணியராசன், ஆபுத்திரனாய் வளர்ந்து வாழ்ந்த பழம்பிறப்பை உணர்த்திற்று; முன்னைப் பிறப்பின் நிகழ்ச்சிகள் அவன் மனக் கண்முன் நின்று களிநடம் புரிந்தன. மதுரைக் கலை நியமத்தில் கோயில் கொண்டிருக்கும் சிந்தாதேவியை நினைந்து நெஞ்சுருகி வாழ்த்தினான்.

பழம் பிறப்புணர்ந்து தன்னிலை மறந்து வணங்கி நிற்கும் புண்ணியராசன் நிலை கண்டு மணிமேகலை மகிழ்ந்தாள். பின்னர் அவனை அத்தீவின் தென்மேற்குத் திசைக்கண் இருந்த கோமுகிப் பொய்கைக்கு அழைத்துச் சென்றாள். இருவரும் அதன் கரையில் இருந்த புன்னை மரத்தடியில் தங்கினர். மன்னனும் மணிமேகலையும் வந்திருப்பதை, அப் பொய்கையைக் காத்து நிற்கும் தீவதிலகை அறிந்து ஆங்கு வந்தாள். "அருந்துயர் தீர்க்கும் மருந்தளிக்கும் அமுதசுரபி கொண்டு உயிர்களின் பெருந்துயர் தீர்த்த பெரியோய்! வருக வருக" என வரவேற்றாள். பின்னர், "அரசே! அன்று உன்னை அறியாது விட்டுச் சென்று, பின்னர்ப் பிழையுணர்ந்து ஈண்டு வந்து, நீ இறந்தமை அறிந்து, அதனால் தம்முயிர் நீத்த வணிகர்

ஒன்பதின்மரின் உடல் எலும்புகள் இவை. அவர் இறந்தமை அறிந்து, அவருடன் வந்து, அவர் அளித்த உணவுண்டு வாழ்ந்தோர் வாழ்விழந்து விட்டுச் சென்ற உடல் எலும்புகள் இவை" எனக் கூறி அவ்வெலும்புக் குவியல்களை வரிசை வரிசையாகக் காட்டினாள்.

உடன் வந்தோர் எலும்புக் கூடுகளைக் கண்டு, மன்னன் மனங்கலங்கியிருக்க, தீவதிலகை மீண்டும் அரசனை நோக்கி, "அரசே; உன்கலம் உறுபயன் இழந்தமை உணர்ந்து, உள்ளம் வருந்தி உயிர்விட்ட உன் உடல் எலும்புகள் நீ அமர்ந்திருக்கும் இப்புன்னைக்குக் கீழ் உளது; ஈண்டுக் கிடந்த எலும்புகள் மீது கடல் அலைகள் மணல் கொணர்ந்து குவிக்க அதன் மீது தழைத்து வளர்ந்துளது இப் புன்னை. அரசே! நின் உயிர் கொன்றாய்; நின் உயிர்க்கு இரங்கி நின்பின் வந்த பலர் உயிர் கொன்றாய். உயிர் பல கொன்று பெருங்கொலை புரிந்த நீ கொற்றவனாய்க் கோலோச்சுகின்றனை; நன்று நின் வாழ்க்கை" என அவனை நகைத்துப் பழிப்பாள் போல் பாராட்டி மறைந்தாள்.

அவள் மறைந்ததும் அரசன் எழுந்தான்; மணிமேகலை துணை செய்ய மண்ணை அகழ்ந்தான்; ஆங்குத் தசையெலாம் நீங்க, வெண்ணிறச் சுண்ணம் பூசப் பெற்றதுபோல் வீழ்ந்து கிடந்த தன் உடல் அமைப்பைக் கண்டான. அவன் கண்ணும் மனமும் கலங்கின. செயலிழந்து போனான்.

மன்னன் மயக்கம் உற்றதை மணிமேகலை கண்டாள். அரசன் மெய்யைப் பற்றிய மயக்கத்தை முதலில் போக்கி

ளுள். பின்னர், ''அரசே! அரசே! நின் பழம் பிறப்பின் பெருமையை நீ அறியச் செய்து, அதனுல், இவ்வுலகமும், இவ்வுலகைச் சூழக் கிடக்கும் பல்லாயிரம் சிறு தீவுகளும் நின் பெருமை அறிந்து நின்னைப் போற்றிப் புகழுமாறு செய்தல் வேண்டும் என விரும்பினேன். அதற்காகவே, உன் நகர் வந்து, உன்னை ஈண்டு அழைத்து வந்தேன். நாடாள் வேந்தே! நாட்டில் நல்லறம் நின்று நிலைபெற வேண்டும்; நாடாளும் அரசன்பால் அறம் நீங்காதாயின், அவனுளும் நாட்டில் வாழ் உயிர் ஒவ்வொன்றும் அவ்வற வழி நிற்கும், 'அறம் எனப்படுவது யாது!' என அரசே! கேட்பின், அறைவேன், கேள். மக்களுக்கு இன்றியமை யாது வேண்டப்படுவன மூன்று: அவை உண்டி, உடை, உறையுள். இம் மூன்றிலும் குறை நேராவாறு நின்குடிக் கீழ் வாழ்வாரைப் பேணிப் பேரரசு செலுத்துவாயாக'' என அரசர்க்குரிய அறநெறிகளை அவன் மனங் கொள்ளு மாறு எடுத்துரைத்தாள்.

மன்னர்க்கு உரியன என மணிமேகலை எடுத்துக் கூறிய அறிவுரையினை மன்னன் மனத்துட்கொண்டான். மயங்கிய தனக்கு மதியையுணர்த்திய மணிமேகலையை நோக்கி, ''என் பிறப்பை எனக்கு உணர்த்தி என்னை வாழ்வித்த நின்பெருந்திறத்தை யான் என்றும் மறவேன். நீ கூறிய நல்லரசு என் நாட்டில் மட்டு மல்லாது வேறு பிற நாடுகளிலும் நிலவ நான் வழி காணுவேன். அதுவே என் கடன்'' என உளமாரக் கூறி உறுதிமொழி அளித் தான்.

புண்ணியராசன் பழம் பிறப்புணர்ந்து பெருமை பெற்றதோடு அறநெறி அரசாளும் அறிவுடையனுனமை

கண்டு, மனம் நிறைவுற்ற மணிமேகலை, ''அரசே! 'எடுத்த இரு பிறவியும் பழியுடைய' என உன்னி உளம் வருந்தாதே. உன்னைப் பிரிந்த உன் நாட்டு மக்கள் உன் வருகையை எதிர்நோக்கி வந்திருப்பர். வங்கம் ஏறி விரைந்து சென்று, அவர்க்கு வாழ்வளித்து விளங்குக! நான் வஞ்சிமாநகர் செல்கிறேன்'' எனக் கூறி, அவன் பால் விடை பெற்றுக்கொண்டாள்.

புண்ணியராசனும், சாவகம் புகுந்து, அறப்பேராட்சி செலுத்திப் பெருமை பெற்றுத் திகழ்ந்தான்.

# 3. இலக்குமி

அசோதரம் எனும் நாட்டை இரவிவன்மன் எனும் அரசன் ஆண்டிருந்தான். அவன் தலைநகர் பல்வேறு துறையிலும் பணியாற்றும் மக்கள் பெருங்கூட்டமாய் வாழும் ஒரு பேரூர். அதனால் அம்மாநகர், ஓயாது ஒலிக்கும் கடலொலி போலும் பேரொலியை எப்போதும் பெற்றிருக்கும். அத்தகு பெருமை மிக்க அப்பேரூரில் இருந்து பாராண்ட இரவிவன்மன், அமுதமதி எனும் அழகிய நல்லாளை மணந்து மனையறம் மேற்கொண்டு வாழ்ந்தான். அவர்கள் ஆற்றிய அறத்தின் பயனாய், தாரை, வீரை, இலக்குமி எனும் மகளிர் மூவர் பிறந்தனர். மூவரும் முறைப்படி வளர்ந்து மணப்பருவம் பெற்றனர்.

இரவிவன்மன், மகளிர் மூவர்க்கும் மணம் முடிக்க முனைந்தான். அங்க நாட்டின் கச்சயநகர்க் காவலனாய துச்சயன் என்பான் வேந்தர் பலரை வென்று, வெற்றிக் கழல் புனைந்த வீரனாதல் அறிந்து, அவனுக்குத் தாரை வீரை இருவரையும் மணம் செய்தளித்தான். இளையளாகிய இலக்குமி பெற்றோர் இருவர்க்கும் துணையாய், அசோதர நகரத்து அரண்மனையின் செல்வச் சிறுமியாய் வாழ்ந்திருந்தாள். நிற்க,

காந்தாரம் எனும் பெயர் பூண்ட பெரிய நாடொன்றிருந்தது; அதன் உட்பகுதியாய்ப் பூருவதேயம் என்ற

ஒரு சிறு நாடிருந்தது. அந் நாட்டை அத்திபதி எனும் அரசன் அறம் பிறழாது ஆண்டு வந்தான். அதனால் அவன் நாட்டில் பழி பாவங்கள் இலவாயின. அவன், சித்திபுரம் எனும் சிறந்த நகரத்தைச் சேர்ந்த சீதரன் எனும் சிற்றரசனுடைய மகளாய நீலபதி எனும் நிகரிலா அழகுடையாளை அரசமாதேவியாய் அடைந்து இன்புற்றிருந்தான். அவர்களுக்கு இராகுலன் என்ற ஒரு மகன் பிறந்தான். காலை ஞாயிற்றின் கவின் பெற்றுக் காளைப் போல் வளர்ந்து வரைவிற்குரியனாய் விளங்கினான். இரவிவன்மன், தன் இளைய மகள் இலக்குமிக்கு ஏற்ற கணவன் அவ்விராகுலனே எனத் தேர்ந்து, இருவர்க்கும் மணம் முடித்து வைத்து மகிழ்ந்தான்.

மணங்கொண்ட இலக்குமி பிறந்த நாட்டைப் பிரிந்து புகுந்த பூருவ நாடடைந்து பெருவாழ்வு வாழ்ந்திருந்தாள். அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல் முதலாம் இல்லறக் கடமைகளை இனிதாற்றி, நல்லற மனைவியாய் விளங்கினாள்.

இலக்குமி உண்மைக் காதலின் இயல்பை உணர்ந்திருந்தாள். அதனால் ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்ற காதலறத்தைக் கடைப்பிடிக்க விரும்பினாள். அவ்வாறே ஒரு நாள், கணவனோடு ஊடிக்கொண்டு ஒரு பொழில் அடைந்து மறைந்திருந்தாள். இராகுலன் அவள் ஊடலைத் தணித்து அவள் கருத்து மாறுபாட்டைப்

போக்குதற்குத் துடித்தான். அதனால் அவள் தரும் காதல் இன்பத்தைப் பெற அவள் அடிபணியும் கருத்தோடு அவள் புகுந்திருந்த பூஞ்சோலைக்குச் சென்றான்.

அப்போது ஆங்கு அவன் கண்ட ஒருகாட்சி. அவனுக்குச் சினமூட்டிவிட்டது. வானூடு செல்லும் வழக்கம் உடையோனும் செயற்கரிய செய்யும் பெரியோர்களையே சார்ந்து வாழ்வோனும், அதனால் சாதுசக்கரன் எனும் காரணப் பெயர் பெற்றோனும் ஆய ஒரு முனிவன் மணிபல்லவம் சென்று, அதற்கு அணித்தாக உள்ள சிறு தீவில் இடம்பெற்ற சமந்தம் எனும் மலையுச்சியில் பொருந்தியிருந்தியிருக்கும் புத்தன் திருவடிகளை வணங்கி வழிபட்டு மீளுங்கால், உச்சிப் பொழுது ஆய்விட்டமை அறிந்து, இலக்குமி புகுந்திருந்த பூஞ்சோலையில் இறங்கினான். கணவனை எதிர் நோக்கியிருந்தவள், தன்முன் புதியான் ஒருவன் திடுமென, அதுவும் வானத்தினின்றும் இழிந்து வந்து தோன்றியதைக் காணவே, அவள் அறிவு மயங்கிவிட்டது. உள்ளத்தில் நடுக்கம் எழுந்தது; அது உடலையும் பற்றிக்கொண்டது; வாயினின்றும் சொற்கள் வெளிப்பட்டில. தன்னை அறியாதே அவன் தாளடி பணிந்தாள். இலக்குமியின் வாடிய நிலையினையும், வணக்கத்தையும், அவன் முன் வந்து நிற்கும் புதியோனையும் கண்டு, இராகுலன் கடுஞ்சினம் கொண்டான். உடனே மனைவியின் மனக்குறை தீர்த்து அவளை மகிழ்விக்க வந்த அவன், "ஏடி! நின்னால் வணங்கத்தக்க இவன் யாவன்?

ஈங்கிவன் எவ்வாறு வந்தான்’’ எனக் கேட்டு வெகுண்டான்.

கணவனின் வெகுண்ட நிலைகண்டு இலக்குமி கலங்கினாள். அவன் கூறும் வெஞ்சொற்கள் அவன் வாயை விட்டு வெளிவராவண்ணம் அவன் வாயைப் பொத்தினாள். ‘‘காதல! வானூடிழிந்த வான்புகழ் உடையவன் இம்முனிவன். இவன் மலரடி வணங்கும் மனம் நினக்கு இல்லாமை நாம் செய்த தீவினைப் பயன்போலும்; அத்தகையோனைப் பழித்தல் பெருங்கேடளிக்கும் கொடுஞ் செயலாம்’’ எனக்கூறி அவன் சினத்தைத் தணித்தாள். பின்னர்க் கணவனோடு மாதவன் மலரடி வீழ்ந்து வணங்கினாள். ‘‘அமர முனிவ! யாங்கள் நின்பால் அன்பிலேமாயினும், எம்பால் அமுதுண்டு செல்லல் வேண்டும்’’ என முனிவனை வேண்டிக்கொண்டாள். மனையறத் தலைவியாய் மங்கையர் நல்லாளாய் விளங்கிய இலக்குமியின் வேண்டுகோளை முனிவன் ஏற்றுக் கொண்டான்; அவள் அளித்த அமிழ்துநிகர் உணவை உண்டு அவளை வாழ்த்தி வானூடெழுந்து சென்றான். ஆண்டுகள் சில சென்றன.

ஒரு நாள், பூருவதேயத்து அரசன் அத்திபதியின் மைத்துனனாய பிரமதருமன், தலைநகர் இடவயமா நகர்க்கு வந்தான். அறநூல்களை அறிந்தோனும், முக்கால நிகழ்ச்சிகளையும் முன்னின்றுணரவல்ல மூதறிவுடையோனுமாய அவன், அரசனை அடைந்து அவனுக்கு

அறவுரை பல வழங்கினான். இறுதியில், "அத்திபதி! இந்நாவலந் தீவில் இற்றைக்கு ஏழாம் நாள் நில நடுக்கம் உண்டாகும். அதன் பயனாய் உன் தலைநகராய இடவயம் எனும் இப்பேரூரும், நாகநாட்டில் நானூறு யோசனை பரப்புள்ள பெருநிலமும் கடல் நீர் புகுந்து பாழுறும். ஆகவே, இந்நகரை விட்டு இன்றே நீங்கி வேற்றிடம் சென்று வாழ்க" எனக் கூறினான்.

மைத்துனன்பால் தான் கேட்ட செய்தியைத் தன்னாட்டு மக்களுக்குப் பறையறைந்து தெரிவித்தான். அது கேட்டு அந்நகர் வாழ் மக்கள் ஆவும் மாவும் கொண்டு வேற்றிடம் சென்றனர். அத்திபதி, தானையோடு புறப்பட்டு, வடதிசை நோக்கிச் சென்றான். இடை வழியில் காயங்கரை எனும் பேராறு குறுக்கிட்டது. அரசன், அதன், கரைக்கண் அமைந்த பொழிலில் பாடி அமைத்துச் சிலநாள் தங்கினான்.

அரசனைப் பின்பற்றி வந்த அரசிளங் குமரனோடு இலக்குமியும் ஆங்கு வந்திருந்தாள். மன்னனோடு வந்திருந்த மாதவமுனிவனாய பிரமதருமன் அனைவர்க்கும் அறம் உரைத்துக் கொண்டிருந்தான். முனிவனுக்கு உணவளித்துப் பேணும் பொறுப்பினை இலக்குமியும், இராகுலனும் ஏற்றுக்கொண்டனர். ஒவ்வொரு நாளும் முனிவன் விரும்பும் உணவை விடியற் காலத்திற்கு முன்பாகவே ஆக்கி அளித்து வந்தனர். ஒருநாள் அடிசிற்றொழிற்குத் துணைபுரியும் பணியாள், யாது

காரணத்தாலோ உரிய காலத்தில் வந்திலன். காலங் கடந்து வந்த குற்றம் அவன் கருத்தை உறுத்திற்று. அவனைக் கண்ட பணியாளின் உடலும் நடுங்கிற்று. அந்நடுக்க மிகுதியால், கால்வழுக்கி வீழ்ந்தான். அவன் வீழ்ந்ததால் அடிசிற் கலம் உடைந்து அழிவுற்றது.

பணியாள் காலம் கழித்து வந்தமைக்கே இராகுலன் அவன்பால் கடுஞ்சினம் கொண்டிருந்தான். அந்நிலையில் பணியாள் கால் வழுக்கி வீழ்ந்து கலத்தைப் பாழாக்கவே, அவன் சினம் அளவிறந்துவிட்டது, அருகில் இருந்த உடைவாளை எடுத்தான். வேலையாளைத் தலை வேறு உடல் வேருக வெட்டி வீழ்த்திஞன்.

இராகுலன் சினம் மிக்குச்செய்த செயலைக் கண்ணுற்ற பிரமதருமன், இலக்குமியை அழைத்து, "அரசிளங்குமரி, இராகுலன் அடாது புரிந்த இச்செயலால் இற்றைக்குப் பதிஞரும் நாள் திட்டிவிடம் எனும் பாம்பு தீண்ட இறந்துபோவான்; கணவனைப் பிரிந்து கைம்மை நோன்பு மேற்கொள்ளக் கருதாது நீ, அவனேடு அழல் புகுந்து உயிர் இழப்பாய்; இது நும் ஊழ்வினைப் பயன்; உள்ளம் கலங்காதே" என உணர்த்திஞன்.

கணவன் கடுஞ்சினத்தால் நேர இருக்கும் கேட்டினை எண்ணி நடுங்கிஞள் இலக்குமி. அந்நிலையில் முனிவன் கூறியவாறே, இடவயமும், நாகநாடும் நில நடுக்கத்தால் கடலில் ஆழ்ந்து போயின. முனிவன்,

முன்னறிந்து மொழிந்தனவற்றுள் ஒன்று உண்மை யானமை காணவே, இலக்குமி, அவன் உறைத்த மற் ெறன்றும் மாருது என்பதை அறிந்து மாளாத்துயரில் ஆழ்ந்தாள்.

தலைநகர் அழிவுற்றது என்பதை அறிந்த அத்திபதி, காயங்கரை நதியைக் கடந்து அவந்திமாநகர் அடைந்து, அதை அரசிருக்கையாகக் கொண்டு வாழ்ந்திருந்தான். பிரமதருமன் கூறிய நாளும் பிறந்துவிட்டது; அரசனும், அவன் சுற்றமும் எவ்வளவோ விழிப்பாயிருந்தும், திட்டிவிடம், இராகுலனை எவ்வாறே தீண்டிவிட்டது. இராகுலன் இறந்து விட்டான். அவன் உடலை ஈமத்தில் இட்டு எரியூட்டினர். கணவனை இழந்த காரிகை பெருந்துயருற்ருள். பிறவியை வெறுத்தாள். ஊரும், உறவும் ஒன்றுகூடித் தடுக்கவும் கேளாது, தீப்பாய்ந்தும் உயிர்விட்டாள்.

இலக்குமி இறந்துவிட்டாள். ஆனால் அவளாற்றிய இல்லறப் பயன் அழியவில்லை. சாது சக்கரனுக்கு உணவூட்டிய நல்லறம் தனக்குரிய பயனை அவளுக்கு அளிக்க ஆர்வம் கொண்டிருந்தது. அதன் பயனுய், அவள் சோணுட்டில், காவிரிப்பூம்பட்டிணத்தில், பரத்தையர் குலத்தில் பிறந்தும் பலராலும் போற்றிப் புகழப்படும் மாதவியின் மகளாய் வந்து பிறந்தாள். பழம் பிறப்பில் ஆற்றிய பேரறப் பயனுய் தவநெறி மேற்கொண்டாள். அதன் பலனுகவே, உயிர்களின்

பசி போக்கும், அமுதசுரபி யெனும் உயர்ந்த உண் கலத்தைப் பெற்றாள். அதன் பயனாகவே மணிமேகலா தெய்வத்தின் துணையும் புத்த பீடிகைக் காட்சியும் கிடைக்கப் பெற்றாள். அவற்றின் துணையால் தன் பழம் பிறப்பை உணர்ந்து கொண்டது அந்நல்லறப் பயனே; அதுவே, தன்மீது காதல் கொண்டு அதன் காரணத்தால் கொலையுண்ட அரசமகன் உதயகுமரன், பழம் பிறப்பில் தன் கணவனாகிய இராகுலனே என அறிந்து அவன்பால் மனம் நெகிழ்ந்து மாசுபட இருந்த மணிமேகலையைத் தடுத்துத் தவநெறிகெடாத் தூயோளா கத் துணை புரிந்தது. பழம் பிறப்பில் தனக்குத் தமக்கைய ராய்த் தோன்றிய தாரையும் வீரையும் இப்பிறவியில் முறையே மாதவியும், சுதமதியுமாகப் பிறந்து தனக்குத் தாயாகவும் தோழியாகவும் நின்று துணை புரியச் செய்ததும், இலக்குமி அன்று ஆற்றிய அறப்பயனே ஆகும்.

கணவன் செய்யும் கேட்டினைத் தவிர்க்க இயலும் காலத்தில் தவிர்த்து அவனுக்கு வரவிருந்த கேட் டினைக் கொடுத்தும், அதைத் தவிர்க்கமாட்டாது போக, அவன் அக்கேட்டினைச் செய்து கெட்டழிந்த போது அவனோடு தானும் இறந்து, இறவாப்புகழ் பெற்ற இலக்குமி, பின்னர் எடுத்த பிறவியிலும், மணிமேகலை யுருவில் தவநெறி மேற்கொண்டு பவவினை அறுத்த பெரியோள் ஆயினாள். வாழ்க அவள் பெரும் பெயர்!

# 4. காய சண்டிகை

மலைகளில் உயர்ந்தது இமயம். அதனால் அது எக்காலத்தும் பனிப்பாறைகளால் மூடப் பெற்றிருக்கும் பனிக்கட்டிகள் வெண்ணிறம் வாய்ந்தன. பகற்போதில் ஞாயிற்றின் ஒளியும், இராப்போதில் திங்களின் ஒளியும் படர்வதால், இமயம் எப்போது நோக்கினும், வெள்ளொளி வீசித்திகழும். அதனால் அது வெள்ளிமால்வரை எனவும் வழங்கப்பெறும்.

வெள்ளியங்கிரியைச் சூழ உள்ள நாடு விஞ்சையர் நாடு அல்லது வித்தியாதரவுலகு எனப் பெயர் பெறும். பற்பல பேரூர்களையும், சிற்சில சிற்றூர்களையும் கொண்ட அந்நாட்டில் வாழ்வார், விஞ்சையர் அல்லது வித்தியா தரர் என அழைக்கப்பெறுவர். விஞ்சையர் அழகிற் சிறந்தவர்! ஆடல் பாடல் போலும் அருங்கலைகளில் கை தேர்ந்தவர்! வான வீதியில் உலாவல், வேற்றுருக் கொள்ளுதல் போலும் அறிவுத்திறனும் வாய்க்கப்பெற்றவர் என நூல்கள் நுவல்கின்றன.

விஞ்சையர் நாட்டில், காஞ்சனபுரம் என்பது ஒரு பேரூர். பசியையும், பிணியையும், பகையையும் பாழாக்க வல்ல பெருவளமும், பொன்னும் நவமணியும் போலும் பொருள்வளமும் நிறைந்திருந்தமையால், அம்மாநகர் பெருமதிலால் சூழப்பெற்று அரிய காவலும் அமையப் பெற்றிருந்தது. அப் பேரூரில் காஞ்சனன் எனப் பிறந்த ஊரின் பெயரையே தன் பெயராகக்கொண்ட ஒரு

விஞ்சையன், காயசண்டிகை என்ற தன் மனைவியோடு வாழ்ந்தான்.

காஞ்சனன் கலையார்வம் நிரம்பப் பெற்றவன். மலை வளம் காணல், ஆற்று நீராடல் போன்றவற்றில், ஆர்வம் மிக்கிருந்தான். அதனால், வடகோடியில் உலகெலாம் விரும்பும் வெள்ளிமால் வரையகத்தில் வாழ்ந்திருந்தும், தென்கோடிக் கண்ணதாகிய தமிழகத்தும் பொதியமலைக் காட்சிகளைக் கண்டு களிப்புறவேண்டும்; அம்மலையினின்றும் பெருக்கெடுத்துப் பாயும் காட்டாற்று நீரில் ஆடிக் களிப்புற வேண்டும் என்ற வேட்கையுடையனானான். ஒருநாள், மனைவியோடு வானூடெழுந்து தமிழ்நாடு நோக்கிப் பறந்தான். இருவரும் பொதிய மலையை அடைந்தனர். மலைக்காட்சிகளைக் கண்டு மனங்களித்தனர் அம்மலைவளர் சந்தன மரங்கள் வீசும் மணம் கவர் மணத்தை நுகர்ந்து மகிழ்ந்தனர். அம்மலையினின்றும் பெருக்கெடுத்தோடும் காட்டாற்று வெள்ளங்களின் கவின்மிகு காட்சியைக் கண்டனர். அவற்றில் புகுந்து நீராடிப் பேரின்பம் கொண்டனர். இறுதியில் ஒரு காட்டாற்றங்கரையில், ஆற்று வெள்ளம் அவ்வப்போது கொண்டுவந்து குவித்த வெண்மணல் மேட்டில் அமர்ந்தனர்.

வனப்பு மிகுந்தவள்; விஞ்சைகளில் வல்லவள்; கருத்தொத்த கணவனைப் பெற்றவள் என்றதால், காயசண்டிகை இயல்பாகவே செருக்கு வாய்ந்திருந்தாள். பொதியமால் வரையையும் பெரு வெள்ளம் புரண்டோடும்

பேராறுகளையும் கணவனோடு கண்டுகளித்த பேறு பெற்றமையால் அவள் சிந்தை, செருக்கில் மேலும் ஆழ்ந்துவிட்டது. அதனால், மணல் மேட்டில் அமைதியாகச் சிறிது பொழுது அமர்ந்திருக்கவும் அவள் விரும்பவில்லை; எழுந்தாள். கணவனை விடுத்துக் கானாற்றங்கரையே நடந்து சென்றாள். அவ்வாறு செல்வாள், ஓரிடத்தில் ஒரு பெரிய தேக்கிலையில், நாவற்கனி யொன்று வைக்கப் பெற்றிருப்பதைக் கண்டாள். நிறத்திலும், அளவிலும் பருத்த பனம்பழத்தை ஒத்திருந்தது அக்கரு நாவற்கனி. அதைப் பார்த்த அவள் செருக்கு மிகுதியால், அதைத் தன் காலால் மிதித்துக் கெடுத்தாள்.

காயசண்டிகை, கனியைத் தன் காலால் உதைத்து உருக்குலைப்பதை, அப்போது ஆங்கு வந்த ஒரு முனிவன் பார்த்துவிட்டான். விருச்சிகன் என்பது அவன் பெயர். மார்பில் முறுக்குண்ட பூணூல்; முடியில் திரித்து முறுக்கிய சடை; இடையில் மரவுரி ஆடை; இவற்றோடு காட்சியளித்தான் அக்கானகத்து முனிவன். தேக்கிலையில் நாவற்கனியை வைத்தவனும் அவனே. அதை அங்கு வைத்துவிட்டு, அக் கானகத்திற்கு அண்மைக்கண் உள்ளதும், தன்னகத்தே மலர்ந்த மலர்களின் மணம் நெடுந் தொலைவும் நாறுவதுமாய ஒரு பொய்கையில் நீராடப் போயிருந்தான். நீராடி, நாட் கடனை முடித்துக்கொண்டு நாவற்கனியை உண்ணும் நினைவோடு வந்த அவன், காயசண்டிகை கனியை மிதித்து அழிப்பதைப் பார்த்து விட்டான். கோபம் கொதித்து எழுந்தது.

"ஏடி! பெண்ணே! என்ன காரியம் செய்து விட்டனை; இந்நாவற்கனி எளிதில் கிடைக்கக் கூடியதல்லவே; நாவற்கனிகள் அனைத்தினும் சிறந்தது. கடவுட்டன்மை வாய்ந்தது. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை ஒரு பழம் ஈனும் இயல்பு வாய்ந்த மரத்தினின்றும் பெற்றது. தன்னை உண்டவர்க்கும் பன்னிரண்டாண்டளவும் பசி நோய் உண்டாகாவாறு காக்கும் பெருமை வாய்ந்தது. அத்தகு நன்மை வாய்ந்த நாவற்கனியை அழித்து விட்டனையே; நானோ, பன்னிரண்டாண்டிற்கு ஒரு முறையே உண்ணும் உயர்நோன்பு மேற்கொண்டவன். அதனால் இக் கனியை அரிதிற் காத்து உண்ணும் வழக்கம் உடையேன். இப்போது, நீ அக்கனியை அழித்துவிட்டாய். இனி வரும் பன்னிரண்டாண்டளவும் என்னைப் பற்றி வருத்தும் பசி நோயை எவ்வாறு தாங்கி உயிர் வாழ்வேன்! இவ்வாறு என்னை வருந்தவிட்ட நீ நன்கு வாழ்வையோ? வாழக் கூடாது நீ; வாழவிடேன் நான். உன் செருக்கு அழிதல் வேண்டும். பன்னிரண் டாண்டளவும் பசி நோயால் பாழுறப் போகும் என்னைப் போலவே, நீயும் பாழுறல் வேண்டும். வானூடெழுந்து விரும்பும் இடங்கட்கு விரைந்து செல்லவுதவும் மந்திரம் உனக்கு மறந்து போகட்டும். உண்ண உண்ணப் பசி நீங்கா யானைத்தீ எனும் உறுநோய் உன்னைப் பற்றி வருத்துமாக, உன்னைப் பற்றி வருத்தும் அப்பாவங்கள், பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து நான் உண்ணும் வரை உன்னை விட்டு அகலாதிருந்து உன் சக்தியை அழிக்குமாக" எனச் சினந்து சாபம் தந்து மறைந்துவிட்டான்.

காதலியைத் தொடர்ந்து, காஞற்றுக் காட்சிகளைக் கண்டுகொண்டே வந்த காஞ்சனன், அவள் கனியைச் சிதைத்ததைக் கண்டு, அதனுல் அவளுக்கும் அவள் கணவனுகிய தனக்கும் யாது கேடு நேருமோ என அஞ்சினன். அதனுல், அவளை ஆங்கே விடுத்து அகன்றவன், விருச்சிகன் மறைந்த பின்னரே அவன் மீண்டான்; மனைவியை நோக்கி, ''மதியிழந்து மாத்துயர் உற்றனை. ஈண்டிருப்பின் இடர்பல உண்டாம். ஆகவே, இனி ஒரு நாழிகையும் ஈங்கிருத்தல் கூடாது. நம் நாட்டிற்கு இப்போதே ஓடி விடுதல் வேண்டும். வானுடெழுக'' எனக் கூறி விரைந்தான். அந்தோ! அவளால் அது இயலவில்லை. காயசண்டிகை மந்திரத்தை நினைவூட்டி நினைவூட்டிப் பார்த்தாள். முடியவில்லை. அது அவள் மனத்தைவிட்டே மறைந்துவிட்டது. அதை உணர்ந்தாள் அவள். ''அன்ப! முனிவன் இட்ட சாபத்தால் மந்திரம் மறந்தேன். அது மட்டுமன்று. வயிறுகாய் பெரும் பசி வேறு என்னை வாட்டத் தொடங்கிவிட்டது. அதன் வெம்மையைத் தாங்கமாட்டாது, என் உயிர் என்னை விட்டுப் பிரிந்துவிடுமோ என்று அஞ்சவேண்டியதாகிவிட்டது. என் செய்வேன்!'' எனக் கூறிக் கண்ணீர் உகுத்தாள்.

காஞ்சனன் மனைவி கூறியது கேட்டு மனங் கலங்கினன்; மறந்த மந்திரத்தை அவளுக்கு நினைவூட்டல் தன்னுல் இயலாதாயினும், அவளை வருத்தும் வான்பசியைப் போக்குதலாவது இயலும் என நம்பினுன். பசிக் கொடுமையால் காதலி படும் பாட்டைக் கண்டு

கண் கலங்கினான். உடனே ஓடினான். காய் கனி கிழங்கு வகைகளில் நல்லனவற்றைத் தேடி நிறையக் கொணர்ந்து மனைவி முன் குவித்தான். அவள், அவற்றுள் ஒன்றையும் விடாது உண்டு தீர்த்தாள். ஆனால், அந்தோ! அப்போதும் அவள் பசி நோய் அகலவில்லை. நோய் கொடுமை தாளாது அவள் நொந்தாள்.

காதலிக்கு வந்துற்ற கேட்டினைக் கண்டு காஞ்சனன் கலங்கினான். அவளுக்குத் தன்னால் எவ்வுதவியும் செய்ய இயலாமை எண்ணி இடர் உற்றான். இறுதியில், "அன்பே! நாவலந்தீவில் தென் கோடியில் உள்ளதான இத்தமிழ் நாட்டில் புகார் எனப் பெயர் பூண்ட ஒரு பெரு நகர் உளது. குறையாப் பெருநிதி படைத்த பெருஞ் செல்வர்களின் வாழிடம் அப்பேரூர். அவர்கள் வளங் கொழிப்பது ஒன்றே வாழ்வின் பயனும் என எண்ணும் பண்பிலார் அல்லர். வறுமை காட்டி வந்து இரப்பார்க்குத் தம் வளத்தை வாரி வாரி வழங்கி வாழ்தலே விழுமிய வாழ்வாம் எனக் கொள்ளும் வான்புகழ் உடையவர் அவ் வணிகப் பெருமக்கள். அந்நகர் மிக்க தொலைவில் உளது. பறந்து அடைதல் உன்னால் இயலாத இப்போது அம் மாநகரை நடந்து அடைய நாள் பல ஆகும். எனினும், ஊக்கம் தளராது சென்று அவ்வூர் அடைக. உனக்குச் சாபவிடை ஆகும் வரை ஆண்டே வாழ்க" என அறிவுரை வழங்கி, அவளைப் பிரிய மனமின்றிப் பிரிந்து தன்னூர் அடைந்தான்.

காஞற்றங்கரை நிகழ்ச்சியால் காயசண்டிகையின் செருக்கடங்கிற்று. கணவன் இட்ட கட்டளையை ஏற்றுக் காவிரிப்பூம்பட்டினம் அடைந்து வாழ்ந்திருந்தாள். காஞ்சனன், ஆண்டுதோறும் புகார் நகரில் நிகழும் பெரு விழாவாகிய இந்திர விழாவின்போது வந்து, காதலியைக் கண்டு, அவளுக்கும் ஆறுதளித்துத் தானும் சிறிது ஆறுதல் உற்றுச் செல்லத் தொடங்கினன். கடந்த ஆண்டுகளேயும், இனி, நோயோடு கடக்க வேண்டிய ஆண்டுகளேயும் கணக்கிட்டவாறே வாழ்நாளேக் கழித்து வந்தாள் காயசண்டிகை.

புகார் நகரத்துப் பெருங்குடிச் செல்வர் துணையால் பதினேராண்டுகளேக் கழித்துவிட்டாள். பன்னிரண்டாம் ஆண்டும் தொடங்கிவிட்டது. தனக்குச் சாபவிடை உண் டாகும் நாளே ஆவலோடு எதிர்நோக்கியிருந்தாள். பற்றி வருந்தும் பசி நோய் எவ்வாறு நீங்குமோ? என்று நீங்குமோ? யாரால் நீங்குமோ என்ற வேட்கை தவிர, அவள் உள்ளத்தில் வேறு உணர்வுகள் இடம் பெற்றில.

இந்நிலேயில் அனைவரும் வியக்கும் செய்தியொன்று அவள் காதில் பட்டது; மணிமேகலா தெய்வத்தால் மணி பல்லவத் தீவிற்குக் கொண்டு செல்லப்பட்ட மாதவி மகள் மணிமேகலே, புகார் நகர் மீண்டாள். மீண்டவள் அள்ள அள்ளக் குறையாததும் அனைத்துயிர்களின் பசிநோயைப் போக்க வல்லதும் ஆய அமுதசுரபி எனும் அரிய கலத் தோடு வந்துள்ளாள் என்ற செய்தி புகார் நகரத்துப் பெரு வீதிகளில் பேசப்பட்டது. அச்செய்தி காயசண்டிகையின்

காதுகளில் அமிழ்தம்போல் சென்று பாய்ந்தது. பன்னிரண்டு ஆண்டுகளாகத் தன்னைப்பற்றி வருத்தும் பசிநோய் அன்றே அகன்றதுபோல் அகம் மகிழ்ந்தாள். உடனே, மணிமேகலையைத் தேடி அடைந்தாள். அவள்பால் தன் வரலாறு உரைத்து வருந்தினாள்.

காயசண்டிகை கடந்த பல ஆண்டுகளாகக் காவிரிப் பூம்பட்டினத்துத் தெருக்களில் அலைந்து திரிந்தவளாதலின், அவளை, மணிமேகலைபண்டே அறிந்திருந்தாள். அதனால், தன்னை வந்தடைந்த அவளை அன்போடு வரவேற்றாள். வாடாத இவள் வயிற்று நோயைப் போக்கும் பெருமை, அமுதசுரபி அளிக்கும் முதற்பிடிக்கு உண்டாகுக என உளம் கொண்டாள். அவ்வுணர்வோடு அமுதசுரபி ஏந்தி வீதியில் புறப்பட்ட மணிமேகலை அமுதசுரபியினின்றும் ஒரு பிடி எடுப்பதன் முன்னர், சிறந்தார் ஒருவர் அளிக்கும் ஒருபிடி உணவை அதில் இடுதல் நன்றென நினைத்தாள்.

மணிமேகலையின் மனக்குறிப்பைக் காயசண்டிகை கண்டுகொண்டாள். உடனே, அவளுக்குக் கடல்வளம் கொழிக்கும் அக்காவிரிப்பூம்பட்டினத்தில், அவ்வளத்தைகொண்டு வந்து குவிக்கும் வணிகர் குடியில் பிறந்த ஆதிரை என்பவள் வரலாற்றையும், அவள் கற்பின் பெருமையையும் விரிவாக எடுத்துரைத்து, ''மணிமேகலை அவ்வாதிரைமனை புகுந்து முதற்பிச்சை யேற்றல் முறையாம்'' என இயம்பினாள். அவ்வாறே அவளை ஆதிரை மனைக்கு அழைத்துச் சென்றாள். மணிமேகலையின்

வருகையையும், அவள் மனக்கருத்தையும் ஆதிரை உணர்ந்து கொண்டாள். உடனே மனையகம் புகுந்து, அங்கை நிறைய உணவேந்தி வந்து, "பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக" என உளமார வாழ்த்தி அமுத சுரபியில் இட்டாள்.

ஆதிரைபால் ஆருயிர் மருந்தினைப் பெற்ற மணிமேகலை, அதில் ஒரு பிடி எடுத்துக் காயசண்டிகைக்கு அளித்தாள். அதைக் காயசண்டிகை ஆர்வமோடு வாங்கித் தன் வயிற்றினுள் இட்டாள். உடனே, இராமன் இலங்கை அடைவான் வேண்டிக் கடலிடையே அணை அமைக்க முனைந்த வானரப் படைகள் கொண்டு வந்து எறிந்த மலையும் மரங்களுமெல்லாம், ஆழ்கடல் நீரில் ஆழ்ந்து இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போனது போல், உண்ட உணவெல்லாம் எங்கோ மறைந்து போகத் தன்னை நெடிது வருத்திய யானைத்தீ நோய் மணிமேகலை அளித்த ஒருபிடி உணவால் உள்ளழிந்து போனமை கண்டு மனம் நிறைமகிழ் வெய்தினள். தனக்குச் சாபவிடை கிடைத்துவிட்டது; அவ்வளவும் மணிமேகலையின் அருள் என நினைந்து அவளை வாழ்த்தி வணங்கினள். பின்னர், "ஆருயிர் மருத்துவியாம் என் அன்னை! கேள்; பிறவித்துயர் கெடப் பெருந்தவம் மேற்கொண்ட பெரியோர்கள் வாழும் சக்கரவாளக் கோட்டத்தில் அறச்சாலை ஒன்று உளது. வறுமையால் வருந்தி வருவோர்களை யெல்லாம் வரவேற்று வாழிடம் நல்கும் வகையில், அதன் வாயில் அடையா நெடுவாயிலாய்

எப்போதும் திறந்து கிடக்கும். ஆங்கு உலகெங்கிலும் உள்ள உறுபசியாளர்களும் ஆதரிப்பார் இன்மையால் அலைந்து திரிவோர்களும் பல்லாயிரக் கணக்கில் பசி நோயால் வருந்தி, இடுவோரை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கின்றனர். அமுத சுரபி அவர் பிணிபோக்கும் அரு மருந்தாகுக. நீ ஆங்குச் செல்வாயாக; நான் என் நாடு அடைகின்றேன்" எனக் கூறி அவள்பால் விடை பெற்றுக் கொண்டாள்.

இருந்து அறம் புரிதற்கு ஏற்ற இடத்தை மணி மேகலைக்கு அறிவித்த காயசண்டிகை என்பாள் பிறந்த ஊரைக் காணவேண்டும். ஆண்டு தவறுமல் ஈண்டுவந்து தன் நிலைகண்டு இரங்கிச் செல்லும் கணவனைக் காண வேண்டும். சாப விடை பெற்ற இன்பச் செய்தியை இயம்பி அவன் துன்பத்தைத் துடைத்தல் வேண்டும் எனத் துடித்தாள். உடனே மந்திரம் ஓதி வானுடெழுந்து விஞ்சையர் உலகு நோக்கி விரைந்தாள். இடையே விந்த மலை குறுக்கிட்டது. விந்தம் துர்க்கையின் வாழிடம். அதனால் வான்வழிச் செல்வார் விந்தத்தை வலம் வந்து செல்வதல்லது கடந்து செல்லக் கருத்திலும் நினையார். கடந்து செல்வார் கேடுறுவார். காயசண்டிகையின் உள் ளத்தில் பிறந்த ஊர்ப்பற்றும், அன்பனைக் காணும் ஆர்வ முமே ஓங்கிமுன் நின்றமையால் இவ்வுண்மையை மறந்து விட்டாள்; விந்த மலைமீது பறந்துவிட்டாள். அதை, அம்மலையைக் காத்து நின்ற விந்தாகடிகை கண்டாள்; கடுஞ் சினம் கொண்டாள். தன் பேரொளிப் பிழம்பால்,

யறந்து செல்லும் காயசண்டிகையைப் பற்றி யீர்த்துத் தன் வயிற்றகத்தே அடக்கிக் கொண்டாள்.

வளமார் வாழ்வு வாழ வேண்டும்; வாழ்க்கையின் வனப்பினைக் காணவேண்டும் எனும் வேட்கை மிகு தியால், கொடிய யானைத்தீநோயைப் பன்னிரண் டாண்டளவும் பொறுத்து நோயுற்று, வேற்று நாட்டில் வாழ்ந்து வருந்தியவள், அப்பேரின்ப வாழ்வு தன்னை அணுகும் நிலை வந்துற்ற அந்நிலையில், விந்தாகடிகையின் வயிற்றகத்தே சிறைப்பட்டு அழிந்துவிட்டாள். அந்தோ! அவள் நிலை அவலம்! அவலம்!

காயசண்டிகைக்கு நேர்ந்த கதியைச் காஞ்சனன் அறியான். அவள் வரும் நாளை ஆவலோடு எதிர் நோக்கிக், காலக்கழிவைக் கணக்கிட்டுக் கொண்டிருந் தான். பன்னிரண்டு ஆண்டுகளும் கழிந்துவிட்டன. ஆயினும் அவள் வந்திலள். காஞ்சனுக்குக் கவலை மிகுந்தது. உடனே காவிரிப்பூம்பட்டினம் வந்து சேர்ந்தான். ஆங்குப் பூத சதுக்கம் நாற்சந்திகள், உவவனம் முதலாம் பொழில்கள், பொது வில்லங்கள் பட்டி மண்டபம் முதலாம் மன்றங்கள், மாதவர் உறை யும் தவப்புள்ளிகள், நுதல் விழி நாட்டத்து இறை யோன் கோயில் முதலாம் கோயில்கள் ஆகிய எங்கும் தேடித் திரிந்துகொண்டிருந்தான். நிற்க.

மணிமேகலை மன்றம் புகுந்து, பிச்சைப் பாத்திரம் கையில் ஏந்தி மக்கள் பசியைத் தீர்த்துக் கொண்டிருந்

தாள். அச்செய்தியை, அந்நாடாளும் அரசன் மகன் உதயகுமாரன் அறிந்தான். மணிமேகலைபால் மாருக் காதல் கொண்டவன் அவன். அவள் அன்பைப் பெற முன்னம் ஓர் முறை முயன்றும், மணிமேகலா தெய்வத்தின் குறுக்கீட்டால், காரியம் கைகூடப் பெருது கலங்கி வாழ்பவன் அவன். அவன், மணிமேகலை, இப்போது எவரும் எளிதில் புகவல்ல ஊரம்பலத்தில் உள்ளாள் என அறிந்ததும், அவளைக் கைப்பற்றி வர ஆங்கு விரைந்தான். மணிமேகலையைக் கண்டு நெகிழ்ந்தது அவன் மனம். அவளை அணுகி, "நல்லாய்! தவநெறி மேற்கொண்டது தக்கதாமோ? நனியிளமைப் பருவத்தளாய நினக்கு அது நன்ருமோ?" என வினவி நின்ருன். போன பிறவியில் அவன் தன் கணவன் என்பதை அறிந்து, அவள் மனமும் அவன்பால் நெகிழ்ந்தது. ஆயினும், அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "அரசன் மகனே! மக்கள் யாக்கை, பிணி மூப்புற்று அழியவல்லது என அறிந்து, அறநெறி மேற்கொண்டேன்" என விடையளித்தாள். பின்னர், அவனுக்கு அணித்தாக, மேலும் ஆங்கிருந்தால், அவன் அடாதது புரிதலும் உண்டாம். தன் உள்ளம் அவன் ஆசைக்கு அடிமையாதலும் நேர்ந்துவிடும் என நினைந்து நடுங்கிஞள். அதனுல், அரசன் மகன் ஆண்டிருக்க அவள் ஆங்கிருந்த சம்பாபதி கோயிலுள் புகுந்து கொண்டாள்.

கோயிலுட் புகுந்துகொண்ட மணிமேகலை, எப்போதும் ஈண்டே அடையுண்டு கிடத்தல் இயலாது. வெளியே

செல்விஞே வேந்தன் மகன் விடான். இவ்விடர் நிலையை எவ்வாறு தவிர்ப்பேன்" என எண்ணிக் கலங்கிஞள். இறுதியில் ஒரு வழி புலப்பட்டது. "காயசண்டிகையை இவ்வூரார் அனைவரும் அறிவர்; அவள் பசி நோயை அறியும் இவ்வூரார், அவள் பசி தீரப்பெற்றுப் புகார் நகர் நீங்கிப் போய்விட்டதை அறியார். ஆகவே அவள் வடிவை நான் மேற்கொண்டால், என்னை அவ்வுருவில் காணும் எவரும், என்னைக் காயசண்டிகையென்றே கருதுவர். காவலன் மகனும் என்னைக் கைப்பற்றக் கருதான்" எனத் துணிந்தாள். உடனே மணிமேகலா தெய்வம் அறிவித்த மந்திர ஆற்றலால் காயசண்டிகை வடிவு கொண்டு வெளியே வந்தாள். மன்னன் மகன், அவளைக் காயசண்டிகை எனவே மயங்கவுணர்ந்து மன்றம் விட்டகன்ருன்.

மணிமேகலை, அன்றுதொட்டு, காயசண்டிகை வடிவிலேயே காலங்கழித்து வந்தாள். அவ்வடிவோடே சென்று ஆங்காங் குள்ளாரின் பசிப்பிணியைப் போக்கி வந்தாள். காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் அனைவரும் அவளைக் காயசண்டிகை என்றே கருதினர்.

இந்நிலையில், காயசண்டிகையைத் தேடித் திரிந்த காஞ்சனன், ஒரு நாள், மணிமேகலையை ஊரம்பலத்தில் கண்டான். அவளைத் தன் மனைவி யென்றே மனத்திடைக் கொண்டான். அவளை அணு கிஞன். தீராப் பசி நோயால் துயர் உற்றவள் தன்னைச் சூழ்ந்து நிற்கும் பல்லோர் பசியைப் போக்கும் காண்டற்

கினிய காட்சியைக் கண்டு களிப்புற்ருன். "உன் கையில் இருப்பதோ ஒரு கலம்; ஆனால் அதனால் பசிதீரப் பெறுவோரோ பலர்; உன்னைப் பற்றி வருத்திய யானைத்தீ நோயின் கொடுமை கண்டு உன்பால் பரிவுகொண்ட வானவர், இவ்வற்புதப் பாத்திரத்தை உனக்கு அளித்தார் கொல்லோ?" என வினவியவாறே அவளை அணுகி நின்ருன்.

மணிமேகலை காயசண்டிகையை அறிவளேயல்லது, காஞ்சனனை அறியாளாதலின், அவனுக்கு விடையளித்திலள். அவன் அணுக அணுக, அவள் அகன்று அகன்று நின்ருள். அவனை விடுத்து, அவன் வருதற்கு முன்னரே ஆங்கு வந்திருந்த அரசன் மகனை அணுகினாள். அவனுக்குத் தெருவூடே செல்லும் நரைமூதாட்டி ஒருத்தியைக் காட்டி, இளமைப் பருவத்தில் அம்முதியாள் பெற்றிருந்த பேரின்ப நிலையினை நினைவூட்டி நிலையாமை இயல்பினை அவன் உளங்கொள உணர்த்தத் தொடங்கினாள். ஆனால், அவ்வறிவுரை கேட்கும் அவன் அறிவு தெளிந்திலது. "இவள் மணிமேகலையே; நம்மை ஏமாற்றவே இவ்வுருக் கொண்டு திரிகிருள்; அயலான் ஒருவன் இவளுக்குப் பண்டே அறிமுகமாகியுள்ளான் போலும்; இப்புதியான் அவன் போலும். இவ்விருவர் தம் உறவினை இரவு வந்து காண்பேன்" என உளத்திடை எண்ணி அகன்ருன்.

காஞ்சனன் மணிமேகலையைத் தன் மனைவியென்றே கருதினனாதலின், மணிமேகலை தன்னை மதியாது மன்னன்

மகனை அணுகி அறிவுரை கூறி அனுப்புவதைக் கண்ட தும் கடுஞ்சினம் கொண்டான்; கண்கள் சிவப்பேறின. இவள் இவன்பால் காதல் கொண்டுள்ளாள். அதனா லேயே கணவனாகிய என்னை மதித்திலள். சாபவிடை பெற்ற பின்னரும் ஊர் திரும்பாது ஈண்டேயிருப்பதும் அதனாலேயே. இவளையும், இவனையும் உயிரோடு விடேன். இன்று இரவு இவன் ஈண்டு வருவான். இவனை அப்போது அழித்தல் வேண்டும் என்ற வஞ்சம் நெஞ்சில், எழ, விஞ்சையன், புற்றில் அடங்கும் அரவுபோல், மன்றத்தின் உட்புகுந்து ஒருவரும் அறியாவாறு மறைந் திருந்தான்.

இரவு வந்தது. ஊரெல்லாம் உறங்கிவிட்டது. மணிமேகலைபால் கொண்ட மாருக்காதலால் உறக்கம் இன்றிக் கிடந்த உதயகுமரன், இடையாமத்தில் எழுந் தான்; யானைவேட்டை விரும்பி எழும் புலியேபோல் அரண்மனை வாயிலைக் கடந்து வெளிவந்தான். அம்பலம் அடைந்தான். பாம்புறையும் புற்றிடையே புகுவான்போல், அடிமேல் அடியிட்டு அம்பலத்தின் உட்புகுந்தான். அவன் வரும் அரவம் கேட்டிலதாயினும், அவன் மார்பிற் கிடந்து நாறும் சந்தனத்தின் மணம் அவன் வருகையை பலர் அறியத் தூற்றி விட்டது. அவன் வருகையை எதிர் நோக்கி விழித்திருந்த விஞ்சையன், அவன் வருகையை அறிந்து கொண்டான். உடனே படம் விரித்தெழும் பாம்புபோல் எழுந்து, அவன்பின் சென்று, தோள் துணிந்து வீழுமாறு, அவனை வாளால் வெட்டிச் சாய்த்

தான். உதயகுமரன் உயிரிழந்து வீழ்ந்தான். காஞ்சனன் உடனே உள்ளே விரைந்து சென்று, "வானூடெழுந்து விஞ்சையர் உலகம் புகுவோம்; வருக விரைந்து" எனக் கூறியவாறே, மனைவியின் வடிவில் நின்ற மணிமேகலையின் கையைப் பற்றி ஈர்த்தான்.

அம்பலத்துத் தூண் ஒன்றில் இடம் பெற்றிருந்த பாவை, திடுமென வாய்திறந்து, "காஞ்சன! அணுகல் அவளை; அணுகல் அவளை; உன் மனைவி அல்லள் அவள்; அவள் மாதவி யீன்ற மடக்கொடி மணிமேகலையாவாள். காயசண்டிகை பசிநோய் நீங்கப்பெற்றதும், உன்னை நினைந்து, உன் நாடுநோக்கி வருங்கால், விந்தமலைமீது அறியாமற் சென்றமையாற், குற்றம்பட்டு விந்தாகடிகையின் வயிறு புகுந்து அடங்கிவிட்டாள். அவள் முன்னை வினை செய்த பயன் இது. அரசன் மகனைக்கொன்றமைக்கு உன் அறியாமையே காரணமாம். என்றாலும் அக்கொடுவினைப் பயன் உன்னையும் விடாது வந்து வருத்தும்; வினைப் பயனை நீ நுகர்ந்தே ஆதல் வேண்டும். வருந்தாது விஞ்சையர் உலகிற்கு ஏகுவாயாக" எனக் கூறிற்று.

கந்திற்பாவை கூறிய உரையால் காயசண்டிகைக்கு வந்துற்ற கேட்டினை அறிந்து, காஞ்சனன் கலங்கி அழுதான். செருக்கால் சீரழிந்தாள் அவள்; ஆத்திரம்மிக்கு அறிவிழந்தமையால் அழிவுற்றேன் நான்; அந்தோ! என்செய்வேன்" என அழுது ஊர் அடைந்தான்.

காயசண்டிகை, காவலன் மகன் கொலையுண்டமைக்குக் காரணமாயினளாயினும், அவள் மணி மேகலையின் மாட்சிமிகு கற்பிக்கு மாசு நேராவண்ணம் காக்கும் நற்றுணையும் ஆயினள். வாழ்க அவ்விஞ்சையாள்!

# 5. சுதமதி

அங்க நாட்டில், கங்கைக் கரையில் சண்பை எனும் அழகிய நகர் ஒன்று இருந்தது. சம்பை எனவும் அது அழைக்கப்பெறும். கங்கை வழியே வந்து புகும் கலங்களின் துணையால் அந்நகர் கடல்படு செல்வத்தால் சிறந்திருந்தது. மேலும், மழைதரு மேகத்தைப் பணிகொள்ளும் திறத்தைப் பிறவிக் குணமாகக்கொண்டு காராளர் எனும் காரணப் பெயர் பெற்ற உழவர்களின் வாழிடமாய் விளங்கிய அப்பேரூர் வயல் வளத்திலும் சிறந்து விளங்கிற்று. வாணிக வளமும், வயல்வளமும், ஒருங்கே வாய்க்கப் பெற்ற அந்நகரில் கௌசிகன் எனும் பெயர் பூண்ட அந்தணன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன், உள்ளம் உணர்வுவயப்பட்டு அலையாவண்ணம் அடங்குதற் பொருட்டு விரதங்களால் உண்டி சுருங்கல் முதலிய ஒழுக்க நெறிகளை முறையாக மேற்கொண்டிருந்தான். காருக பத்தியம், ஆகவனீயம், தென்திசை அங்கி என்ற முத்தீப் பேணும் பெருமையும் அவன்பால் பொருந்தியிருந்தது. ஆண்டு முதிர்ந்த அவ்வந்தணன் அரிய பல அறங்கள் ஆற்றியதன் பயனாய்ப் பெண் மகவு ஒன்று பிறந்தது. முதுமைப் பருவத்தில் பிறந்தவளாதலாலும், தம் வயிற்றில் வந்து தோன்றிய ஒரே மகவு ஆதலாலும், அந்தணனும் அவன் மனைவியும், பெற்ற மகவுக்குச் சுதமதி எனப் பெயர் சூட்டி, அவள் விருப்பம்போல் பேணி வளர்த்தனர்.

சுதமதி வளர்ந்து பெரியவளானாள். பிறந்த குடிப் பெருமையாலும், பெற்றோர் அளித்த உரிமையாலும், பிறந்த நாள் தொட்டே எவர்க்கும் அடங்காது, தன் விருப்பம்போல் ஆடிப்பாடி வரும் வழக்கம் உடையளானாள். வளர்ந்து வரைவுப் பருவம் பெற்ற பின்னரும் அடங்கி வாழும் வாழ்க்கை நெறியறியாது அவ்வாறே வாழ்ந்து வந்தாள். அச்சம் என்பதை அவள் அறியாள். எங்கும் அஞ்சாது செல்வாள். எதைக் கண்டும் அவள் அஞ்சாள். இருளோ, இரவோ, அவளை அச்சுறுத்த மாட்டா. தனியே செல்வது தகாது; எங்குச் செல்லினும், எதைச் செயினும் துணை வேண்டும் என்ற நினைப்பு அவளுக்கு உண்டாவதில்லை. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை, அஞ்ச வேண்டுவன கண்டவிடத்தும் அஞ்சாது செல்வதால் இடையூறு பல உண்டாம் என்ற உணர்வு அவள் உள்ளத்தில் உருக்கொள்ளவில்லை.

இவ்வாறு வளர்ந்து வந்த சுதமதி, ஒருநாள் ஊரை அடுத்திருந்த மலர் வனத்துட் புகுந்து மலர் கொய்து கொண்டிருந்தாள். அப்போது புகார் நகரில் ஆண்டு தோறும் நிகழும் இந்திர விழாவைக் காணும் ஆர்வம் உந்த, விஞ்சைமா நகரினின்றும் புறப்பட்டுப் புகார் நகர் நோக்கி வானவூர்தியில் செல்லும் மாருதவேகன் என்ற வித்தியாதரன், அம்மலர்ச் சோலையையும், ஆங்கு மலர் கொய்து கொண்டிருக்கும் சுதமதியையும் கண்டான். அவள் அழகும் இளமையும் அவன் கருத்தைக் கவர்ந்தன. மண்ணில் இழிந்து மங்கையை அணு

கிறான். மலர் மாலேயும் மார்பிற் கிடந்து புரள, பொன்னணிகள் பல மேனியிற் கிடந்து மின்ன, பாருளோர் பார்த்தறியாப் பேரழகு வடிவுடன் வந்து நின்ற வித்தியாதரன் வனப்பில் சுதமதியும் கருத்திழந்தாள். மாருதவேகன் தன்ருல் வணங்கி வழிபடற்கேற்ற தெய்வப் பிறவியுடையான் எனக் கருதினுள். சுதமதியின் இளமை நலம் கண்டு கருத்திழந்து நிற்கும் அவன், தன் மீது அவளுக்கும் வேட்கையுளது என்பதைக் கண்டு கொண்டதும், துணிந்து அவளைக் கைப்பற்றிக் கொண்டான், நினைத்ததை முடிக்கும் நெஞ்சுரமும், செய்யும் செயலின் நலன் தீதுகளை நினைத்துப்பாரா அறியாமையும் உடைய சுதமதி மாருதவேகன் செயலிற்குத் தடை செய்திலள். அவன் விருப்பத்திற்கு அவளும் இசைந்து விட்டாள். அந்தணர் குலத்தவளான தான், வித்தியாதர இளைஞனை மணப்பது முறையன்று என்பதை அவள் மனத்துட் கொண்டிலள். தன்னிலை கெட்டு அவன் வயப்பட்டு இன்பம் நுகர்ந்தாள்.

இருவரும், அவன் ஊர்ந்து வந்த வான ஊர்தி ஏறிக் காவிரிப்பூம்பட்டினம் வந்து சேர்ந்தனர். இந்திர விழா நிகழ்ந்த இருபத்தெட்டு நாள்வரையும் புகார் நகரத்தின் பல்வேறு வளங்களையும் நலங்களையும் சுதமதிக்குக் காட்டி, இன்பம் ஊட்டி இன்புற்ருன். அவள் தரும் இன்பத்தில் வேட்கை குறைந்தது அவ்வளவே: ஒரு நாள் அவளை விடுத்து அகன்று விட்டான். நிழல்போல் தொடர்ந்து, பிரிவின்றிப் பார்த்திருக்கும் போதே மறைந்து

விட்ட மாருதவேகனைச், சுதமதி அம்மாநகரெங்கும் தேடினாள். கடற்கரையிலும், கடை வீதிகளிலும், மன்றங்களிலும் மலர்ச் சோலைகளிலும் தேடித் தேடி அலைந்தாள். எங்கும் அவனைக் கண்டிலள். கண்கள் நீர் சொரிய, நெஞ்சு கலங்கி நீள் துயருற்றாள். அன்பனை இழந்து, அழுது அலைந்து திரியும் சுதமதியைக்கண்ட புகார் நகரத்து மக்கள், விஞ்சையனை நம்பி வந்து வாழ்விழந்து போனவள் எனப் பழி தூற்றினர். அது கண்டு நாணிய அவள், பலருங் காணப் புலம்பித் திரிவதை விடுத்துப் புகார் நகரத்து அருகன் கோயிலை அடைந்து ஆங்கு வாழ்ந்திருந்தாள்.

மலர் கொய்யச் சென்ற மகள், மாருதவேகனை மணந்துகொண்டாள் என்ற செய்தியைச் சுதமதியின் பெற்றோர் அறிந்தனர். அவள் தாய், ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பும் உயர்வுள்ளம் உடையவள். அதனால் மகளின் ஒழுக்கக் கேட்டினைக் கண்டு உயிர் கொண்டு வாழ்தல் அவளால் இயலாதாயிற்று. மகளின் மறைவுச் செய்தி கேட்ட அப்போதே அவள் உயிரும் மறைந்து விட்டது. மகளையும், மனைவியையும் இழந்து துன்புற்றான் அந்தணன். ஒழுக்க நெறியோடு உலகியலையும் உணர்ந்தவன் அந்தணன். அதனால், மகளின் செயல் கண்டு மருண்டிலன்; மகள்மீது குறை காணவும் அவன் உள்ளம் மறுத்துவிட்டது. மகள் கொண்டது பிழை மணமே என்றாலும், அது அவள் பிழையன்று. அது அவள் விதியின் பிழை. ஆகவே மகளைச் சினப்பதோ,

அவனை அறவே மறந்து கைவிடுவதோ கூடாது. மாருக, அவனைத் தேடிப் பெற்றுத் துணை புரிதல் வேண்டும் எனத் துணிந்தான். மேலும், மனைவி இறந்து விட்டாள். இல்லாளோடு எல்லாம் போம். ஆகவே அவனை இழந்த பின்னர் ஆண்டுத் தனித்திருந்து வாழும் வாழ்க்கையில் இன்பம் இராது என உணர்ந்தான். அதனுல், பிறந்து வளர்ந்து பெரு வாழ்வு வாழ்ந்த ஊரை மறந்து வெளி யேறி, மகளைத் தேடிப் புறப்பட்டான்.

சண்பை நகரத்து அந்தணர் சிலர், அப்போது குமரி நீர் ஆடும் கருத்துடையராய்த் தமிழ் நாடு நோக்கிப் புறப்பட்டனர். அவரோடு, அவனும் தமிழ் நாட்டிற்கு வந்தான். தமிழ் நாடு புகுந்த அந்தணர், குமரித்துறையில் நீராடுவதன் முன், காவிரி கடலோடு கலக்குமிடத்தில் நீராடல் நிறை பயன் தரும் என்ற உணர்வினராய்ப் புகார் நகர் போந்து நீராடினர். அந்தணரோடு புகார் நகர் புகுந்த கௌசிகன், ஆங்குச் சுமதியைக் கண்டு கொண்டான். மகள்மீது கொண்ட காதல் மிகுதியால், அவள் ஒழுக்கங்கெட்டவள் என்பதை உணர்ந்திலன். மகளை மார்புற அணைத்துக் கொண்டு மனச்சுமை தீர அழுதான். "மகளே! ஈங்கு எவ்வாறு வந்தனை? உன் வாழ்வைக் கெடுத்துக் கைப்பற்றிக் கொணர்ந்த அவ் வித்தியாதரன் எங்கே? துணையோடு வந்த நீ தனித்துக் கிடந்துதுயர் உறுவது ஏன்?" எனப் பலப்பல கேட்டுப் புலம்பினன். நிகழ்ந்தவற்றை மகள் கூறக் கேட்டு நெஞ்சு சுருகினன். அந்தணரோடு குமரியாடப் போவதைக்

கைவிட்டான். மகள் வாழும் புகார் நகர் வாழ்வில் அவன் மனம் சென்றது. அன்று முதல், புகார் நகரத்துப் பெருவீதிகளில் பிச்சையேற்று உண்டு, மகளுக்குத் துணையாய், மகளோடு வாழ்ந்திருந்தான்.

ஒருநாள், கௌசிகன், கையில் பிச்சைப் பாத்திரம் ஏந்தித் தெருவழியே சென்றுகொண்டிருந்தான். அப்போது அவ்வழியாக ஓடிவந்த கன்றீன்ற பசு ஒன்று, அவன் மீது பாய்ந்து கோடுகளால் அவன் வயிற்றைக் கிழித்துக் குடரைச் சரித்து ஓடிற்று. குடர் சரிந்து கீழே வீழ்ந்த அந்தணன் மெல்ல எழுந்தான். செவ்வலரி மாலையை ஏந்திச் செல்வதுபோல், குருதிசொட்டும் குடரைக் கையில் தாங்கியவாறே நடந்துசென்று, மகள் வாழிடம் என்ற உரிமையாலும், மேலும் நடந்து செல்லமாட்டாது தளர்ந்து விட்டமையாலும் அண்மையில் இருந்த அருகன் கோயிலுட் புகுந்து, ஆங்குறையும் சமண முனிவர் பால் சரண் புகுந்தான். அந்தணனின் அந்நிலை கண்டும், அம் முனிவர்க்கு இரக்கவுள்ளம் உண்டாகவில்லை போலும். “ஏடா! நீ ஈண்டு இருத்தற்குரியனில்லை. இவ்விடம் விட்டு இன்றே நீங்கு” எனக் கடிந்து, சுதமதியோடு அவனை வெளியேற்றி வாயில் அடைத்துக்கொண்டனர்.

தூயோர்போல் தவவேடம் கொண்டிருந்தும், துன்புற்று வந்தவரின் துயர்போக்க நினையாது, துரத்தித் துன்புறுத்திய சமணர் செயல் கண்டு, சுதமதி செய்வதறியாது திகைத்தாள். கண்ணீர் சொரிந்து கலங்கினாள். தளர்ந்த

தந்தையைத் தாங்கி அழைத்துக்கொண்டு தெருவில் வந்தாள். புகார் நகரத்துப் புறநகர் வீதிகளில் புகுந்து, "அல்லல் உறுகிறோம்; ஆரும் துணை இலேம்; எம்பால் அன்பு காட்டும் அறவோர் எவரும் இலரோ?" என அழுது புலம்பினாள். அப்போது அவர் எதிர்வந்த சங்க தருமன் எனும் புத்த துறவி, அழுது புலம்பும் சுதமதியையும், அவளைப் பற்றுக்கோடாக் கொண்டு தளர் நடையிட்டு வரும் கௌசிகனையும் கண்ணுற்றான். தூய பசும் பொன்னின் நிறம்காட்டும் காவி ஆடை உடுத்திருந்த அவன் முகம், கடும் வெயில் காயும் அந்நண்பகற்போதிலும் அருளும் அழகும் காட்டி அமைதியுற்றுத் தோன்றிற்று. வீதியின் இருமருங்கிலும் வானளாவ உயர்ந்து விளங்கிய வீடுகள் தோறும் சென்று பிச்சையேற்றுவந்த அம்முனிவன், அவர்களை அணுகி, "உற்றதுயர் யாது" என அன்போடு உசாவினான். அன்பும் அருளும் சொட்டும் அவன் சொல் கேட்ட அளவிலேயே, சுதமதி, தங்கள் துயர் ஒழிந்து போனதாக உணர்ந்தாள். அவள் அகம் குளிர்ந்தது. தங்கள் வரலாற்றையும் தங்கட்கு நேர்ந்த இன்னலையும் விளங்க எடுத்துரைத்தாள். அவர் துயர்நிலைகேட்ட அத்தூயோன், தன் கைப் பிச்சைப்பாத்திரத்தை அவள் கையில் கொடுத்து விட்டு, மறையோனைத் தோளில் சுமந்து, பௌத்தப் பள்ளியுட் கொண்டு சென்றான். ஆங்கு மறையோன் புண் மறைய மருந்திட்டான். சுதமதியின் மனமாசு மறையப் புத்தன் பெருமைகளை உணர்த்தினான். அறவோன் உணர்த்த, புத்தன் பெருமைகளை உணர்ந்த சுதமதி, அவன்

புகழ் பரவும் பணிமேற்கொண்டு ஆண்டு வாழ்ந்திருந்தாள்.

அவ்வாறு வாழ்ந்திருக்கும்போது, காதலன் கொலையுண்டான். காதலன் மனைவி வானோர் உலகம் புகுந்தாள் என்ற செய்தி கேட்டு வருந்தி, வாழ்க்கையை வெறுத்துத் துறவறம் மேற்கொண்டு, தன்னைப் போலவே, அப்புத்தப் பள்ளி அடைந்து வாழும் மாதவியைச் சுதமதி கண்டாள். அவள் மாண்புமிகு குணங்களை அறிந்து அவளோடு நட்புக் கொண்டாள். அன்று முதல் அவளைவிட்டுப் பிரியாது அவளோடு வாழ்ந்து வந்தாள்.

திங்கள் சில சென்றன. புகார் நகரில் இந்திர விழாவிற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. வள்ளுவன் விழா நிகழ்ச்சியை, மூதூர் வீதிகளில் முரசறைந்து அறிவித்தான். அப்போது ஒருநாட் காலை மாதவியின் உயிர்த் தோழியாகிய வயந்தமாலை பௌத்த பள்ளியுட் புகுந்து மாதவியைக் கண்டாள். மாதவியின் வாடிய மேனி கண்டு வருந்தினள். பின்னர் மாதவியும், மணிமேகலையும் மன்றம் ஏறி ஆடவாராமைகுறித்து மக்கள் வழங்கும் வசைமொழி கேட்டு மாதவியை ஈன்ற சித்திராபதி சிந்தை நோவதை மாதவிக்கு எடுத்துரைத்தாள்.

அதுகேட்ட மாதவி, "தோழி! இதோ இருக்கும் இவள் யான் பெற்ற மகளேயாயினும், என் மகள்

அல்லள். கற்புக்கடம்பூண்ட கண்ணகியின் மகளாவள். அத்தகையாள் தவவொழுக்கம் மேற்கொள்வதல்லது அவவொழுக்கம் மேற்கொண்டு ஆடிப்பாட ஆங்கு வாராள். காதலன் இறந்த கடுந்துயர் பொருது கலங்கிய எனக்குப், 'பிறவி உற்றோர் பெருந்துன்புறுவர். பிறவி அற்றோர் பேரின்பம் பெறுவர். பற்றால் வருவது பிறவி, அது அற்றால் வருவது வீடு பேறு' என்ற உண்மைகளையும், கள், காமம், கொலை, களவு, பொய் எனும் இவற்றை அகற்றுவதால் உண்டாம் அமைதியின் ஆற்றலையும் உணர்த்தி உய்யும்நெறி காட்டிய உரவோர் வழி நின்று, துறவறம் மேற்கொண்டு ஆடல் பாடல்களில் ஆசை இழந்தேன். ஆகவே யானும் வாரேன்" என மறுத்துக் கூறி அனுப்பிவிட்டாள்.

தாய் மாதவிக்கும் வயந்தமாலைக்குமிடையே நிகழ்ந்த உரையாடல், கொலையுண்ட தந்தை கோவலனையும், மறைந்து மாண்புற்ற தாய் கண்ணகியையும் நினைப்பூட்டவே, மாதவி அருகில் அமர்ந்து மலர் தொடுத்திருந்த மணிமேகலை கண்கள் நீர் சொரியக் கலங்கி அழுதாள். அவள் கண்களினின்றும் ஒழுகிய நீர், தொடுக்கும் மலர்கள் மீது வீழ்ந்து மாசுபடுத்திவிட்டது. அதுகண்ட மாதவி மகளின் கண்ணீரைத் துடைத்துவிட்டு, "மகளே! நின் கண்ணீரால் இம்மலர்கள் மாசுண்டன. பூசைக்கு இவை பொருந்தா; சென்று புது மலர் கொணர்க" எனப் பணித்தாள்.

சுதமதி, மாதவி கூறியதைக் கேட்டாள். மணிமேகலையோ வனப்பில் மிகுந்தவள். மேலும் நனி இளமைப் பருவத்தள், காலமோ, நகரில் விழா நிகழும் காலம் வீதிகளில் வம்பரும் தூர்த்தரும் வந்து திரிவர். இந்நிலையில் மணிமேகலை, மலர் கொய்யத் தனித்துச் செல்வது மதியுடைத்தன்று என எண்ணினாள். தனக்கு நேர்ந்த கதி, தன் தோழியின் மகளுக்கு நேர்ந்து விடுதல் கூடாது எனக் கருதினாள். அதனால், மகளை மலர் பறித்து வருமாறு பணித்த மாதவியை நோக்கி, "தோழி! மணிமேகலையின் இம்மேனி நலத்தைக் கண்டால் காமன் மலர்க் கணை தொடுப்பதை மறந்து நிற்பன், ஆடவர் கண்டால், இவளை விட்டும் அகல்வரோ? அவர்கள் தம் இயல்பு கெட்டு இவர்பின் திரியாது நிற்பதும் உண்டோ? பேடியர் அல்லவோ அவ்வாறு நிற்பவர்? ஆகவே, தோழி! மலர் கொய்ய, மகளைத் தனியே போக விடுதல் தகுதியுடைத்தன்று. மாதவி! நான் இம்மாநகர்க்கு வர நேர்ந்தது மலர்மீது கொண்ட காதலால், துணையின்றிச் சென்றதாலன்றோ; என்தாய் உயிரிழந்து போனதும், நான் காமுகன் வலைப்பட்டுக் கற்பிழந்து போனதும், தந்தை தேடி வந்து தளர்ந்ததும் அதனால் விளைந்தன அல்லவோ?" எனக் கூறி மலர் பறிக்க மணிமேகலை தனியே செல்லா வண்ணம் செய்தாள்.

பின்னர், "மாதவி! புகார் நகரம் பூம்பொழில் வளத்தால் பொலிவுற்றது என்றாலும், அவை அனைத்தும் மலர் கொய்யும் தகுதியுடைய ஆகா. வேண்டும்போது,

வேண்டுமளவு நீரை நிறைக்கவும் போக்கவும் வல்ல பொறி அமைக்கப்பெற்ற நீர் நிலையை நடுவே பெற்று, நாற்புறமும், மலர்ச் செடிகள் மண்டிக்கிடக்கும் இலவந்திகை என்றொரு சோலையுளது. ஆங்கு, அரசனும், அவன் உரிமைச் சுற்றமுமல்லது பிறர் எவரும் புகுதல் கூடாது. உய்யானம் என்ற பெயருடையதொரு பூம்பொழில் உளது. ஆங்கு மலர்ந்த மலர்கள் வாடுவதில. அம்மலர்த்தேனை உண்ண வண்டுகள் விரும்புவதில்லை. வானுளோர் அல்லது மண்ணுளோர் அம்மலர்களை விரும்பார். மேலும் பூதக்காவல் பொருந்தியது அப்பொழில்; அதனால் அறிவுடையோர் அதை அணுகார். சம்பாதி வனம், கவேரவனம் இரண்டும் நனி மிகப் பழமை உடையன, தெய்வக்காப்புடையன வாதலின் அவற்றை அணுகத் தெரிந்தோர் அஞ்சுவர். ஆகவே, மாதவி! உவவனம் ஒன்றே மலர் பறித்து மகிழும் மாண்புடையது. அதனிடையே பளிங்கு மண்டபம் ஒன்று உளது. அதன் உள்ளிடு பொருள் புறந்தோன்றுமே யல்லது, உள்ளெழு ஒளி புறம் வந்து ஒலிக்காது. அம்மண்டபத்தின் நடுவே புத்தன் திருவடித் தாமரை பொறித்த பீடிகை உளது. அதில் இட்ட அரும்புகள் இட்ட அப்போதே மலர்ந்து மணக்கும். மலர்ந்த மலர்கள் பல்லாண்டு கழியினும் வாடி மணம் இழப்பதில்லை. அப்பீடிகை முன் நின்று, கருத்தில் யாதேனும் ஒரு கடவுளை நினைத்து மலர் தூவினால், தூவிய மலர்கள், அப்பீடிகையின் நீங்கி அக்கடவுளரைச் சென்று சேரும். எவ்வித நினைப்பும் இலராய் நின்று தூவிய மலர்கள்,

அப்பீடிகையை விட்டு நீங்கா. சிந்தையும் செயலும் உறவுடைய; சிந்தை வழியதே செயல்; சிந்தையில்லை யேல் செய்வினை இல்லை என்ற உண்மையை உலகோர்க் குக் காட்டவே அமைக்கப்பெற்றது அப்பீடிகை. மாதவி! நின் மகள், மாண்பு மிகு அம்மலர்ச் சோலைக்கே சென்று மலர் பறித்து வருக. அவளுக்குத் துணையாய் யானும் செல்கிறேன்'' எனக் கூறி அவள் இசைவினைப் பெற்று, மணிமேகலையோடும் மலர்ச் சோலை நோக்கிப் புறம் பட்டாள்.

மணிமேகலையும் சுதமதியும் பௌத்தப் பள்ளியின் நீங்கி, புகார் நகரத்துப் பெரு வீதிகளைக் கடந்து உவ வனத்துள் நுழைந்தனர். மணிமேகலையை, அம்மலர்ச் சோலையைச் சுற்றி அழைத்துச் சென்ற சுதமதி, தும்பி குழலூத, வண்டு யாழ் இசைக்க, மயிலாட மந்திகண்டு மகிழும் காட்சியையும்; பளிங்குபோல் தெளிந்த நீரால் நிறைந்த குளத்தில், பச்சைப் பசேலெனப் படர்ந்த இலைகளுக்கிடையே தனியே மலர்ந்திருக்கும் தாமரை மலரில் அரச அன்னம் அமைந்திருக்க, அது கண்டு மகிழுமாறு, கரையில் நின்று ஆடும் மயிலின் ஆட் டத்திற்கு ஒப்ப, கம்பங்கோழி முழவிசைக்க, குயில் பாடும் காட்சியையும், தெருப்புழுதி படிந்த மணி மேகலையின் மதிமுகம் மங்கித் தோன்றுவதுபோல், விரிந்த வெண்தாமரை மலரினின்றும் உதிர்ந்த தாதுகள் படிந்த செந்தாமரை மலரையும், தாமரை மலர் நிகர்க்கும் தன் முகத்திற்கிடந்து ஒளிகாட்டும் கருவிழிகளைக் கரு

நீலமலர் எனக்கருதி வந்து மொய்க்கும் வண்டுகளை ஓட்டும் மணிமேகலையின் செங்கைபோல், தாமரை மலரு மாறு அதன்மீது பாய்ந்து, அதில் கிடந்து பிறழும் கயல் மீன்களைக் கவர்ந்துண்ணும் கருத்தோடு அம் மலர்மீது பாய்ந்து வந்தே மீளும் சிரல் பறவையையும் மணி மேகலைக்குக் காட்டி மகிழ்வூட்டினுள்.

அந்நிலையில், தெருவில் தேரொலி எழக்கேட்ட மணிமேகலை; "சுதமதி! இவ்வூராளும் அரசன் மகன் உதயகுமாரன் என்மீது காதல் கொண்டுளான் என முன்னம் ஒருமுறை வயந்தமாலை கூறக் கேட்டுளேன். இப்போது கேட்கும் தேரொலி, அவன் ஊர்ந்துவரும் தேரொலியோ என்று எண்ணி, அஞ்சுகிறது என் நெஞ்சு" எனக் கூறி நடுங்கினுள். மணிமேகலையின் மன நடுக்கத்தைக் கண்ட சுதமதி, அவளை ஆங்குள்ள பளிங்கு மண்டபத்தினுள் அடைத்து, அதன் புறத்தே யிருந்தாள்.

சிறிது பொழுது கழிந்தது. மணிமேகலை கூறிய வாறே உதயகுமாரன் அங்கு வந்தவன் சுதமதியை அணுகி, "அந்தணன் மகளே! உன் உடன் வந்த மணிமேகலை, மணப் பருவம் பெற்ற மங்கை ஆயி னள்கொல்? அவள் உடலுறுப்புக்கள் அப்பருவ வளர்ச்சிக்கேற்ற வனப்புடையவாயினகொல்? தாயோடு தவநெறி மேற்கொண்டு பௌத்தப் பள்ளி புகுந்து வாழ்ந்திருந்தவள், இன்று மலர் கொய்யத் தனியே வந்த காரணம் யாதோ" எனக் காமக் கருத்துப் புலப்படப் பலபல கேட்டு நின்றான்.

உதயகுமாரனை, அந்நிலையில் ஆங்குக் கண்ட சுதமதி, தனியறையில் அகப்பட்டுத் தவிப்பவள் போல் நடுங்கினாள். பின்னர் ஒருவாறு உளம் தேறி, அரசிளங் குமரனை அணுகினாள். "இளவரசே! நீயோ அறவழி அரசாண்ட பெரியோர் வழிவந்தவன். உன் முன்னோன் ஒருவன், தன்கண் வழக்குரைத்து முறை வேண்டி வந்த இருவர், தன் நனி இளமைப் பருவம் கண்டு, நம் வழக் குணரும் வன்மை இவ்விளையோனுக்கு இராது என எண்ணி, உரைக்க வந்த வழக்கை உரையாதே அகல் வது கண்டு, முதியோன் வேடம் பூண்டு வந்து, அவர் வழக்கினை, அனைவரும் வியக்கும் வண்ணம் ஆராய்ந்து முறை செய்தான் எனக் கூறக் கேட்டுளேன். அத்துணை முதறிவுடையோர் குடியில் வந்த உனக்கு அறிவும் அருங்குணமும், அரசியல் முறையும் என்போலும் இள மகளிர் எடுத்துக் கூறுவது இயலுமோ? கூறுவதுதான் பொருந்துமோ? பொருந்தாது என்பதை நானும் அறி வேன் என்றாலும், ஒன்று கூற விரும்புகிறேன்" எனத் தொடங்கி,

"இவ்வுடல் முன்வினை காரணமாக வந்து வாய்த்த தாகும்; வரும் பிறவியின் வினையை விளைவிப்பதற்குக் காரணமாவதும் இவ்வுடல் ஆகும். புனைந்துள்ள ஒப் பனைகளை நீக்கின் புலால் நாற்றத்தை வெளிப்படுத்து வதும் இவ்வுடல் ஆகும்; மூப்பையும் அழிவையும் உடை யதும் இதுவாகும். கொடிய பிணிகளுக்கு இருப்பிடமாக வும், ஆசைகள் பற்றியிருக்கும் இடமாகவும், குற்றங்

களைக் கொண்டிருக்கும் கொள்கலமாகவும் அமைந்தது இவ்வுடல். புற்றினுள் இருக்கும் பாம்பைப் போலச் சினத்தை உள்ளே கொண்டிருப்பதும், துன்பம், கவலை, வருத்தம், வாட்டம் முதலியவற்றை இடையறாது அடைவதுமாகிய உள்ளத்தைத் தன்பாற் கொண்டதும் இம்மானிடவுடல் ஆகும். அறிவின் மிக்கோய்! உடலினது தகைமை இதுவென்பதை உணர்ந்து, இதன் மேற்கொண்ட ஆசையை விட்டொழிப்பதைக் கருதுவாயாக."

சுதமதி உரைத்த உரை, உதயகுமாரன் செவி வழிப் புகுந்து அவன் சிந்தையுள் செயற்படுவதற்குள், பளிங்கு மண்டபத்தினுள் கிடந்த மணிமேகலை உருவம் அவன் கண்களிற் பட்டுவிட்டது. பளிங்குப் பார்வைபோல் காட்சி அளித்த மணிமேகலையின் வடிவைக் கண்டதும், சுதமதி உரைத்த, உயர்ந்த உண்மைகளை உதயகுமாரன் மறந்தான். அவளை அடையும் ஆர்வம் உந்த, அவள் அடையுண்டிருக்கும் பளிங்கு மண்டப வாயிலைத் தேடி அதைச் சுற்றி சுற்றி வந்தான். எவ்வளவு முயன்றும் அதன் வாயிலைக் காண மாட்டாது கலங்கி நின்ற அரசகுமரனைச் சுதமதி அணுகி, 'அரசிளங்குமர! முருகனை நிகர்க்கும் நின் முகப்பொலிவு கண்டும் மணிமேகலையின் மனம் நெகிழாது. முன்னை வினைப் பயத்தால் அவள் தவநெறி மேற்கொண்டுள்ளாள். தன் தவநெறிக்குக் கேடு சூழ்வாரைக் கெடுத்தொழிக்கும் ஆற்றலை அவள்

கைவரப் பெற்றுள்ளான். மேலும் காமவுணர்ச்சியைக் கடந்து வென்றவள் அவள். ஆகவே, அவளை அடையத் துணிவது அறிவுடைமையாகாது'' என அவன் உள்ளம் ஏற்குமாறு மெல்ல எடுத்துரைத்தாள். அது கேட்ட அவன், ''சுதமதி! ஆறு பெருகினால் அணை எதிர் நிற்காது. அதுபோல் காமவெறி தலைக்கேறியவர் பால், உள்ளத்தை ஒருவழி நிறுத்தும் நிறையெனும் நற்குணம் நில்லாது. அவளை, எவ்வாறேனும் என்னுடையவளாக்கிக் கொள்வேன்'' எனச் சூளுரைத்துச் சோலையின் நீங்கிச் செல்லலுற்றான்.

மலர்ப்பொழிலை விட்டு நீங்கும் மன்னன் மகன், சற்று நின்று சுதமதியை நோக்கி, ''சுதமதி! ஒன்று கேட்கமறந்துவிட்டேன். விஞ்சையன் கைவிட சமணப் பள்ளியில் வாழ்பவள் நீ என ஊரார் உரைக்கக் கேட்டுள்ளேன். ஆங்கு வாழ்ந்திருந்த நீ, இப்போது, புத்தப்பள்ளி புகுந்து வாழ்வதும், ஆங்குறையும் இவளோடு தொடர்பு கொண்டு இம் மலர்ப்பொழில் புகுந்ததும் ஏனோ?'' என்று வினவினான். வினவிய அரசனுக்குத் தான் அருகன் கோயில் அடைந்து வாழத் தொடங்கியது முதல் மணிமேகலையோடு மலர் கொய்ய வந்தது ஈறாக நிகழ்ந்த தன் வாழ்க்கை வரலாற்றினை விளங்க உரைத்து, ''அரசே! அன்று தொட்டு, உலக நோன்பில் பல கதி உணர்ந்து தனக்கெனப் வாழாப் பிறர்க்குரியாள! இன்பச் செல்வம் மன்பதை எய்த அருளறம் பூண்ட அண்ணல்! காடனைக்

கடந்த வாம!'' என அப் புத்தன் புகழைப் பாடுவதல்லாது பிற எதிலும் என் சிந்தை புகுவதில்லை'' என விடையிறுத்தாள்.

சுதமதியின் துயர்மிகு வரலாறு கேட்ட வேந்தன் மகன், ''சுதமதி! என் மனம் கவர்ந்த மணிமேகலையை உன் துணையால் பெறமாட்டாது துயர் உற்றேன். இனி, இவளைச் சித்திராபதியின் துணை பெற்று அடைய இன்றே அவள்பாற் செல்கின்றேன்'' எனச் சூளுரைத்துச் சோலையை விட்டகன்றான்.

மன்னன் மகன் மலர்ப்பொழிலைவிட்டு அகன்றனன் என்பதை அறிந்து கொண்டதும் பளிங்கறையைத் திறந்துகொண்டு வெளியே வந்த மணிமேகலை, சுதமதியைத் 'தாய்ப்போல் வந்து என் துயர் தீர்த்த ஆருயிர்த் தோழி, நீ' எனப் பாராட்டினாள். பின்னர் அவளை நோக்கிச், "சுதமதி! கற்பு நெறி கெட்டவள், தவ நெறிக்குத் தகுதியற்றவள், உயர்குல உரிமை இழந்தவள், பொருள் விலையாட்டி என்றெல்லாம் விளித்து என்னை இழித்தும் பழித்தும் அகன்றான். அவ்வுரைகளைக் கேட்டும் என் நெஞ்சு அவன்பால் நேசம் கொள்கிறது. தோழி! இதற்கு யான் என்செய்வேன்; சுதமதி; காமத்தின் இயல்பு அன்னதோ? அன்னதாயின் அழிக அக்காமம்'' எனக் கூறிக் கலங்கிக் கண்ணீர் சிந்தினாள்.

சுதமதி, மாதவி மகளின் மனத்துயர் அறிந்து சிந்தை தொந்தாள். அப்போது ஆங்கோர் அதிசயம் நிகழ்ந்தது.

மணிபல்லவத் தீவை வாழிட மாக்கிக்கொண்டு, அவ்வழியாக வரும் வங்கங்கட்கு ஏதும் நேராவாறு காக்கும் நற்றுணைத் தெய்வமாய மணிமேகலா தெய்வம், புகார் நகரத்துப் பெண்ணொருத்தியின் வடிவில் அவர் முன் வந்தது. பளிங்கு மண்டபத்தின் இடையே இடம் பெற்றிருக்கும் புத்த பீடிகையை வலம் வந்து வணங்கிற்று. புத்தன் புகழை வாயாரப் பாடிப் பரவிற்று. அதைப் பார்த்தவாறே இருவரும் ஆங்கு அசைவற்று நின்றிருந்தனர். அந்நிலையில், கணவனை இழந்த கடுந்துயரால் பொலிவிழந்த முகத்தோடு வந்து தாய் மனை புகும் பெண்ணே போல், ஞாயிறு மறைய மயங்கிருள் சூழ அந்திப் பொழுது வந்து படர்ந்தது.

மாலையும் மறைந்தது. எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. வானவீதியில் வந்து தோன்றிய வெண் திங்கள் ஒளியால் மலர்ப்பொழில் விளக்கம் பெற்றது. அந்நிலையில் வழிபாட்டை முடித்துக் கொண்ட மணிமேகலா தெய்வம், சுதமதியை அணுகி, "நனி இளம் பருவத்தினராய நீவிர் இருவீரும், ஈங்கு இந் நேரத்தில் தனித்து நிற்பது ஏனோ? உங்கள் உள்ளம் வருந்த, உமக்கு நேர்ந்த துயர் யாதோ?" என்று அன்போடு வினவிற்று. சுதமதி நிகழ்ந்ததைக் கூறினாள். அதுகேட்ட அத்தெய்வ மகள், "மகளே! மன்னன் மகனுக்கு மணி மேகலைபால் கொண்ட வேட்கை தணிந்திலது. மலர்ப் பொழில் மாதவத்தோர் வாழிட மாதல் அறிந்து அஞ்சி, இவளை இப்போது விட்டு

அகன்றுளான். நீங்கள் பொழிலைவிட்டுப் புறத்தே சென்றதும் இவளைக் கைப்பற்றிக்கொள்வன். ஆதலின் தேரோடும் பெரிய தெருவழியே போகாதீர்கள். இப்பொழிலைச் சூழ்ந்து கிடக்கும் நாற்புற மதில்களில், மேற்றிசை மதிற்கண் ஒரு சிறிய நுழைவாயில் உளது. அதுவழியே சென்றால், அரும்பெருந்தவம் ஆற்றும் பெரியோர்களும் விரும்பி வந்து வாழும் சக்கரவாளக் கோட்டம் தோன்றும். இவ்விருட்போதில் மட்டுமேயல்லாமல் பகற்பொழுதிலும் ஆங்கு உமக்குத் துயர் நேராது. இவ்விரவை ஆங்குக் கழித்து அகலுங்கள்'' என்று கூறினாள்.

மணிமேகலா தெய்வம் கூறிய மாற்றங்களைக் கேட்ட சுதமதி, ''நன்று தாயே! தாங்கள் கூறியவாறே நாங்கள் ஆங்குச் செல்கிறோம். செல்வதன் முன் ஒன்று கேட்க விரும்புகிறேன். புகார்ப் பெரு நகரில் வாழ்வோர் அனைவரும் அக்கோட்டத்திற்குச் சுடுகாட்டுக் கோட்டம் என்றே பெயர் சூட்டி அழைக்கின்றனர். தாங்களும், என்னைக் காதலித்துக் கைவிட்டு மறைந்த மாருதவேகனும் மட்டும் சக்கர வாளக் கோட்டம் என வழங்குகிறீர்கள். அது ஏனோ? இவ்வையத்தை, அன்னையே! அகற்றி யருள்வாயாக'' என வேண்டிக் கொண்டாள்.

சுதமதியின் வினவிற்கு விடையளிக்க முன் வந்த மணிமேகலா தெய்வம், சுதமதி! இச்சோலையை அடுத்துள்ள சுடுகாடு, புகார் நகர் தோன்றிய

காலத்தே தோன்றிய அவ்வளவு பழமையும் பெருமை யும் உடையது. காளிகோட்டம் முதலாம் பற்பல கோட்டங்களையும், கள்ளி கான்றை முதலாம் பற்பல மரவகைகளையும், வாகை மன்றம், முதலாம் வகை வகையான மன்றங்களையும் கொண்டு, பிணங்களைச் சுடவும், இடவும், கவிக்கவும், புதைக்கவும், இரவிலும், பகலிலும் வருவார் எழுப்பும் அழுகையொலி போலும் பற்பல ஒலிகளால் நிறைந்தது.

"சுதமதி! இச்சுடுகாட்டைப் பண்டொருநாள் சாரங் கலன் எனும் அந்தணச் சிறுவன் ஒருவன் கண்டான். ஆங்குள்ள காட்சிகளைக் கண்ணுற்ற அவன், அதை ஒரு பெரிய பேரூர் என மயங்க உணர்ந்தான். அவ்வுணர் வால், அவன், ஒரு நாள் நள்ளிரவில், அதனுள் தனித்துப் புகுந்தான்; புகுந்தவன், ஆங்கே ஒரு பிணந் தின்னும் பேயைக்கண்டான். அவ்வளவே, அச்சம் அவனை ஆட்கொண்டுவிட்டது. அலறிப் புடைத்துக் கொண்டு ஓடித், தாயின்முன் வீழ்ந்தான். அக்கணமே அவன் உயிரும் அவன் உடலைவிட்டு அகன்றது. தனக் கும் தன் கணவனுக்கும், தளர்ந்த பருவத்தில் தாங்கி நிற் கும் பற்றுக்கோடாய் விளங்கிய ஒரே மகன் உயிரிழந் தமை கண்டு, முதுமையால் கண்ணொளி இழந்திருந்த கோதமை உள்ளம் நொந்தாள். மகன் உடலை ஏந்தி மயானத்திற்குச் சென்றாள். சம்பாபதியின் கோயில் முன் நின்று, 'சம்புத்தீவின் காவற்றெய்வமே! புகார் நகரத் தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து, இந்நகர் வாழ்

உயிர்க்கு ஏதனுலும், எந்த நேரத்திலும், எந்தவிதக் கேடும் நேராவாறு நின்று காப்பை எனக் கேட்டுள்ளேன். அத்தகையோய், என் மகனைப் பேய் உண்ணப் பார்த் திருந்தது ஏனே?' எனக் கூவிப் புலம்பி அழுதாள். கோதமையின் அழுகையொலி கேட்டு ஆங்கு வந்த சம்பாபதி, அவள் துயர்க்காரணம் யாது என அன்போடு கேட்டது. கோதமை நிகழ்ந்ததைக்கூறி, 'சம்பாபதி! கண்ணற்ற என் கணவனுக்குக் கைக்கோலாமாறு என் உயிரைக் கைக்கொண்டு இவன் உயிரைத் தத்தருள்' என வேண்டிக் கொண்டாள். கோதமை விரும்புமாறு, மாண்டவர் மீண்டும் உயிர் கொண்டெழுதல் உலகியல் பன்று: அவ்வாறு உயிர் அளிக்கும் ஆற்றல் தனக்கு மட்டு மன்று, ஏனைய எக்கடவுளர்க்கும் இல்லை என்பதை அவளுக்கு உணர்த்த விரும்பிய அத்தெய்வம், நால் வகை அருவப் பிரமர்முதலாம் வரம்கொடுக்கும் வன்மை வாய்ந்த கடவுளர் அனைவரையும் அவள் முன்வரவழைத் தது. வந்த கடவுளர்களும், நரை மூதாட்டி ஓர் உடலை விட்டுப்பிரியும் உயிர், பிரிந்த அப்போதே பிறிதோர் உடலில் சென்று புகுந்து விடும். ஆதலின், போன உயிரை மீட்டளித்தல், எவ்வகையாலும் இயலாது. என் செய்வோம்' எனச் சம்பாபதி கூறியவாறே கூறினர். தேவர் உரைத்தது கேட்டு உள்ளம் தெளிந்த கோதமை, மகன் உடலை மயானத்தில் இட்டு அகன்ருள்.

"சுதமதி! உலகின் பல்வேறு பகுதிகளை உறைவிட மாகக் கொண்டு விளங்கிய கடவுளர் எல்லோரையும்

ஓர் இடத்தில் ஒருங்கே கூட்டிக் காண்பது அரிதினும் அரிதாம். அச்செயற்கரும் செயலைச் செய்து காட்டிய சம்பாபதியின் திறம் கண்டு, மயன் எனும் தேவதச்சன் வியந்தான். அக்கடவுளின் புகழ், புகார் நகர் உள்ளள வும் நின்றோங்கச் செய்யவல்ல நல்ல நினைவுச் சின்னம் ஒன்றை, அச்செயல் நிகழ்ந்த இடத்தில் நிறுவ எண்ணினான். உடனே அவன் ஆற்றலால், மேருமலை, அம்மலையைச் சூழ்ந்து நிற்கும் ஏழு சிறு மலைகள், எண் ணிலாச் சிறு சிறு தீவுகள் சூழ விளங்கும் நாற்பெரும் தீவுகள், ஆங்கு வாழ் உயிரினங்கள், அவற்றின் இயல்பு கள் ஆகிய இவற்றை ஆங்காங்கு உள்ளவாறே விளங் கக் காட்டும் ஓர் அரிய நினைவுச்சின்னம் ஆங்கு எழுந் தது; 'சக்கரவாளம்' எனப் பெயர்பூண்ட அவ்வமைப் பினைத் தன்பாற் கொண்டதால், இச்சுடுகாட்டுக் கோட் டம் சக்கரவாள கோட்டம் என அழைக்கப்பெறும் சிறப் பினுக்கு உரியதாயிற்று" எனக்கூறிற்று.

மணிமேகலா தெய்வம் கூறுவனவற்றைக் கருத் தோடு கேட்டுவந்த சுதமதி இறுதியில் சிறிதே கண் ணயர்ந்து விட்டாள். அவள் கண்ணயர் நிலையை எதிர் நோக்கியிருந்த அத்தெய்வம், மணிமேகலையை நினைவிழக் கச் செய்து, தன் ஆகத்தோடு அணைத்துக்கொண்டு, ஆகாய வழியேசென்று, மணிபல்லவத்தை அடைந்தது.

மணிமேகலையை மணிபல்லவத்திடை கொண்டு விட்ட மணிமேகலா தெய்வம், மீண்டும் உவவனம் வந்து. ஆங்குத் தன்னை மறந்து துயில் கொண்டிருந்த

சுதமதியை எழுப்பிற்று. துயில் நீத்தெழுந்த சுதமதி உடன் வந்த மணிமேகலை தன் அருகில் இல்லாமை கண்டு கலங்கினாள். அவ்வாறு கலங்குவாள், தன் முன் நிற்கும் மணிமேகலா தெய்வத்தின் திருவுருவுகண்டு நடுங்கினாள். சுதமதியின் நடுக்கநிலை கண்ட மணிமேகலா தெய்வம், "மகளே! அஞ்சேல். நான் மணிமேகலா தெய்வம். மணிபல்லவத்திடை வாழ்வேன். புகார் நகரத்துப் பெருவிழாவான இந்திரவிழாவைக் காண வந்தேன். வந்த இடத்தில் மணிமேகலைக்கு மாதவநெறி மேற்கொள்ளும் நல்வினை வாய்க்கப் பெற்றமை அறிந்தேன். அதனால், அவளை என் தெய்வத்திருவருளால் மணிபல்லவத்தீவில் கொண்டு வைத்துள்ளேன். ஆங்கு அவள் தன் பழம் பிறப்புணர்ந்த பெருமையளாகி, இற்றைக்கு ஏழாம்நாள் ஈங்கு வந்தடைவாள் வருவோள் தன் வடிவு கரந்து வருவள். எனினும் உன்னை மறவாள்; உனக்கு ஒளிந்து வாழாள். அவள் இப்பேருருட் புகும் அன்று ஈங்கு அரிய பல நிகழ்ச்சிகள் நிகழும். சுதமதி! நீ மாதவர் உறைவிடம் புகுந்து, என் வருகையையும் மகள் மாசிலாத் தவநெறி மேற்கொண்டதையும் மாதவிக்கு அறிவிப்பாயாக. அவள் என்னை அறிவாள். கடலிடையே வாழும் கடவுள் யான் என்பதைக் கோவலன் அவளுக்கு முன்னரே அறிவித்து, என் பெயரையே தன் மகளுக்குச் சூட்டியுள்ளான். பெயர் சூட்டிய அப்பெரு நாளன்று இரவில், மாதவி கனவில் தோன்றி, 'மாதவி! மாபெரும் தவக் கொடியை மகளாய்ப் பெறும்பேறு பெற்ற நீ வாழ்க' என வாழ்த்தியும் உள்ளேன். அதையும்

அவளுக்கு நினைவூட்டுவாயாக. நான் மணிபல்லவம் செல்கிறேன்'' என அறிவித்துவிட்டு, ஆகாயத்தில் எழுந்து மறைந்துவிட்டது.

சுதமதி தனித்து விடப்பட்டாள். அரசன் கோயிலில் நாழிகை அறிவார், நாழிகை உணர்த்த அவ்வப் போது எழுப்பும் அறிவிப்பொலியும், கூடங்களில் நிற்கும் யானைகளின் கூப்பீட்டு முழக்கமும், ஊர்க்காவலரின் துடியொலியும், கடற்கரைக்கண் வந்து நிற்கும் கலங்களில் பணிபுரிவார் கள்ளுண்டுக் களித்துப் பாடும் பாட்டொலியும், மகவீன்ற மகளிர் புனிறுதீரப் புனலாடு அரவமும், வேந்தன் வெற்றி விளங்க, சதுக்கப் பூதத்திற்குப் பலியிடும் வீரர்களின் ஆரவாரப் பேரொலியும் போலும் பற்பல ஒலிகள் ஒன்று கலந்து வந்து, அந்நள்ளிரவில் ஒலிக்கக்கேட்டு, உள்ளம் நடுங்கினாள். பின்னர் ஒருவாறு உள்ளம் தேறி மெல்ல எழுந்து, மணிமேகலா தெய்வம் கூறியவாறே வடபுலத்து வாயில் வழியே சென்று சக்கரவாளக் கோட்டத்தை அடைந்தாள்.

சக்கரவாளக்கோட்டம் புகுந்த சுதமதி ஆங்குச் சம்பாபதி கோயிலுக்கு அணித்தாக இருந்த ஊரம்பலத்துள் புகுந்து ஒருபால் அமர்ந்தாள். அப்போது, அவ்வம்பலத்தின் கீழ்ப்பால் தூணில் இடம்பெற்று வாழும் ஒரு பாவை, சுதமதி மயங்கி மருளும் வண்ணம்,

"இரவிவன்மன் என்பானது ஒப்பற்ற மகளாக விளங்கியவளே! குதிரைப் படையிற் சிறந்தோனாகிய துச்சயன் என்பவனின் மனைவியாக இருந்தவளே!

நெருங்கக் கட்டிய மலர் மாலையை அணிந்தோளான நின் தமக்கையான தாரை என்பவள் சாவை அடைய மயக்க முற்று, யானையின் முன்னர்ச் சென்று வீழ்ந்து நின்னு யிரையும் விட்டவளே! இக்காலத்தே காராளர் நிரம்பி யுள்ள சண்பை நகரத்துக் கௌசிகன் என்பவனின் மகளாகப் பிறந்தவளே! மாருத வேகன் என்பானோடு இந்நகரத்திற் புகுந்தவளே! முற்பிறவியில் நின் தமக்கை யாகிய தாரையென்பானோடு மீண்டும் இப்பிறவியிலும் ஒன்று கூடியவளே! வீரையாகிய சுதமதியே''

என்று, அவள் இப்பிறப்பு வரலாற்றோடு முற்பிறப்பு வரலாற்றையும் அறிந்தாற்போல் விளித்தது. பாவை வாய் திறந்து பேசுவதையும், அது தன் வரலாற்றினை அறிந்து உரைப்பதையும் கண்டு சுதமதி வியப்புற்றாள். வியப்பின் வழித்தோன்றி அச்சம் அவளைப் பற்றத் தலைப் பட்டது. அப்போது, அப்பாவை மீண்டும் அவளை விளித்து, ''போன பிறவியில் இலக்குமி எனும் பெயரோடு உனக்கு இளையளாய் விளங்கிய மணிமேகலை தன் பழம் பிறப்போடு உன் பழம் பிறப்பையும் அறிந்துகொண்டு, இற்றைக்கு ஏழாம்நாள் இடையிருள் யாமத்தில் வந்து சேர்வள்; வருந்தற்க'' என்று உரைத்தது.

கந்திற்பாவை கூறியன கேட்டு, சுதமதியுள்ளம் கலங்கி நடுங்கிற்று. அந்நிலையில் இருள் நீங்கிப் பொழுதும் புலர்ந்துவிட்டது. எங்கும் ஒளி பரந்தது. புகார் உயிர் பெற்று எழுந்து விட்டது. அம்பேறுண்ட மயிலேபோல் நடுங்கியவாறே; சுதமதி, மாநகர் வீதி

வழியே சென்று மாதவியை அடைந்தாள். இரவில் நிகழ்ந்தன அனைத்தையும் அவளுக்கு இயம்பினாள். மகள் மறைவு கேட்ட மாதவி தன்மணி இழந்த நாகம் போல் நிலைகுலைந்து வருந்தினாள். அவள் அவலநிலை கண்டு, உயிரிழந்த யாக்கைபோல் உணர்வற்றுப்போன சுதமதி, மாதவியின் மனத்துயர் போக்கும் மருந்தென, அவளை விட்டுப் பிரியாது வாழ்ந்திருந்தாள்.

சிலநாட்கள் சென்றன. மணிபல்லவம் சென்ற மணிமேகலை, உயிர்களை வருத்தும் உறுபசியைப் போக்க உணவளிக்கும் அமுதசுரபி எனும் அருங் கலம் பெற்றுப் புகார் நகர் வந்து சேர்ந்தாள். அவ ளாலும், அறவண அடிகளாலும் சுதமதி, தன் பழம் பிறப்பினை உணரும் பேறு பெற்றாள்.

அசோதர நகரத்து அரசனாகிய இரவிவன் மனுக்கு அமுதபதி வயிற்றில் பிறந்த மகளிர் மூவர். தாரை, வீரை, இலக்குமி என்பன அன்னார் பெயர்களாம். அவருள் மூத்தோர் இருவரும், அங்கநாட்டுக் கச்சய நகரை ஆண்டு கொண்டிருந்த துச்சயன் என்பான் ஒருவனை மணந்து மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர். ஒருநாள் அவ்வேந்தன் தேவியர் இருவரோடும் மலைவளம் காணச் சென்றான். சென்றவன், கங்கைக் கரையில் பாடி அமைத்து ஆங்கிருந்தான். அப்போது அறவண அடிகள் ஆங்கு வந்தார். வந்த முனிவரை வரவேற்று வழிபட்ட வேந்தன், "ஐயன்மீர்! இவண் வந்த நீவிர் யாவிர்? வந்த காரணம் யாதோ? அறியக் கூறுமின்" எனப் பணி வோடு வினவினான். அரசன் அன்போடு ஆற்றிய வழிபாட்டினை ஏற்றுக்கொண்ட அடிகளார், "அரசே! அண்மையில் உள்ள மலைமுடியில் புத்தன் திருவடித்

தாமரை பொறிக்கப் பெற்ற பீடிகையுளது. அப்பெருமையால் பாதபங்கயமலை எனப் பெயர் பெறும் அம்மலையை வலம் வந்து வணங்கும் விருப்புடையேன். மனைவியரோடு நீயும் வந்து வழிபடுக" எனக் கூறினர். அரசனும் அவ்வாறே தாரை வீரையாய மனைவியர் இருவரோடுஞ் சென்று மலையை வலம் வந்து வணங்கினன்.

சின்னாட்கள் சென்றன. ஒருநாள், வழக்கத்திற்கு மாறாக மதுவுண்ட வீரை, மதுமயக்கத்தால் மதிகெட்டு, மதங்கொண்ட யானை முன் வீழ்ந்தது, அதன் கால்களால் மிதியுண்டு உயிரிழந்து போனள். உடன் பிறந்தாளுக்கு நேர்ந்த கேட்டினைக் கண்டு கலங்கிய தாரை, அரண்மனையுள் வானளாவ உயர்ந்து விளங்கிய மாடத்து உச்சியினின்றும் வீழ்ந்து உயிரிழந்தாள். இவ்வகையால் அரசவாழ்விழந்து உயிர் நீத்த வீரையும் தாரையும் பாதபங்கய மலையை வலம் வந்து வணங்கிய நல்வினைப் பயத்தால், முறையே சுதமதியாகவும், மாதவியாகவும் காசிமா நகரிலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் வந்து பிறந்தனர். அந்நல்வினைப் பயனினலேயே, இப்பிறவியில் நாடிடைப்பட்டுத் தோன்றினும், இறுதியில் ஓரிடத்தே ஒன்று கூடினர். அந்நல்வினைப் பயனினலேயே, முற்பிறவியில் இலக்குமி என்பாளுக்குத் தமக்கையராய்ப் பிறந்தவர், இப்பிறவியில் அவ்விலக்குமியின் மறு பிறப்பாம் மணிமேகலைக்குத் தாயாராம் தகுதி பெற்றனர். தன் பழம் பிறப்புணர்த்தும் இவ்வரலாற்றினை அறிந்தமையால், சுதமதி, மாதவிபாலும், அவள் மகள் மணிமேகலை பாலும் பேரன்பு காட்டி வாழ்ந்திருந்தாள்.

சில நாட்கள் சென்றன. மணிமேகலை ஊரம்பலத்தி லிருந்தவாறே அமுதசுரபியால் உயிர்களுக்கு உணவூட்டி வந்தாள். அவள் மீது கொண்ட காதலை மறக்கமாட்டாத மன்னன் மகன் அவள் பின் திரியத் தொடங்கினான். அதனால் விஞ்சயன் ஒருவனால் வாளால் வெட்டுண்டு வீழ்ந்து இறந்தான். மகன் கொலையுண்டது. மணிமேகலை யால் என மயங்க வுணர்ந்த மன்னன் அவளைச் சிறையி லடைத்துச் சிறுமை செய்தான். அரசன் தேவி அவளைச் சிறை வீடு செய்து தன்பால் கொண்டு சென்று கொடுமை பல விளைத்தாள். மாதவி அஃதறிந்து வருந்தினாள். மணிமேகலைக்கு நேர்ந்த இடையூற்றையும் அதனால் மாதவி படும் துயரையும் கண்ணுற்ற சுதமதி, அரசமாதேவிக்கு அறிவுரை வழங்கி மணிமேகலையை மீட்டல் வேண்டும் எனத் துணிந்தாள். துணிந்தவள், அதைச் செய்து முடிக்க வல்லவர் அறவண வடிகளே என உணர்ந்து, மாதவியோடும், அடிகளாரோடும் மன்னன் மனைக்குச் சென்றாள். அரசியார்க்கு அறவண அடிகள், அரிய பல அறிவுரை கூறினார். அதன் விளை வாய் மணிமேகலைக்கு விடுதலை கிடைத்தது. மணி மேகலைக்கு மன்னன் மகனால் நேர இருந்த இழுக்கினை முன்னம் போக்கிய சுதமதி, அவளுக்கு, மன்னன் மனை வியால் நேர்ந்த கேட்டினையும் போக்கிப் பெருந்துணை புரிந்தாள். நிற்க.

சிறைவீடு பெற்ற மணிமேகலை, அந்நிலையில் அந் நகரில் வாழ்ந்திருத்தல் சிறப்பளிக்காது என உணர்ந்து ஆபுத்திரன் இருந்து ஆளும் நாகபுரத்திற்குச் சென்றாள். மணிமேகலை பிரிவால், மாதவியும் சுதமதியும் வருந்தி வாழ்ந்திருந்தனர். நாட்கள் சில சென்றன. மாவண் கிள்ளி, நாகநாட்டு அரசன் மகள் பீலிவளையால் பிறந்த

மகனை, அவன் கலம் ஊர்ந்து காவிரிப்பூம்பட்டினம் வருங்கால், வங்கம் கவிழ்ந்து கடல்வாய்ப்பட்டு மறைந்து போனான் என்ற செய்தியைக் கேட்டான். அவன் மனம் மாளாத்துயரில் ஆழ்ந்துவிட்டது. ஆண்டுதோறும் வழக்கமாகக் கொண்டாடும் இந்திர விழாவையும் அவன் மறந்துவிட்டான். அதனால் சினம் கொண்ட மணிமேகலா தெய்வம், 'காவிரிபூம்பட்டினத்தைக் கடல் கொள்க' எனச் சாபம் இட்டாள். அவ்வாறே புகார்ப் பெருநகர் கடல் வயிறு புகுந்தது. மக்கள் அரண்மிக்க இடந்தேடி அலைந்தனர். அக்காலை அந்நகரில் வாழ்ந்திருந்த சுதமதி, அறவண அடிகளோடும் ஆருயிர்த்தோழி மாதவியோடும் வஞ்சிமா நகரடைந்து வாழ்ந்திருந்தாள்.

பதியெழுவறியாப் பழங்குடிகள் பல்கிய பெருமையுடையது என்ற பாராட்டினுக்குரிய புகார், கடலில் மூழ்கி அழிந்து விட்டது. கடல் நீர் பெருகிக் கேடு விளைக்கும் காலத்தில் தம்மைக் காத்துக்கொள்ள விரைவில் அறவண அடிகளும், மாதவியும், சுதமதியும் அண்மையில் இருந்த வஞ்சி மாநகர்க்கு வந்து சேர்ந்தனர். ஆங்குத், தம் உயிருக்கும் உடைமைக்கும் நேர இருந்த கேட்டினைப் போக்கிக் கொண்ட பின்னர், மணிமேகலை குறித்து எண்ணத் தொடங்கினர். மன மாசு கெடுக்கும் நல்ல உண்மைகளை மணிமேகலை அறிய வேண்டுமாயின், அதற்கு ஏற்ற இடம் காஞ்சி மாநகரே ஆகும். காஞ்சி பல சமயத்தவரின் வாழிடம். சமய நெறி யுணர்ந்த பேராசிரியர் பலர் வாழும் இடம் அக்காஞ்சி. அவ்வாசிரியன்மார் அனைவரையும் கண்டு அவர் கூறும் சமய உண்மைகளைக் கேட்ட பின்னரே உண்மைச் சமயம் எது என்பதை உள்ளம் உணரும். ஆதலின் மணிமேகலைக்கு உண்மை

யறத்தை யுணர்த்த வேண்டுமாயின், அதைக் காஞ்சி யிலேயே செய்தல் வேண்டும் என்ற அறவண வடிகளின் கருத்தினை இருவரும் ஏற்றனர். உடனே, மூவரும் காஞ்சி நகரடைந்து மணிமேகலையின் வருகையை எதிர் நோக்கி வாழ்ந்திருந்தனர்.

ஆபுத்திரன் நாட்டிற்கும், மணிபல்லவத் தீவிற்கும் சென்ற மணிமேகலை, தமிழகத்திற்குத் தண்ணீரால் நேர்ந்த கேட்டினைக்கேட்டு வருந்தினள். தாயும், தாய் நிகர் சுதமதியும், ஆசிரியப் பெருமகனும் வஞ்சி சென்று வாழ்கின்றனர் என அறிந்து ஆங்குச் சென்றாள். ஆங்குச் சென்ற காலை மூவரும் காஞ்சி சென்றுவிட்டமை யறிந்து ஆங்கடைந்தாள். காஞ்சிக் காவலன் வேண்டுகோட்கு இணங்கி, அமுதசுரபியால் அந்நாட்டு மக்களைப் பற்றி வருத்திய பசிப்பிணியைப் போக்கியவாறே, அரசன் கட்டிய அறச்சாலையில் வாழ்ந்திருந்தாள். அச் செய்தி கேட்ட சுதமதி, அறவண அடிகளோடும், மாதவியோடும் அவ்வறச்சாலை யடைந்து மணிமேகலையைக் கண்ணுற்று மகிழ்ந்து மன நிறைவுற்றாள். மணிமேகலையின் மனப் பக்குவம் அறிந்து, அவளுக்கு அறவண அடிகள் உணர்த்திய உண்மை உரைகளைச் சுதமதியும் உடனி ருந்து கேட்டு உயர்வடைந்தாள். உண்மை நெறி உணர்த்தப் பெற்ற மணிமேகலை, பின்னர் பல சமயத் தலைவர்களையும் கண்டு, அவர்பால் சமய உண்மைகளைக் கேட்டு உணர்ந்ததையும், பின்னர் பவத்திறம் அறவேண்டிய பெருந் தவநெறி மேற்கொண்ட பெருமை மிகு செயலையும் கண்டு உள்ளம் பூரித்தாள். மலர் பறிக்கச் சென்ற மணிமேகலைக்குத் துணை புரிய, அன்று அவளுடன் தான் சென்றதினாலேயே, மணிமேகலை, இன்று மாண்பு மிகு பெரியோளாயினள் என்ற பெருமிதவுணர்வால்

அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் ஊற்றெடுத்துப் பாய்ந்தது.

காமுகன் வலைபட்டுக் காவிரிப்பூம்பட்டினம் வந்து சேர்ந்த சுதமதி எண்ணிலா இடையூறுகளுக்கு உள்ளா னாள். அதனால் உலகியல்பை உள்ளவாறு உணர்ந்து உரம்மிகு உள்ளம் பெற்றாள். அரசனுக்கும் அறம் உரைக்கும் அறிவு வளம் வாய்க்கப் பெற்றாள். மணி மேகலா தெய்வமும் மதிக்கும் மாண்புடையளானாள், கந்திற்பாவையின் கருத்தினைக்கவரும் கருவிலே வாய்ந்த திருவுடையளானாள். அரசன் மாதேவியால் அறவண அடிகளோடும் மாதவியோடும் ஒப்ப மதிக்கும் உயர் வுடையளானாள். இறுதியில், அறவண அடிகளால் மணிமேகலைக்கு உணர்த்திய உயர்த்திய உண்மைகளை உடனிருந்து கேட்கும் பெரும்பேறு பெற்ற பெருமையளா யினாள்.

மாதவிக்குத் தோழியர் இருவர். ஒருத்தி வயந்த மாலை; மற்றொருத்தி சுதமதி. மாதவியின் தோழியர் என்ற உரிமையால் இருவரும் ஒத்த நிலையினர் என்று லும், மாதவியின் மாலையை வீதியில் விலை கூறி விற்று, மாதவிக்கு விலைமாது எனும் பெரும்பழியைச் சூட்டிய இழிவும், பிழை நெறியுணர்ந்து தவநெறி மேற்கொண்ட மாதவி செயல் மாண்புடைத்து என மதிக்காது, அவளை யும் அவள் மகளையும் மீண்டும் பரத்தையர் ஒழுக்கத்தில் புகுத்த, மாதவியின் தாய் சித்ராபதிக்குத் துணையாய்ப் பெரும்பாடுபட்ட பழியும் உடையளாய், உயர்ந்தோர் உள்ளத்தில் இடம்பெறும் வாய்ப்பினை இழந்துவிட்ட வயந்தமாலை போலாகாது, அம்மாதவியின் தவவொழுக்கத் திற்கு உரம் ஊட்டும் நல்ல துணையாகியும். அவள் மகள்

மணிமேகலை, காமவெறி கொண்டு அலைந்த காவலன் மகன் கைப்பட்டுக் கெட்டுப் போகாவண்ணம் காத்து, அவளைத் துறவு மேற்கொண்ட தூயோளாக்கும் தூண்டு கோலாகியும், அறவண அடிகளும் மதிக்கும் அறவொழுக்க நெறியினளாகியும் நீள் புகழ்பெற்ற பெறற்கரும் பேறுடையளானாள் சுதமதி.

முற்பிறவியில், மணிமேகலைக்குத் தமக்கையாய்ப் பிறந்த சுதமதி, இப்பிறவியில் பெற்றதானும் பெரிய தாயாய, முன்னவள் அவள் உடலைப் பேண, இவள் அவள் உயிரைப்பேணிப் பெருமையுற்றாள். வாழ்க அவ் வாரணவாசியாள்!

# 6. விசாகை

அகத்தியரை வேண்டிக் காவிரியாற்றைக் கொண்டு வந்த காந்தன் எனும் சோணாட்டுக் காவலன், வேந்தர் குலத்தை வேரறுப்பேன் என வஞ்சினம் உரைத்துவரும் பரசுராமனுக்கு அஞ்சி கன்னித் தெய்வத்தின் கட்டளை யேற்று ஆட்சிப் பொறுப்பைத், தன் காதற்கணிகையின் மகன் ககந்தன்பால் ஒப்படைத்து மறைந்துவிட்டான். காவிரிப்பூம்பட்டினத்தைக் ககந்தன் காத்துவந்தான். அக்காலத்தில் அவ்வூரில், வேந்தரும் மருளும் வளங் கொழிக்கும் வணிகர் குடியில் தருமதத்தன் எனும் இளைஞன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் மாமனுக்கு விசாகை எனும் பெயர்பூண்ட மகள் ஒருத்தி யிருந்தாள். விசாகை வனப்பில் மிகுந்தவள்; அன்பையும் அருளையும் அள்ளி வீசும் அவள் கண்ணொளி.

தருமதத்தனும், விசாகையும் ஒத்த பருவத்தினர்; ஒருவரையொருவர் மணக்கும் முறைமையும் உடையவர்; மேலும் உளம் ஒன்று உடல் இரண்டு என உரைக்குமாறு ஒன்றுகூடி விளையாடும் வழக்கம் கொண்டிருந்தனர். அவர் அழகுத் திருவுருவம் அவ்வூரார் கண்களைக் கவர்ந்தது. அதன் விளைவு, "தருமதத்தனும் விசாகையும் கன்னிப் பருவத்தைக் கடந்தனர்; காதல் மணங்கொண்டு களவின்பத்தில் ஆழ்ந்துவிட்டனர்" என ஊரில் அலர் எழுந்து பரவிற்று.

தன் மனத்தூய்மைக்கு மாசுகற்பித்து ஊரார் உரைப் பதை விசாகை கேட்டாள். மானமே உயிர் என மதிக்கும் மாண்பு மிகுந்தவள் அம்மங்கை நல்லாள். அவளால்

அவ்வலருரையைக் கேட்டு வாளாயிருக்க முடியவில்லை; ஓவியத்து எழுதுவொண்ணு வுருவத்தினளாய் அவள் அவ்வுரை கேட்டதுமே வீட்டைவிட்டு வெளிப்பட்டாள்; விரைந்து ஊரம்பலம் அடைந்தாள்; கந்திற்பாவை முன் சென்ருள். "வருபொருள் உரைக்கும் பெரும் புகழ்மிக்க பாவாய்! என் ஒழுக்கத்தை உலகோர் பழிக்கின்றனர்; நான் அதைப்பொறேன்; எனக்கு நேர்ந்த அவ்விழிவைப் போக்குதல் உன் கடன். பழி போக்கிப் பேணும் வண்ணம், பாவாய்! நின்னைப் பணிகிறேன்; பரவுகிறேன்" என முறையிட்டு நின்ருள்.

விசாகையின் வேண்டுகோள் கந்திற்பாவையின் காதுகளிற் சென்று பாய்ந்தது. உடனே அப்பாவை வாய் திறந்து, விசாகையைப் பின்தொடர்ந்து வந்து ஊரம்பலத்தின்முன் குழுமிநிற்கும் மாநகர்மக்கள் கேட்கு மாறு, "மாநகர் உள்ளீர், இம்மங்கை மனமாசுடையாளல் லள்; மாருக, மழையையும் மண்ணுலகிற்குக் கொண்டு வரும் மாபெரும் கற்புடைய கன்னியாவள்" எனத் தன் நாவால், அவளை நாவாரப் புகழ்ந்தது. அதுகேட்டு அவள் பால் கொண்ட ஐயம் நீங்கி அவளைப் போற்றினர் அவ் ஆூரார்.

பாவையால் பழிநீங்கப்பெற்ற விசாகை, பலர் சூழ்ந்து வர, தன் மனைநோக்கி மாநகர் வீதியில் சென்று கொண் டிருந்தாள். அப்போது அவள்முன் வந்த மன்னனின் மூத்தமகன் அவளைக் கண்டான். அவன் ஒழுக்கம் கெட்டவன் என ஊரார் பண்டு உரைத்த சொல்லைக் கேட்டவன் அவன்; ஊரம்பலம் ஏறி, தான் உள்மாசு அற்றவள் என்பதை ஊரறிய உணர்த்தி வருகிருள் என்பதை அவன் அறியான். மேலும் அவன் உள்ளம்

ஆசைக் கடலில் ஆழ்ந்து கருத்திழந்து கிடந்தது! அதனால் விசாகையை, வனப்புமிக்க அவள் வடிவைக் கண்ணுற்றதும், காவலன் மகனுக்கு வெறி தலைக்கேறி விட்டது. அவளை அணுகினான். "மலர்மாலை சூட்டி மணங்கொள்வதும், ஒரு மணமுறையாம்; பண்டையோர் பாராட்டிய பெருமையும் அம் முறைக்கே உண்டு; விசாகை! அம்முறையில் மணந்துகொள்ள விரும்புகிறேன்" எனக் கூறியவாறே, அவள் கழுத்தில் சூட்ட, கறுத்துத் திரண்ட தன் குடுமியில் கிடந்த மலர் மாலையைக் கழற்றக் கைகளைக் கொண்டு சென்றான். அவ்வளவே. சென்ற கைகள் சென்றனவே. எவ்வளவு முயன்றும், எத்தனை முறை முயன்றும், எடுக்க முடியவில்லை; குடுமியோடு குடுமியாக ஒட்டிக்கொண்டன. செய்தி ஊர்முற்றும் சென்று பரவிற்று. காவலன் அதைக் கேட்டான். தன் மகனின் ஒழுக்கக்கேட்டை உணர்ந்தான். மகன் படும் துயர் மன்னவன் மனத்தை உறுத்தவில்லை. மங்கையொருத்திக்கு மனத்துயர் அளித்து, தன் ஆட்சிக்கு மாசுண்டாக்கிய மாபெரும் பழியே அவன் மனத்திரையில் படிந்தது. ஊர்க்காவலரை அனுப்பி மகனைக் கொலைக் களத்திற்குக் கொண்டு வாளால் வெட்டி வீழ்த்தினான்.

மாநகர் மக்கள் கற்பித்துக்கூறிய மாசுரை கேட்டே மனங்கலங்கிய விசாகை, மன்னன் மகனின் செயல் கண்டு மேலும் கலங்கினாள்; அவள் மனம் மணவாழ்க்கையை வெறுத்தது. தெய்வம் துணைவந்திலதாயின், என்பால் இவ்வூரார் கொண்ட மாசு தீர்ந்திராது. ஆகவே மணவாழ்க்கை வேண்டேன் என மனத்தில் உறுதி பூண்டாள். பெற்றுப் பேணி வளர்த்த தாயைப் பணிந்தாள். "தாயே! மைத்துனனை மணந்து மணவாழ்க்கையேற்று

உனக்கு மனமகிழ்ச்சி அளிக்கும் பேறு எனக்கு இப்பிறவியில் வாய்த்திலது. இப்பிறவியில் இவனை மணவேன்; மறுபிறப்பில் மணந்து மகிழ்வேன்” என உரைத்தாள். உரைத்ததோடு நில்லாது, அன்றே கன்னித்தவம் மேற்கொண்டு விட்டாள்.

வெறுத்து அறம் நோற்கும் விசாகையின் முடிவு, தருமதத்தனுக்குத் தாங்கமாட்டா மனத்துயர் அளித்தது. தன் காதற்கோட்டை தகர்ந்துவிட்டது கண்டு கலங்கிக் கண்ணீருகுத்தான். காதலியைக் காணமாட்டாது காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ அவன் விரும்பவில்லை. அவ்வூர் வாழ்க்கையையே வெறுத்துவிட்டான் அவன். பிறந்து வளர்ந்து விளையாடிப் பேரின்பம் நுகர்ந்த மாநகரை மறந்து மதுரை செல்லத் துணிந்தான். புகார் நகரைவிட்டு நீங்குமுன், ஊரம்பலம் அடைந்து, தன் காதலிக்கு நேர்ந்த களங்கத்தைக் களைந்த கந்திற்பாவையை வணங்கி வாழ்த்தி விடைகொண்டான். பின்னர்ப் பெற்றதாயோடும், தந்தையோடும் புகார்நகரை வலம் வந்து வாயில் கடந்து வெளிப்பட்டான்.

மூவரும் மதுரை அடைந்தனர். மதுரை மாநகரத்து மங்கையருள், மனம் விரும்பும் ஒருத்தியை மணங்கொள்வான் மகன் என எண்ணி, அதற்காம் காலத்தை எதிர் நோக்கியிருந்தனர், தருமதத்தன் தாயும் தந்தையும். ஆனால் அவன் உள்ளம், அவன் காதலியின் நினைவில் நிலைபெற்றிருந்தது. அவள் விரித்த பூங்குழலின் வனப்பில் வேட்கையுற்றுப்போன அவ்வுள்ளத்தை வேறு ஒருத்திபால் ஒப்படைத்தல் அவனால் இயலாதாயிற்று; இப்பிறவியில் விசாகையை அல்லது வேறு மகளிரை மனத்தாலும் தீண்டேன் என உறுதி பூண்டான். காதலை

மறந்தான்; கடமையில் ஆழ்ந்துவிட்டான். தன்குல வொழுக்கையொட்டி வாணிகவாழ்க்கையை மேற்கொண் டான். கொள்வது மிகையும் கொடுப்பது குறையும் ஆகாமல், தன் பொருளையும் பிறர் பொருளையும் ஒப்ப மதித்து வாணிகம் புரிந்தான்; அவன் வாழ்வில் வளம் கொழித்தது. மதுரைப் பேரரசின் மன்னர் மன்னனும் மதிக்கும் மாநிதிக்குரியனானான். தருமதத்தனின் வாணிக அறம் பிறழா வாழ்வும், வற்றாப் பெருநிதியும் கண்டு அரசன் அவன்பால் அன்புகொண்டான். அரசவைக்கு அழைத்து எட்டி எனும் பட்டமும், அதற்குரிய எட்டிப் பூவும் அளித்துப் பெருமை செய்தான்.

வாணிகவாழ்வில், அதன் வளர்ச்சியில் கருத்துடைய னாய்த், தருமதத்தன் வாழ்நாளைக் கழித்து வந்தான். அவன் வாழ்நாட்காலத்தில் அறுபது ஆண்டுகள் கழிந்து விட்டன. ஒருநாள் அவன் மனை புகுந்த அந்தணன் ஒருவன், தருமதத்தன் மனை வாழ்க்கைதரும் மாட்சி யிழந்தவனாதல் அறிந்தான். வான்நிதி படைத்து, வரையாது வழங்கி அறம் பல ஆற்றும் தருமதத்தனுக்கு மனைக்குரிய மங்கலம் இன்மை அறிந்து மனங் கலங்கி, "மாநிதிக் கிழவா! வாழ்க்கைத்துணை இன்றி, நீ ஆற்றும் பேரறம் எண்ணிலாதன ஆயினும் அவை தமக்குரிய பயனை உனக்குத் தாரா; பத்தினி இல்லோர் பல அறம் புரியினும், புத்தேள் உலகம் புகார்; ஆகவே கழிந்ததை மறந்து, காவிரிபூம்பட்டினத்திற்கு இப்போதே விரைந்து சென்று, விசாகையை வரைந்து வான்புகழ் பெறுவாயாக" எனக்கூறி, மனை வாழ்க்கையின் மாண்பினை அவன் உளம்கொளச் செய்தான்.

அந்தணன் கூறிய அறிவுரை, தருமதத்தனின் அகத் திருளை அகற்றியது. அவன் அன்றே மதுரை நீங்கி,

தன் மனங்கவர்ந்த விசாகை இருந்து வாழும் புகார் அடைந்தான். அன்று சென்ற அத்தான் பிறந்த பேரூர்க்கு மீண்டான் என்பதை விசாகை அறிந்தாள். கன்னி மாடத்தை விட்டு வெளிவந்து அவனை வரவேற்றாள். தவவாழ்க்கையால் அவள் உள்ளம் தூய்மையடைந்துள்ளது. அறனல்லன அறியாநெறி முறையால் அவன் உள்ளமும் தூய்மை வாய்ந்து திகழ்கிறது. இந்நிலையில், ஒருவரையொருவர் காண்பதைக்கண்டு உரையாடுவதை உலகோர் பழியார் என உணர்ந்தாள் விசாகை அதனால் பலரும் காணத், தருமதத்தனைச் சென்று கண்டாள். அடையாளம் தெரியாதவாறு ஆண்டால் முதிர்ந்த அவன் உருவைக் கண்ணுற்றாள். பின்னர் அவன் உட்கருத்தை அவன் உரைக்க உணர்ந்தாள். உடனே, ''அன்ப! அன்று, ஒருவரையொருவர் கண்டு, காதல் கொண்டு கருத்திழந்து போனதற்குக் காரணமாயிருந்த நம் கவின், இன்று நம்மைவிட்டு அகன்று விட்டது. ஒருவரை யொருவர் கண்டு கொள்ளாவாறு, நம் உருவம் மாறுபட்டுவிட்டது. அறுபது ஆண்டுகளைக் கழித்துவிட்டாய் நீ; நறுமணம் வீச, ஐவகை வனப்பும் விளங்க வாரி விடப்பெற்ற என் கூந்தல் நரைத்துவிட்டது. இளமை எங்கோ சென்று மறைந்தது. இன்பவுணர்வுகளுக்கு உள்ளத்தில் இடம் இல்லை. ஆகவே, அன்ப! நின்வாழ்க்கைத் துணையாகி உன் வேட்கையை நிறைவேற்றல் இப் பிறப்பில் இயலாது. வரும் பிறவியில் நின் அடித்தொழில் கேட்கும் அன்புடையளாவேன். அன்ப! இளமை நில்லாது; யாக்கை நிலையாது; வற்றாப் பெருநிதி என வாயாரப் போற்றப் பெறும் வான் நிதியும் நில்லாது; புத்தேள் உலக இன்பத்தைப் புதல்வர்களும் தரவல்ல ரல்லர். அதை அறம் ஒன்றே அளிக்கவல்லது. அதுவொன்றே நிலைபேறுடையது. வரும் பிறவிக்கு

வழித்துணையாவதும் அதுவே. ஆகவே, அன்றறிவாம் என்னாது அறம் செய்யும் ஆக்கவழியில் செல்லுக நின் உள்ளம்'' என உரைத்தாள்.

மனம் தெளிய, விசாகை உரைத்த மாற்றங்களைக் கேட்டான் தருமதத்தன். அவன் மனத்தைப் பற்றி வருத்திய மனவேட்கை அகன்றது. அறத்தாற்றில் சென்றது அவன் உள்ளம்; உடன் கொணர்ந்த வான் பொருளை விசாகைபால் ஒப்படைத்தான். இருவரும் கூடி, எண்ணிலாப் பேரறங்கள் பல புரிந்து பாரோர் போற்றப் பெருவாழ்வு வாழ்ந்தனர்.

மானமே பெரிதென மதித்து, மணத்தை வெறுத்து, இளமைப் பருவத்து இன்பவுணர்வை அடக்கித் தன்னைக் காத்துக் கொண்டதோடு, ஆண்டு அறுபதினுக்கு மேற்பட்டும், ஆசைகளை அடக்கமாட்டாது தன்னை அடைந்து தன் பழங் காதலனைப் பற்றி வருத்தும் பாசவலைகளை அறுத்து, அவனையும் காத்து, தனக்கும், தன் கணவனல்லனாயினும் தன்னை மணக்கும் உரிமையும் உள்ளமும் உடையவனாய தருமதத்தனுக்கும் நேர விருந்த பழியுரைகளைப் போக்கிப் புகழை நிலைநாட்டி, "தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்ற வள்ளுவர் வகுத்த அறத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் வாழ்ந்து காட்டிய விசாகை வாழ்க! அவள் புகழ் பாரெங்கும் பரவுக!

## பயிற்சி

அடியிற் கொடுத்துள்ள தலைப்புக்களில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் கதைகள், கட்டுரைகள் எழுதுக.

1. ஆதிரை நல்லாளின் கற்புச் சிறப்பு
2. சாதுவனும் நாகர் தலைவனும்
3. ஆதிரை இட்ட அமுதும் அமுத சுரபியும்
4. ஆபுத்திரனும் அந்தணரும்
5. ஆபுத்திரனும் அமுதசுரபியும்
6. புண்ணியராசனும் மணிபல்லவமும்
7. இரவிவன்மன் மகள் இலக்குமியும் மாதவி மகள் மணிமேகலையும்
8. காயசண்டிகையின் யானைத்தீப் பெரும் பசி
9. சுதமதியும் மணிமேகலையும்
10. உவவனஞ் சென்ற மணிமேகலை
11. மணிமேகலையும் உதயகுமரனும்
12. மணிமேகலா தெய்வத்தின் கதை
13. விசாகையின் கன்னி நோன்பு